பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 10 ஞாயிற்றுக்கிழமை (23.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 118

# மன்னாரில் பல முனைகளில் 13 மணி நேரமாக கடுஞ்சமர்!

## 55 படையினர் பலி - புலிகள் தரப்பு அறிவிப்பு
## 22 புலிகள் பலி என்கிறது இராணுவத் தரப்பு

மன்னார்,மார்ச்23

மன்னார் உயிலங்குளத்துக்கும் அடம்பனுக்கும் இடையில் உள்ள பாலைக்குழி, இத்திக்கண்டல், பறையகுளம், கறுக்காய்க்குளம் உட்பட பல முனைகளில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே பதின்மூன்றரை மணி நேரமாகக் கடுஞ்சமர் நடைபெற்றது.

இராணுவத்தினரின் முன்னேறும் பாரிய முயற்சியை தாம் முறியடித்ததாகவும் 55 படையினர் கொல்லப்பட்டு 120 இற்கும் அதிகமானோர் காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

நேற்றைய கடும் சண்டையில் 22 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதுடன் 26 பேர் காய முற்றதாகவும் இராணுவத் தரப்பில் கூறப்பட்டது.

விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் பாலைக்குழி, இத்திகண்டல் பகுதிகளில் இரண்டு முனைகளில் ஸ்ரீலங்காப் படையினர் பெரும் எடுப்பிலான தாக்குதலை மேற்கொண்டனர்.

பல்குழல் எறிகணைகள், ஆட்லறித் தாக்குதல்கள், மோட்டார் தாக்குதல்கள் என்பவற்றின் மிகச் செறிவான சூட்டாதரவுடன் படையினர் முன்நகர்வுத் தாக்குதலை நடத்தினர்.

படையினரால் மிகச் செறிவாக - மிக அதிகளவில் - எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## புதுவித கடலடித் தாக்குதலா? கடற்கண்ணியுடன் மோதியதா?
# நாயாறில் டோறா மூழ்கடிப்பு!
## 14 பேர் பலி - புலிகள் தரப்பு அறிவிப்பு
## 10 பேரைக் காணவில்லை என்கிறது கடற்படை

முல்லைத்தீவு,மார்ச்23

முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் நேற்று அதிகாலை தாம் நடத்திய புதிய விதமான கடலடித் தாக்குதலில் டோறாப் பீரங்கிப் படகு மூழ்கடிக்கப்பட்டு 14 படையினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, கடற்புலிகளின் கடற்கண்ணித் தாக்குதலில் உள்ளூர்த் தயாரிப்பான பி 438 என்ற பெயரிடப்பட்ட அதிவேகத் தாக்குதல் பீரங்கிப் படகு மூழ்கிவிட்டதாவும் அதிலிருந்த 10 பேரைக் காணவில்லை என்றும் ஓர் அதிகாரி உட்பட ஆறுபேர் மீட்கப்பட்டனர் என்றும் படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

டோறாப் படகு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை கடலுக்கு அடியில் பாவிக்கப்படும் ஆயுதங்களாலோ அல்லது கடற்கண்ணியாலோ தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று கடற்படையினரை ஆதாரம் காட்டி இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாயாறு கடற்பரப்பில் நேற்று அதிகாலை 2 மணிக்கு கடற்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கும் இடையில் மோதல் தொடங்கியது. இம்மோதல் அதிகாலை 2.45 மணி வரை நீடித்தது. மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அதிகாலை 2.10 மணியளவில் கடற்படையின் அதிவேக டோறா பீரங்கிப் படகு ஒன்று விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்று விமானத் தாக்குதல்கள்

கொழும்பு,மார்ச்.23

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு இடங்களில் கடற்புலிகளின் தளங்கள் மீது விமானப்படையின் விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தின. ஊடகத்தகவல் நிலையம் இதனைத் தெரிவித்தது.

நாயாறு வாவிக்கு வடக்கே அமைந்துள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி நேற்று யாழ். வந்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்தார்

கொழும்பு,மார்ச்.23

யாழ். மாவட்டத்தில் முகமாலை மற்றும் நாகர்கோயில் முன்னரங்கப் பகுதிகளில் மோதல்கள் தீவிரமாகியுள்ள நிலையில், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத்பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அவரது விஜயம் தொடர்பாக இராணுவத் தரப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை நேரில் கண்டறிந்து மறுபரிசீலனை செய்யும் நோக்குடன் இராணுவத் தளபதி அங்கு விஜயம் மேற்கொண்டார். (16ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை ஆர்ப்பாட்டத்தில் நெடுமாறன் மற்றும் 165 பேர் கைது!

சென்னை,மார்ச்23

இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி வழங்குவதைக் கண்டித்து நேற்றுப் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழ் தேசிய முன்னணித் தலைவர் பி.நெடுமாறன் உட்பட 165 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸ் அனுமதி பெறாமலே சென்னையில் உள்ள ஞாபகார்த்த மண்டபத்தில் தமிழ்த் தேசிய முன்னணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போதே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் 15 பெண்களும் அடங்குவர்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் கண்டிந்தும் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (அ-1)

## திசநாயகத்தின் மனைவிக்கு தொலைபேசி மிரட்டல்

கொழும்பு,மார்ச்21

பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகையாளர் திசநாயக்கத்தின் மனைவிக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி மூலம் இந்த மிரட்டல் விடுக்கப்படட்டதாக அவர் சுதந்திர ஊடக அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்ட வேளை சித்திரவதைக்கு உள்ளானதாகத் தெரிவித்து மனித உரிமை மீறல் வழக்கு ஒன்று திசநாயகம் சார்பாக நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது தெரிந்ததே. (அ-1)

## சுன்னாகத்தில் நேற்றுக் காலை குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,மார்ச்22

சுன்னாகம் - கந்தரோடை வீதியில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கந்தரோடை, பூதவராயர் கோயிலடியைச் சேர்ந்த பதி என அழைக்கப்படும் தர்மராஜா ரகுபதி (வயது 34) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டவரா வார்.

சுன்னாகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்றவர்கள், வழிமறித்துச்

(16ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விசேட தேவையுடைய இருவருக்கு சக்கர நாற்காலிகள்

யாழ்ப்பாணம், மார்ச்23

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவையுடையோர் இருவருக்கு வீட்டுக்குள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகள் வழங்கப்படவுள்ளன.

மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இந்த சக்கர நாற்காலிகளை தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதி மூன்றாம் ஒழுங்கையைச் சேர்ந்த இராமலிங்களம் மனோன்மணி, கைதடி, கோயிலாக்கண்டி மத்தியைச் சேர்ந்த இராசையா செல்வரத்தினம் ஆகியோருக்கு இவை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)


## பாராட்டுகின்றோம்




## சுப்பிரமணியம் ஸ்தபதி பாஸ்கரன் ஸ்தபதி

(479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

அவர்களுக்கு கிராமிய கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சும், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து 2006ஆம் ஆண்டு நடத்திய சிறுகைத் தொழில் முயற்சியாளர்களுக்கான ஜனாதிபதி விருது

யாழ்.மாவட்டத்தில் ''ஏனைய உற்பத்தி பொருள்களும் சேவைகளும்'' என்ற துறையில் விருது மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

*மதிவதனி சிற்பாலயம்,*
*14, B.A. தம்பி லேன்,*
*யாழ்ப்பாணம்.* (72275)

சகோதரன்
சு.சரவணபவன்
(ஆச்சாரி)



## துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள


WESTERN UNION

## திருமுருகன் கொம் நெற்

259. கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)


## மரண அறிவித்தல்

### திருமதி அனுராதா நந்தகுமார் (எழுவைதீவு)



எழுவைதீவு, முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது 135, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுராதா நந்தகுமார் நேற்று (22.03.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நந்தகுமாரின் அன்பு மனைவியும், வினோதரனின் (விஷ்ணு) அன்புத் தாயாரும், நவரத்தினராசா - மகேஸ்வரி தம்பதியரின் ஏகபுதல்வியும், வேல்ணை மேற்கு அருட்சிவம் (பாக்கியநாதன்) - மகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், அகிலன் (காரைநகர் பிரதேச சபை), தயாளன் (பேபி நீட்ஸ், மயூரேசன் சில்க்ஸ், நவீன் சில்க் புடைவையகம்), கயன் ஆகியோரின் சகோதரியும், சிவகுமார், செல்வகுமார், கிஸ்ணகுமார், உதயகுமார், கலைச்செல்வி, யோக ராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ராசலட்சுமி, தேவிகா, நந்தினி, பிரதீபன் ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2008) ஞாயிற் றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*135, இராசவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (72278)

தகவல்:
அ.நந்தகுமார்
(கணவன்)

## சில்லாலையில் அனுமதியின்றி பனை மரங்கள் தறிப்பு

வலி.தென்மேற்கு, மார்ச்23

சில்லாலை கலட்டி கம்பத்தடி-மாதகல் வாய்க்கால் பகுதியில் ஆள்கள் இல்லாத காணிகளிலுள்ள பனை மரங்கள்இனந் தெரியாத சிலரால் தறித்துக் கொண்டு செல்லப்படுவதாக முறையிடப்படுகின்றது.

மாலை வேளைகளில் அதாவது இரவு7 மணிக்குப் பின்னர் பனை மரங்கள் தறிக்கப்பட்டு உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றப்பட்டு ஒழுங்கைகள் வழியாக தூர இடங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-135)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச்23

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினர் நடத்தும் கந்தையா குமாரசுவாமியின் 50 வருட சமூக சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்2.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நா.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விழா நாயகனுக்கு 'அபயகரம்' என்றும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்23

சமூக கலை, இலக்கிய, உளநல மேம்பாட்டு மையம் நடத்தும் உளநலக் கருத்தரங்கு இன்றுமுற்பகல் 10 மணிக்கு சுன்னாகம், கதிரமலைச் சிவன் கோயிலடியில் உள்ள மையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெவுள்ளது.

ஆசிரியர் க. கேசவன் 'ஆளுமை உருவாக்கம்' என்னும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்துவார். (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ். லயன்ஸ் கழகம் நடத்தும் சிறுவர் சங்கம நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆனைக்கோட்டை முன்மாதிரிக் கிராம அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஆனைக்கோட்டை ஜே/132 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சிறுவர் கழகத்தின் அங்கத்தவர்களின் உளநலத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. (202)

* * *

குருநகர்,மார்ச்23

யாழ் புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவதுஆண்டு வைர விழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குருநகர் புதுமை மாதா மேற்கு வீதியில் அமைந்துள்ள கழகப் பணிமனை முன்றிலில் நடைபெறவுள்ளன.

இவ்வைரவிழா நிகழ்வில் சிறுவர் விளையாட்டுப்போட்டி, சைக்கிள் சாகாஸம் ஆகியன இடம்பெறவுள்ளன.

டாக்டர் எம்.எஸ்.அலோசியஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் பிரதம விருந்தினராகவும், வண. பிதா ப. இருதயதாஸ் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளஉள்ளனர். (202-51)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்23

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்கும் கலை நிகழ்வும் நாளை திங்கட்கிழமை காலை9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டி.ஜெயக்குமார் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டக்டர் ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (202-95)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்23

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இன்று பாடசாலையின் பழைய மாணவர்கள் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

இத்தகவலை வித்தியாலய அதிபர் மா. சோமசேகரம் தெரிவித்தார். (202)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமசுந்தரி நாராயணலிங்கம்



திருநெல்வேலி வடக்கு, மடம் ஒழுங்கையைச் சேர்ந்த சிவகாமசுந்தரி நாராணயலிங்கம் நேற்று (22.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாராயணலிங்கத்தின் அன்பு மனைவியும் நடராசா -லட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் சுந்தரவதனா, தையல்நாயகி, ஈஸ்வரி, சிவஞானசுந்தரி ஆகியோரின் சகேதரியும் சுந்தரலிங்கம், இராசநாயகம், சோதிலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடம் ஒழுங்கை,*
*திருநெல்வேலி வடக்கு,*
*திருநெல்வேலி.* (72279)

தகவல்:
சோதிலிங்கம் ஈஸ்வரி

### பிலிப் இசிதோசம்மா (முத்துராணி)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் புங்கங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பிலிப் இசிதோசம்மா (முத்துராணி) நேற்று (22.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முடியப்பு பிலிப்பின் மனைவியும், மயூரி, பாக்கியசீலி, மேரி அன்ரனற் ஆகியோரின் தாயாரும், றொபின்சன், வினோதன் ஆகியோரின் மாமியாரும், பிரியதர்சினி(யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீபன்(செலிங்கோ லைப், சுன்னாகம்), மேரி றொபின்சியா, அன்ரோ, நிறோசன், ஜீசஸ் றொக்கின்சன் (பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிசடங்குகள் நாளை (24.03.2008) திங்கட்கிழமை பி.ப. 3மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*97, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.* (72277)

தகவல்:
S.S.பிரதீபன்.

### திருமதி சிவலிங்கம் மனோரஞ்சினி

(Assistant Manger, Kreston MNS & Co., Hatton)



யாழ்ப்பாணம், இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் மனோரஞ்சினி (21.03.2008) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகளும், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் - பூபதி தம்பதியரின் மருமகனும், எஸ். சிவலிங்கத்தின் (Branch Manger Kreston MNS & Co. Hatton) அன்பு மனைவியும், பிரணவன், பிரசாத் ஆகியோரின் அன்புத் தாயாரும், சியாமளா, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.க. இராமசந்திரன், Dr.இலட்சுமணன், சறோஜினி, கோபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், குணபாலசிங்கம், பத்மினி ஆகியோரின் சகோதரியும், சந்திரவதனா, தயாளமலர், சுந்தரலிங்கம், தயாநிதி, கொஞ்சலாதேவி, ஜெகதீஸ்வரி, சிவனேஸ்வரலிங்கம், தேவரஞ்ஜினி, சற்குணலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டகலை கொமர்ஷல் மின் மயானத்தில் பிற்பகல் 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Arcon House,
Brown Site,
Fruithill, Hatton.
051 4920824 (சி/551951)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அன்னம்மா தியாகராஜா

(இளைப்பாறிய ஆசிரியை, யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)



புத்தூர் மேற்கு , புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா தியாகராஜா(21.03.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் தியாகராஜாவின் (இளைப்பாறிய ஆசிரியர், யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் ராமலிங்கம் - பொன்னம்மா ஆகியோரின் மகளும், காரைநகர் பலக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் - தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், கந்தசாமி, நவமணி ஆகியோரின் சகோதரியும், சத்தியபாமா (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), சிவானந்தராசா (சுவிஸ்), பாஸ்கரராசா (கனடா), சிவசோதிராசா (பிரான்ஸ்), சிவனேசராசா (ஆசிரியர், யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), ரவீந்திரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீகரன் (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), உமா (சுவிஸ்), கேதீஸ்வரி (கனடா), அனுசியா (பிரான்ஸ்), சுவர்ணாதேவி(ஆசிரியை, யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), சுகுணாளினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தருசன், விஜிதரன், கோமிதன், கபிலா, கரணி, பிருத்திகா, பிரவீனன், வினோதன், துவாரகன், பவிதன், நிசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 1 மணிக்கு கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9 ஆம் கட்டையடி*
*(சிவன் கோயிலடி),*
*புத்தூர் மேற்கு புத்தூர்.* (72249)

தகவல்:
வை. தியாகராசா (கணவர்),
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைக்கோள் கண்டுபிடிப்பின் பிதாமகர்; எனினும் எழுத்தாளன் என்பதிலேயே பெருமை



எந்தவொரு சமயச் சடங்கும் தனது உடல் அடக்கம் செய்யப்படும்போது இடம்பெறலாகாதென சேர் ஆர்த்தர் சி. கிளார்க் எழுதி வைத்திருந்துள்ளார். அதன்படியே கொழும்பு கனத்தையில் ஏக்கநாயக்க குடும்பத்தினருக்குச் சொந்தமான தனிப்பட்ட அடக்க பூமியில் சமயச் சடங்குகள் எதுவும் இன்றி அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

விஞ்ஞான கற்பனை கதாசிரியராக உலகப் புகழ்பெற்ற ஆர்த்தர் கிளார்க் தொடர்புசாதன செயற்கைக்கோள் கண்டுபிடிப்புக்கான விஞ்ஞான தொழில் நுட்பங்களை முதன்முதல் வெளியிட்டவரும் கண்டுபிடிப்பாளருமாவார். அது மட்டுமன்றி ஆழ்கடல் ஆராய்ச்சியாளராகவும் அவர் திகழ்ந்துள்ளார்.

கடந்த டிசெம்பர் 16ஆம் திகதி தமது 90 வயதை எட்டிய ஆர்த்தர் சி. கிளார்க் கடந்த 19ஆம் திகதி கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் மூச்சுத் திணறலுக்குள்ளாகி உயிர்நீத்தார்.

## சக்கர நாற்காலியில் நடமாட்டம்

ஏராளமான விஞ்ஞான நவீனங்களை எழுதிய கிளார்க், விஞ்ஞானம் சம்பந்தமற்ற பல வேறு நூல்களையும் எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி விஞ்ஞானம் தழுவிய கட்டுரைகளையும் ஏராளமாக எழுதியுள்ளார். வாதநோயால் பீடிக்கப்பட்டிருந்த சேர் கிளார்க் 1990ஆம் ஆண்டிலிருந்து சக்கர நாற்காலியிலேயே அமர்ந்து செயற் பட்டுவந்தார். அவர் விஞ்ஞானத்துக்கு ஆற்றிய பெரும் பணியை கௌரவித்து பிரிட்டிஷ் மகாராணி அவருக்கு 'நைற்'பட்டம் 1998ஆம் ஆண்டு வழங்கினார். அவரது கடைசி நூல் 'லாஸ்ட் தியரம்' இவ்வருட இறுதிப் பகுதியில் பிரசுரமாகவிருக்கின்றது. அமெரிக்க எழுத்தாளர் பிரெடறிக் போஹில் என்பவருடன் இணைந்து இந்நூலை எழுதியுள்ளார்.

சேர் ஆர்த்தருக்குப் பிரெட் என்ற ஒரு சகோதரரும் மேரி என்ற சகோதரியும் உண்டு. அவர்கள் பிரித்தானியாவில் சமர்செட் மைன்ஹெட் என்ற இடத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் கடைசி சகோதரர் மைக்கல் என்பவர் காலமாகிவிட்டார். 1953ஆம் ஆண்டு மெரிவின் மேபீல்ட் என்பவரைத் திருமணம் முடித்தார். 1964ஆம் ஆண்டு மண வாழ்க்கை முறிந்து போயிற்று. அவர்களுக்கு குழந்தைகள் இல்லை.

சேர் ஆர்த்தரின் தொழில்சார் பங்காளியான ஹெக்டர் ஏக்கநாயக்க அவர் மரணமாகையில் கூடவே இருந்துள்ளார்.

## சினிமா படங்களாக வெளிவந்தன

சேர் ஆர்த்தரின் பல நூல்கள் சினிமாப் படங்களாக வெளியிடப்பட்டுள்ளன. சேர் ஆர்த்தரின் 90ஆவது பிறந்த தினத்தில் வெளியிடப்பட்ட வீடியோ நாடாவில் ''எனக்கு எதுவித தனியான கவலைகளும் இல்லை, வேறுவித தனிப்பட்ட ஆசைகளும் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் கடைசி ஆசைகள் என்று மூன்று விடயங்களைப் பட்டியலிட்டிருக்கிறார். வேற்றுலகில் ஜீவராசிகள் வாழுகின்ற ஆதாரம், சுத்தமான சக்தி வளங்கள் மற்றும் நீண்டு கொண்டு செல்லும் இலங்கையின் உள்நாட்டு போருக்கு ஒரு முடிவு. இவைகளைக் காணவே அவர் ஆசைப்பட்டிருக்கிறார்.

ஓர் எழுத்தாளன், ஆழ்கடல் ஆய்வாளன், வானவியலாளன் மற்றும் விஞ்ஞான விஸ்தரிப்பாளன் என்ற முறையில் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளைக் கண்டுவிட்டேன். வாசகர்களை மகிழ்வுறச்செய்த ஓர் எழுத்தாளன் என்று நினைக்கப்படுவதையே விரும்புகின்றேன் - என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கிளார்க்கின் நூலின் தூண்டுதலே இணையத்தள கண்டுபிடிப்புக்கு வழிசெய்தது

ஆர்த்தர் சி. கிளார்க் 100 நூல்களை எழுதியுள்ளார். ஆயிரம் சிறுகதைகளுக்கு மேல் படைத்துள்ளார்.

1964ஆம் ஆண்டு அவர் எழுதிய ''டயல் ஒஃப் போர் பிராங்கீன் ஸ்ரீன்'' என்ற நூலின் தூண்டுதலால் 1989ஆம் ஆண்டு உலகின் இணையத்தளத்தைப் பிரிட்டிஷ் விஞ்ஞானியான ரிம் பேர்னெர்ஸ் லீ என்பவர் கண்டுபிடித்தார்.

இங்கிலாந்தில் 1917ஆம் ஆண்டு பிறந்த சேர் ஆர்த்தர் கிளார்க் பட்டம் பெற்றதின் பின் பிரிட்டிஷ் நிதித்துறையிலும் கணக்காய்வாளர் துறையிலும் பணிபுரிந்தார். பின்னர் விமானப்படையிலும் லெப்டின்ட்டாகப் பணியாறியுள்ளார். 1950ஆம் ஆண்டு முழு அளவில் எழுத்துத் துறையில் இறங்கி விட்டார்.

ஆழ்கடல் ஆராய்ச்சியில் இறங்கிய அவர் இலங்கையில் 1956ஆம் ஆண்டு வந்து குடியமர்ந்தார். 1998ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நைட் (சேர்) பட்டம் அவருக்குக் கிடைத்தது. அதற்குமுன் 1989இல் பிரிட்டிஷ் றோயல் 'சிபிஈ' பட்டம் கிடைத்தது.

பல பல்கலைக்கழகங்கள் அவரைக் கௌரவித்துள்ளன. 1996ஆம் ஆண்டு அனைத்துலகவிண்வெளிஆய்வு அமைப்பு 4923இலக்கம் கொண்ட விண்கல்லிற்கு அவர் பெயரைச் சூட்டி கௌரவித்தது. ஆஸ்திரேலிய மோனாஷ் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட டைனோசர் மாதிரி படிவத்திற்கு ஆர்த்தர் கிளார்க் என்று பெயரிட்டுள்ளனர். இலங்கையை இரண்டாவது தாயகமாகக் கொண்டிருந்தாலும் கடைசிவரை பிரிட்டிஷ் பிரஜையாகவே அவர் வாழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொகுப்பு : பெரு)


# தொன்மைத் தேர்ச்சி, புதுமை வேட்கை, ஆராய்ச்சி; இனப்பற்றுடன் சிந்தனைத் தெளிவு, கவித்துவம்

## பண்டிதர் சச்சியின் அணிகலன்களில் சில இவை

இலக்கியம், இலக்கணம், வானியல், சோதிடம், கல்வித் தத்துவம், உளவியல் போன்றவற்றில் ஆழ்ந்து அகன்ற அறிவு, தமிழ், சமஸ்கிருத, ஆங்கில மொழிப் புலமை, தொன்மைத் தேர்ச்சி, புதுமை வேட்கை, சிந்தனைத் தெளிவு, ஆராய்ச்சி மனப்பாங்கு, கடின உழைப்பு, கவித்துவம், எழுத்தாற்றல், இனப்பற்று முதலியவை ஒன்று திரண்டு உருவாக்கிய - ஆளுமை வீச்சுடன், பலரும் பயனடையும் வகையிலே பல்வேறு துறைகளிற் செயற்பட்டுத் தன் தனித்தன்மையை நிலை நாட்டிய பெருமைக்குரியவர் அமரர் பண்டிதர் க. சச்சிதானந்தன்.

1921 ஆம் ஆண்டிலே மாவிட்டபுரத்திற் பிறந்தவர். நடேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரிகளிற் பயின்றவர்; மதுரைத் தமிழ்ப் பண்டிதர்; இலண்டன் பல்கலைக் கழகச் சிறப்புப் பட்டதாரி; முதுகலைமாணி. உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, ஆகியவற்றில் ஆசிரியராகவும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், பின்னர் உப அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

ஈழத்தின் உன்னதமான சிறுகதைகளுள் ஒன்றான ''தண்ணீர்த்தாகம்'' உட்பட எட்டுச் சிறுகதைகளை ''ஈழகேசரி''யில் இவர் எழுதியுள்ளார். ''தண்ணீர்த் தாகம்'' போன்ற புரட்சிகரமான ஒரு சிறுகதையை-கலை நயத்துடன் இந்தியாவிலுஞ்சரி, இலங்கையிலுஞ்சரி, அந்தக் காலத்தில் வேறு எந்தவோர் எழுத்தாளனும் எழுதவில்லை என்பது ''செங்கை ஆழியா'' னின் கருத்து. நவீன புனைகதை இலக்கியத்தை இந்நாட்டில் அறிமுகப்படுத்திய இலங்கையர்கோன், சி. வைத்திலிங்கம், சம்பந்தன் போன்றோரின் வரிசையில் இவர் வைத்தெண்ணப்படத் தக்கவர் என்பதும் இலக்கியத்துறை சார்ந்தோர் கருத்தாகும். ''அன்னபூரணி'' என்ற நாவலையும் ''ஈழகேசரி''யில் எழுதியுள்ளார் சச்சிதானந்தன்.



எனினும் இவருக்கு மிகவும் வாலாயமான துறை கவிதையே. ''காதலியின் கையெழுத்து'' என்ற இவருடைய முதற் கவிதை. திரு. வி.கவின் ''நவசக்தி'' என்ற இந்தியச் சஞ்சிகையில் வெளியானது.

- சிற்பி -

யாழ்ப்பாண மக்களிடையே அக்காலத்திற் செல்வாக்குப் பெற்ற எழுத்தாளராக விளங்கிய''கல்கி'' இங்கு வருகை தந்த போது வரவேற்புப் பாவைப் பாடியவர். சச்சிதானந்தனே. கல்கியின் நாவல்கள், சிறுகதைகளில் இடம்பெற்ற பாத்திரங்களையும் சம்பவங்களையும் வரவேற்புப் பாவில் மிகப் பொருத்தமாக இணைந்திருந்ததைக் கண்ட ''கல்கி'' யும் அவருடன் கூட வந்த ஓவியர் ''மாலி''யும் அசந்து விட்டார்களாம்!

''ஆனந்தத்தேன்'' என்பது பண்டிதர் சச்சிதானந்தனின் முதலாவது கவிதைத் தொகுப்பு.

தேவர்க் கரசு நிலை
வேண்டியதில்லை -அவர்
தின்னும் சுவையமுது
வேண்டியதில்லை
சாவிற் றமிழ் படித்துச் சாக
வேண்டும் என்றன்
சாம்பல் தமிழ் மணத்து வேக
வேண்டும்.

என்ற பாடல் இடம் பெற்றது. இந்தத் தொகுப்பிலேதான்

இக்கவிதையை எழுதியவர் காசி ஆனந்தனா, கண்ணதாசனா, பாரதிதாசனா என்ற சர்ச்சை நீண்டகாலமாக நீடித்து வந்ததும், இது சம்பந்தமாக பண்டிதர் சச்சிதானந்தன், மௌனப் புன்முறுவலை மட்டும் வெளியிட்டதும், அவருடைய தனித்துவ முத்திரைகளுள் ஒன்று . ''ஆனந்தத்தேன்'' கவிததைகளைப் பற்றி பிரபல நாளிதழ்களான ''இந்து'' பாராட்டி எழுதியது குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணக் காவியமும் இலங்கைக் காவியமும்

இந்திய மக்களுக்கு இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்கள் இருப்பதைப்போன்று இலங்கைத் தமிழ் மக்களுக்கும் ஒரு காவியம் அவசியம் என அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்த அவர், யாழ்ப்பாணத் தமிழரசர்களின் வரலாற்றை எழுச்சி மிக்க கற்பனை வளத்துடன் 2045 கவிதைகள் கொண்ட ''யாழ்ப்பாணக் காவியம்'' ஆக ஆக்கி உள்ளார். எல்லோரும் எளிதிலே படித்து விளங்கக் கூடிய முறையிலே இக் காவியம் அமைந்திருப்பது அதன் தனிச் சிறப்பு. இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு, வடக்குக் கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு, சம்பந்தன் விருது ஆகியவற்றை இக்காவியம் பெற்றுள்ளது.

இனப்பிரச்சினை மற்றும் உள்நாட்டுப்போர் போன்ற வற்றின் பின்னணியில் நீண்ட கதை ஒன்றை ''இலங்கைக் காவிய''மாகப் பாடியுள்ளார். 4486 கவிதைகளைக் கொண்ட முதலாவது பகுதி ''பருவப் பாலியர் படும்பாடு'' என்ற தலைப்பிலே வெளிவந்துள்ளது.

### மஞ்சு காசினியம் இலக்கண நூல்

தொல்காப்பியரின் இலக்கண விதிகளை எளிமைப்படுத்தி இக்காலத்தவர் ஏற்றுக் கொள்ளும் வகையில் ''மஞ்சுகாசினியம்'' என்ற இலக்கண நூலையும் எழுதியுள்ளார்.தமிழ் மக்களின் தனிப்பெரும்இசைக்கருவியான ''யாழ்'' சம்பந்தமான ஆராய்ச்சியிலே சுவாமி விபுலானந்தா ஈடுபட்டபொழுது, அவருக்கு உறுதுணையாக இருந்தவர் பண்டிதர் சச்சிதானந்தன். சுவாமி அவர்களின் வழிகாட்டலிலும் பணிப்பிலும் இவர் செய்த ஆராய்ச்சிகளும் குறிப்பிடத்தக்கவை. ''தமிழர் யாழியல்'' என்ற இவருடைய நூலை யாழ் -ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வெளியிட்டுள்ளது. இலக்கியப் பேரவையின் பரிசைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் பிரபல பஞ்சாங்கங்களுள் ஒன்றை உருவாக்கும் சோதிட அறிஞர் குழுவில் பண்டிதர் முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றார் என்பது பலர் அறியாத உண்மை.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ''கௌரவ இலக்கியக் கலாநிதி'', கம்பன் கழக விருது போன்றவற்றுடன் வேறும் பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றபோதிலும் அவை பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல் கவிதை ஆக்கத்திலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வந்தவர் பண்டிதர்.

பண்டிதர் சச்சிதானந்தனின் இழப்பு, அவர் ஈடுபட்டிருந்த பல்வேறு துறைகளுக்கும் ஏற்பட்டுள்ள ஈடுசெய்யமுடியாத இழப்பு என்பது வெறும் சம்பிரதாய வார்த்தை அல்ல; சத்தியமான கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுகின்றோம்



**தா.வாசுதேவக் குருக்கள்**
*யாழ். நல்லூர் ஸ்ரீசட்டநாத சிவன் கோயில் பிரதம குருவான*
**தா.வாசுதேவக் குருக்களுக்கு**
*ஐந்து வருடங்களாகச் சிவன் அம்மன் மஹோற்சவங்களையும் 2008 பங்குனி சிவன் மஹோற்சவத்தையும் மற்றும் ஆலயத்தில் அடியார்களுக்கும் நாட்டுக்கும் பயனளிக்கும் ஏகாதச உருத்திர அபிஷேகம் உட்படப் பல ஹோமங்கள் கிரியைகளைச் சிறப்பாகப் பக்தியோடு நடத்தியதை கௌரவிக்கும் முகமாக ஆலய அபிவிருத்திச் செயலகமும் தேவஸ்தானமும் சைவ அடியார்கள் முன்னிலையில் 21.03.2008இல் பொன்னாடை போர்த்தித் தங்கமடல் அணிவித்து* **'சிவஞான பாஸ்கரன்'** *என்னும் சிறப்பு விருதை வழங்கியுள்ளார்கள்.*

*உதவிக் குருக்களாக இருக்கும்* **வா.ஜெயவஸ்தாங்க சர்மா, வா.விஷ்ணுவர்தன சர்மா, வா.ஜெனார்த்தன சர்மா** *ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.*

*ஆஸ்தான வித்துவான் நாதஸ்வரம்* **உதயகுமார் உதயசங்கர்** *அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி தங்கமடல் 21.03.2008இல் அளிக்கப்பட்டது.*

**ஆலய அபிவிருத்திச் செயலகம்.** (72260) **தேவஸ்தானம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவர் திரு.பரமசாமி யோகராஜா அவர்களின் அன்புத் தாய் திருமதி **பரமசாமி இராசம்மா (முத்துப்பிள்ளை)** அவர்கள் 21.03.2008அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது

கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி. (சி/551936)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (72230)

## ஒத்துமாறல்

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியை யாழ்.மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: 13/1, கொண்டடி றோட், குருநகர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி.: 021 222 3172 (72247)

## மணமகன் தேவை

பெற்றோருடன் லண்டனில் வசிக்கும் யாழ் இந்துக் குடும்பம், 1979 இல் பிறந்த, அவிட்டம் நட்சத்திரம், கிரகபாவம் (44)B.Sc. படித்து வேலை பார்க்கும் மணமகளுக்கு பெற்றோர் 1975, 1976ஆம் ஆண்டு பிறந்த மணமகனை லண்டனில் எதிர்பார்க்கிறார்கள்.

இல. $129^{A}$, K.K.S.வீதி,
(J/ MPCS அருகாமை) யாழ்ப்பாணம்.
*தொடர்பு:* T.P.: 2226208, 0776569764, 0774527549.
*லண்டன்:* 07931169924. (72259)

## www.THAALEE.Com

www.thaalee.com என்கிற Website மூலமாக இயங்கும் திருமண சேவையில் வயது, படிப்பு, உத்தியோகம், ஜாதி, சமயம், சொந்த இடம், வாழும்நாடு, ஜாதகம், புகைப்படம், குடும்ப விவரம் போன்ற சகல விவரங்களுடன் 3600இற்கும் மேற்பட்ட மணமக்களுடைய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மணமக்களைத் தெரிவு செய்வதற்கு, இதைவிட உங்களுக்கு என்ன தான் வேண்டும்? ஒரு Computer இல்www. thaalee.com என்பதன் மூலம் நீங்கள் விரும்பும் மணமக்களைப் புகைப்படம் உட்பட சகல விவரங்களுடன் பார்த்து தெரிவு செய்துவிட்டு உடனே என்னை நாடுங்கள். S.Sarma J.P. T.P.: 2523127 (சி/551897)

## வெள்ளிவிழா மலர் வெளியீடு

மாகியம்பதி மோட்சானந்த மாதா மரியாயின் சேனையினர் தமது 25 ஆவது வருட நிறைவையொட்டி வெள்ளிவிழா மலர் ஒன்றை இவ்வாண்டின் நடுப்பகுதியில் வெளியிடவுள்ளனர்.

இதற்கான சகலமுன்முயற்சிகளையும் மலர் வெளியீட்டுக் குழுவினர் மேற்கொண்டு வருகிறார்கள் என மரியாயின் சேனையின் தலைவர் அ. அற்புதராசா தெரிவித்தார். (202-51)

## இடமாற்றம்

## தேவன்சன்- THEVANSON

"மின்சார உபகரணங்கள், P.V.C. இணைப்புகள் விற்பனையாளர்"

இல.119, கண்டி வீதி, சாவகச்சேரியில் இயங்கி வந்த எமது வியாபார ஸ்தாபனம் (21.03.2008) வெள்ளிக்கிழமை முதல் இல.57, காங்கேசன் துறை வீதி (K.K.S.றோட்), சுன்னாகம் எனும் முகவரியில் இயங்குகின்றது என்பதனை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

THEVANSON,
No.:57, K.K.S.Road, Chunnakam. (72209) **உரிமையாளர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**முருகேசு செல்லம்மா**

தோற்றம் 16.03.1937 மறைவு 22.02.2008

*எமது விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்* **மு.இராசரத்தினத்தின்** *அன்புத் தாய்* திருமதி முருகேசு செல்லம்மா *அவர்கள் எமைப் பிரிந்து சென்று இன்றுடன் (23.03.2008) முப்பத்தொரு நாள்கள் ஆகின்றன. இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட நண்பனின் தாயின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சீனியர் லேன்,
கலட்டி. (72258) **செவிப்புலனற்றோர் புனர்வாழ்வுக் கழக நண்பர்கள்.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 26 ✱ 09 ✱ 1937



உதிர்வு 22 ✱ 02 ✱ 2008

நடந்த மாசிமாதம் 10ஆம் நாள் (22.02.2008) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி ஜெயமணி கணேசன்**

அவர்களின் சபிண்டீகரண கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (72255) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### முருகையா அன்னலட்சுமி



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா அன்னலட்சுமி நேற்று (22.03.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகையாவின் அன்பு மனைவியும் சிவகுமார், சிவகுமாரி, சுகுமாரி, வசந்தகுமாரி, உதயகுமாரி, ஜெயக்குமாரி, ஜெயராணி (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தாயும் ராகினி, தெய்வேந்திரம், சிவசுதன் ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.* (72257) தகவல்: முருகையா (கணவர்).

### இராமலிங்கம் சின்னத்தம்பி



கோயிலாமனையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இ.சின்னத்தம்பி அவர்கள் நேற்று (22.03.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனகன் புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.* (72267) தகவல்: குடும்பத்தினர்.


aat SRI LANKA

## இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கம்

*2007 டிசெம்பர் மாத பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடல்*

2007 டிசெம்பர் பரீட்சைப் பெறுபேறுகள் 13 மார்ச் 2008 அன்று வெளியிடப்பட்டன. நிறுவனத்தின் வரவேற்பு மேசையில் உள்ள கணனியில் அல்லது AAT SL website www.aat sl.lk. என்ற இணையத் தளத்தில் பார்வையிடலாம். சகல தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேற்று அட்டைகள் ஏற்கனவே தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. பெறுபேறு கிடைக்கப் பெறாதவர்கள் அதுபற்றி எழுத்துமூலம் பணிப் பாளர் (பரீட்சைகள்) அவர்களுக்கு அறியத்தரும்படி கேட்கப்படுகின்றனர்.

## 2008 ஜூன் பரீட்சைக்கான அறிவித்தல்

**2008 ஜூன் பரீட்சைக்கான விவரங்கள்:**

✱ பரீட்சைத் திகதி - 21, 22, 28 மற்றும் 29 ஜூன் 2008 (வார இறுதி நாள்கள்)

✱ பரீட்சை நிலையங்கள்அமையும் இடங்கள் - கொழும்பு, கண்டி, மாத்தறை, மட்டக்களப்பு யாழ்ப்பாணம், பதுளை, குருநாகல், கம்பஹா, அனுராதபுரம் மற்றும் இரத்தினபுரி

✱ விண்ணப்பங்கள் வழங்கல் - 2008 மார்ச் 10 முதல்

✱ விண்ணப்ப முடிவுத் திகதிகள்
- சாதாரண கட்டணம் - 2008 ஏப்ரல் 10
- பிந்திய கட்டணம் - 2008 ஏப்ரல் 21

(சாதாரண கட்டணம் + சாதாரண கட்டணத்தில் 50%)

✱ 2008 ஜூன் பரீட்சைக்கான நுழைவுப் படிவங்கள் மற்றும் பணம் செலுத்தும் வெவுச்சர்கள்

## மாணவர் பதிவுகள் 2008 ஆம் ஆண்டுக்கு செல்லுபடியானதாக இருக்கவேண்டும்

✱ 2008ஆம் ஆண்டில் பதிவு செய்த புதிய AAT/CAA மாணவர்கள் மற்றும் 2008ஆம் ஆண்டுக்கு தமது பதிவுகளைப் புதுப்பித்துள்ள AAT/CAA மாணவர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சகிதம் தமது விண்ணப்பங்களை (நுழைவு படிவங்களை) தபாலில் பெற்றுக்கொள்வார்கள்.

✱ விண்ணப்பங்கள் முதலியவற்றை 31.03.2008 ஆம் திகதி அளவில் பெற்றுக் கொள்ளாத தகுதியுடைய மாணவர்கள் பரீட்சைப் பிரிவுக்கு வருகைதந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

✱ 2008ஆம் ஆண்டுக்கு தமது மாணவர் தன்மையைப் புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் ரூ. 800 (பிந்திய கட்டணம் உட்பட) செலுத்தி அதனைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு புதுப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஆவணங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

Director (Examinations)

**Association of Accounting Technicians of Sri Lanka**

**AAT Centre**

540, Thimbirigasyaya Road, Narahenpita, Colombo 05.

(சி/551913) Inquiries: Tel: 011-2595857, 011-2559669, Fax: 011-2559672


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் தொடரும் கன மழை காரணமாக மரக்கறி, சிறுதானியம், பணப்பயிர்கள் அழுகும் நிலையில்!

**யாழ்.**குடாநாட்டில் இம்மாதம் முதலாம் திகதி தூறலாக ஆரம்பித்த மழை வெள்ளி வரை பெய்துள்ளது. முதலாம் திகதியிலிருந்து பதினாறாம் திகதி வரை 127.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. இதனால் நடுகை செய்யப்பட்ட மரக்கறிப்பயிர்கள், சிறுதானியப் பயிர்கள், பணப் பயிர்கள் என்பன நீர்தேங்கி நிற்பதால் அழுகிப்போகும் ஆபத்து நிலை தோன்றியுள்ளது.



பாதிக்கப்பட்ட கத்தரிப் பயிர்

## மழை நின்றவுடன் உரிய கிருமி நாசனிகளை விசிறுவதன் மூலம் பாதிப்பைக் குறைக்கலாம்

நெல்வயல்களில் பயறு, எள்ளு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டிருக்கும் காணிகளில் நீர் தேங்கிநிற்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பயிர்களைப் பாதுகாப்பதற்கு சில பிரதேசங்களில் விவசாயிகள் சரிவுக்கு ஏற்ப வடிகால்களை அமைத்து நீர் வடிந்து ஓடக்கூடிய வாய்க்கால்களுடன் இணைத்து விடுவதன் மூலம் நீரை வடித்து பயிர்களைப் பாதுகாக்கமுடியும். ஒருவரின்காணியிலிருந்து மற்றையவரின் காணிக்குள் தனிப்பட்ட ரீதியாக நீரைக்கடத்துவதற்கு இயலாதநிலை காணப்படுகின்றது.

இதேபோன்று மாகியப்பிட்டி பகுதியில் வழுக்கையாற்று கிளை வாய்க்கால்கள் ஊடாக நீர்வடிந்து விடக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனினும் வாய்க்கால்களில் பற்றைகள், செடிகள் இருப்பதால் பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

அராலி கிழக்கு, மாசியப்பிட்டி, சங்குவேலி, மானிப்பாய் போன்ற இடங்களில் நெல் அறுவடையின் பின்னரே வயல்களில் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. வயல்களில் நெற்செய்கைக்கென அமைக்கப்பட்ட வரம்புகள் காரணமாக நீர்வடியமுடியாமல் உள்ளது. எனினும் அப்பகுதியில் பெரும்பாலான காணிகளின் அமைப்பு நீர்வடியக் கூடிய வகையில் காணப்படுகின்றது.

நீரை வடிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள காணிகளில்பயிர்ச்செய்கைமேற்கொண்டிருக்கும் விவசாயிகள் ஒற்றுமையாக இணைந்து அமைப்புரீதியாக செயற்பட்டு நீரை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அப்பகுதி மக்கள் காணிகளுக்குரிய விவசாயிகளுடனும், மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடனும் இணைந்து வாய்க்கால்களைத் துப்புரவு செய்வதன் மூலமும் நெற் செய்கைக்கென கட்டப்பட்ட வரம்புகளில் சரிவுக்கேற்ப கடவான்களை அமைப்பதன் மூலமும் தேங்கி நிற்கும் நீரைக் கடத்தலாம்.

வயல் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும்போது சரிவைநோக்கி வடிகால்களை அமைப்பதன் மூலம் நீர் தேங்குவதால் ஏற்படும் பயிரிழப்பில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க முடியும்.

மேலும் பயிர்களில் நோய் கள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சாதகமான காலநிலை காணப்படுவதால் மிளகாய், கத்தரி, லீக்ஸ், தக்காளி போன்ற பயிர்களில் நோய்த் தாக்கம் ஏற்படலாம். மிளகாய்ப் பயிலில் இலைப்புள்ளி, அந்தி ராக்னோஸ் நோய்களும் கத்தரிப் பயிலில் அந்திராக்னோஸ் நோயும் லீக்ஸ் ஊதாப் புள்ளி நோயும் தக்காளியில் முக்கூற்று வெளிறல் நோயும் தாக்கத்தை ஏற்படுத் தலாம்.



பாதிப்புற்ற வெங்காயப் பயிர்

இதனைத் தவிர்ப்பதற்கு மழை பெய்வது நின்றவுடன் டகொனில் 75வீதம் (ந.தூ) என்னும் பங்கசு 20 கிராம் நாசினியை 10 லீற் றல் நீரில் கலந்து விசிறுவதன் மூலம் நோய்த் தொற்றைத் தவிர்க்கமுடியும். விசிறுவதன் மூலம் நோய்த்தொற்றைத் தவிர்க்க முடியும். விசிறிய பின்னும் நோய் தொற்றிய அறிகுறி கள் அவதானிக்கப்பட்டால் 10 நாள்களின் பின் மங்கோசெப் 80வீதம் ந.தூ என்னும் பங்கசு நாசியை 20 கிராம் 10 லீற்றர் நீரில் கலந்து மீண்டும் விசிறும்போது நோய்கள் தொற்றுவதில் இருந்து பாதுகாக்க முடியும்.

மழை காரணமாக மண்ணில் இருந்து நைதரசன், பொட்டாஸ் ஆகிய மூலகங்கள் வடிந்து செல்லும் நீருடன் அகற்றப்பட்டிருக்கும். இதனால் பயிர்கள் வளர்ச்சி குன்றிக் காணப்படுவதுடன் மஞ்சள் நிறமடைய வாய்ப்புகள் ஏற்படும். ஆதலால் மழை நின்றவுடன் யூரியா, மியூரியேற் ஒப்பொட்டாஸ் ஆகிய பசளைகளை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் பயிர்களுக்கு ஏற்ப இடுவதன் மூலம் மழையால் ஏற்ப இடுவதன் மூலம் மழையால் ஏற்பட்ட தகைப்பினை மாற்ற முடியும்.

பெருமழை காரணமாக அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ள வெங்காயம், அறுவடை செய்து சேமித்து வைக்க முடியாத நிலை ஏற்படும். இந்நிலையைத் தவிர்த்துக் கொள்வதற்காகத் அறுவடை செய்ய உள்ள விவசாயிகள் அறுவடைக்குக் குறைந்தது 15 நாள்களுக்கு முன் காபெண்டசிம் (பவஸ்ரின்) என்னும் பங்கசு நாசியை 10 கிராம் 10 லீற்றில் நீரில் கரைத்து விசிறவும். அறுவடை செய்த வெங்காயத்தை தாள்கள் நன்கு உலர்ந்த பின் சிறுபிடிகளாகக் கட்டி காற்றோட்டமுள்ள களஞ்சியங்களில் சேமிக்க வேண்டும்.

தற்போது நிலவும் ஈரமான கால நிலை காரணமாக களஞ்சியத்திலும், வளிமண்டல ஈரப்பதன் அதிகமாக உள்ளதால் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள வெங்காயத்திலும் அழுகல் நோய் ஏற்டும் சாத்தியம் உண்டு. ஆகவே நெருக்கமாக வெங்காயப் பிடிகளை களஞ்சியப்படுத்தி வைத்திருப்போர் பிடிகளைக் கழற்றி காபெண்டசிம் பங்கசு நாசியை விசிறிய பின் காற்றோட்டமுள்ள களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்துவதன் மூலம் களஞ்சியத்தில் ஏற்படும் அழுகல் நோயைத் தவிர்க்க முடியும்.

சி.சிவகுமார்,
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

# இந்த வாரத்துக்கு உங்கள் கால பலன் எப்படி? (23.03.2008 - 29.03.2008)

### மேடம்



(அசுவினி, பரணி, கிருத் திகை 1 ஆம் பாதம் வரை)

சந்திராஷ்டம தினங்களில் சில சங்கடங்கள் ஏற்படும். அவசரப்பட்டு எதையும் தீர்மானிக்காதீர்கள். முக்கிய பயணங்கள், முடிவுகளை ஒத்தி வைககலாம். சுப காரியம் கூடிவரும். முன் யோசனையுடன் செயற்படுவது காரிய வெற்றிக்கு உபயோகமாக இருகக்கும். குடும்பத்தில் பிரச்சினைகள் குறையும். குடும்ப உறவுகள் சீராக இருக்கும் வருவாய் உயரும். புதிய உறவுகள் வந்து சேரும். மனதில் இறுக்கம் குறையும். உடல் நலனில் லேசான பாதிப்புகளை சந்திக்க நேரிடும். வேலையில் திருப்திகரமாக இருப்பீர்கள். சலுகைகள் தேடி வரும். சக ஊழியர்கள், மேலதிகாரகளின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கும்.

### இடபம்



(கார்த்திகை 2ஆம் பாதம் முதல் ரோகிணி, மிருகசிரீடம் 2ஆம் பாதம் வரை)

காரியங்களில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வரும். மனதுக்கு இதமான செய்தியை எதிர்பார்க்கலாம். முககிய சந்திப்பால் திருப்பம் ஏற்படலாம். சுபகாரியம் தடங்கலாகி கைகூடும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் பொதுவாக அமைதி நிலவும். மன அமைதி கூடும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் சுபகாரியச் செலவுகள் காத்திருக்கின்றன. வேலை யில் நிம்மதி நிலவும். புதிய வேலைக்கான வாய்ப்புகள் கூடிவரும். சக ஊழியர்கள் நல்ல ஒத்துழைப்புத் தருவார்கள்.

### மிதுனம்



(மிருகசிரீடம் 3 ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3ஆம் பாதம் வரை)

முயற்சிகளில் தீவிரம் காட்டலாம். அவசரப்பட்டு எந்தக் காரியத்திலும் ஈடுபட வேண்டாம். புத்திசாலித்தனமாக செயல்பட்டால் காரியம் கைகூடும். அனைவருடனும் அனுசரித்து நடந்து கொள்ளவும். பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தவும். கருததொற்றுமை நிலவும். குடும்பத்தில் அமைதி நிலவும். அலுவலகச் சூழல் சாதகமாக இருக்கும். வேலையில் பொறுமை அவசியம். அனுசரணையுடன் நடந்து கொள்ளவும். கூடுதல் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் சற்றே நிதானம் அவசியம்.

### கடகம்



(புனர்பூசம் 4ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் வரை)

நண்பர்களால் சிக்கல் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது சிரமமாக இருக்கும். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் இருக்கும். சில காரியங்களில் மட்டுமே சாதகமான நிலை காணப்படும். பணி வரவுகளில் தடங்கல் காணப்படும். சுமாரான வாரம். குடும்பத்தில் பொதுவாக நிம்மதியும், அமைதியும் நிலவும். சில காரயங்களில் குழப்பம் காணப்படும். நிதானத்துடன் செயல்படவும். அலுவலக சூழ்நிலை சாதகமாக இருககாது. சிறு சிறு தவறுகள் ஏற்படும். கவனக்குறைவு காணப்படும். முக்கிய முடிவுகளில் அவசரம் காட்ட வேண்டாம்..

### சிம்மம்



(மகம் ,பூரம், உத்திரம் முதல் பாதம் வரை)

நண்பர்கள், உற்றார், உறவினர் உற்ற துணையாக இருப்பார்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். நீண்ட நாள் சந்திக்காமல் இருந்த ஒருவரை சந்திப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். கடன் தொல்லை அகலும். குடும்பத்தில் சுமூகமான நிலை காணப்படும். பண வருவாய் திருப்தி கரமாக இருககும்.வேலையில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். சக ஊழியர்கள் உங்கள் மனதுககேற்றபடி நடந்து கொள்வார்கள். இடமாற்றம், பதவி உயர்வை எதிர்பார்க்கலாம். ஊதிய உயர்வு தள்ளிப் போகும்.

### கன்னி



(உத்திரம் 2ஆம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் வரை)

காரியங்களில் நல்ல பலன் உண்டாகும். உதவிகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் ஏற்படும். மனதுக்கு இதமான காரியம் நடந்தேறும். உடல நலனில் அக்கறை காட்டவும். வெளியூர் பயணத்தால் நல்லது நடக்கும். இடமாற்றம் விரும்பியபடி அமையும். சிலருக்கு பதவி உயர்வு வந்து சேரும். காரியஙகளில் நல்ல பலன் உண்டாகும். உதவிகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் ஏற்படும். மனதுக்கு இதமான காரியம் நடநதேறும். உடல் நலனில் அக் கறை காட்டவும். வெளியூர் பயணத்தால் நல்லது நடக்கும். இடமாற்றம் விரும்பியபடி அமையும். சிலருக்கு பதவி உயர்வு வந்து சேரும்.

### துலாம்



(சித்திரை 3ஆம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் வரை)

முயற்சிகளில் தளர்ச்சி காணப்படும். காரிய பலன்கள் சுமாராக் இருக்கும். பொருளாதாரம் சற்றே மேம்படும். அலைச்சல் குறையும். சேமிப்பு குறையும். விருந்தினர் வருகையால் உற்சாகம் அடைவீர்கள். முக்கிய முடிவுகளில் நிதானம் காட்டலாம். சுபகாரியப் பேச்சுக்கள் சரியான திசையில் செல்லும். புது வேலைக்குப் போகும் யோகம் உள்ளது. சிலருக்கு அலைச்சல் ஏற்படும்.

### விருச்சிகம்



(விசாகம் 4ஆம் பாதம் முதல் அனுஷம். கேட்டை வரை)

எதிர்பார்க்கும் உதவிகள் கிடைப்பதில் சிரமம் இருக்காது. குடும்ப உறவுகள் வலுபபடும். அமைதி நிலவும். மன நிம்மதி கிடைக்கும். பணவரவு திருபதிகரமாக இருக்கும். வருமானம் அதிகரிக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். மன உளைச்சல் குறையும். பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் கூடுதல் கவனம் தேவை. செலவுகளைக் குறைக்க முயற்சிக்கவும்.

### தனுசு



தனுசு (மூலம், பூராடம். உத்தி ராடம் முதல் பாதம் வரை)

காரியங்களில் சாதக பலன் காணப்படும். முயற்சிகளில் தீவிரம் காட்டலாம் செய்யும் வேலைகளில் கூடுதல் கவனம் தேவை. சிறு சிறு தவறுகளால் பிரச்சினைகள் உண்டாகலாம். மனதுக்கு சந்தோசம் தரும் செய்தியை வார இறுதியில் எதிர்பார்க்கலாம். சிலருக்கு புதிய வேலைக்கு மாறும் வாய்ப்பு உண்டு. அலைச்சல் குறையும். வெளியூர் பயணத்தால் கூடுதல் பலன் கிடைக்கும். புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் காட்டலாம்.

### மகரம்



(உத்திராடம் 2ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் வரை)

சிறு சிறு தடைகள் ஏற்பட்டுச் சரியாகும். சில காரியங்களில் தலையிட்டு அவப்பெயரைச் சமபாதிக்க நேரிடும். நண்பர்கள் நல்ல உதவியாக இருப்பார்கள். அடுத்தவர்கள் விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்க்கவும். குடும்ப உறவுகளில் சுமூக நிலை காணப்படும். வேலையில் திருப்த நிலவும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். முக்கிய முடிவுகளில் கவனம் கண்டிப்பாக தேவை.

### கும்பம்



(அவிட்டம் 3ஆம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் வரை)

காரியத் தடை ஏற்பட்டு மனதைக் குழப்பும். எதிலும் கூடுதல் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவிகள் வருவதில் தாமதம் நிலவும் பொருள் வரவு உண்டாகும். பண இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. எதிர்பார்த்த உதவி வந்து சேருவதில் தாமதம் நிலவும். சக ஊழியர்களுடன் சச்சரவை வைத்துக் கொள்ள வேண்டாம். பதவி உயர்வை எதிர்பார்க்கலாம்.

### மீனம்



(பூரட்டாதி 4ஆம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி வரை)

எதிலும் சுப முடிவு ஏற்படும். மனச்சோர்வும், தளர்ச்சியும வந்து மனதைக் குளப்பும். பொருளாதாரம் மேம்படும். கடன்தொல்லை அகலும். அலுவலகச் சூழல் சாதகமாக இருக்கும். முக்கிய காரியங்களிலும் சந்தோச பலன் காணப்படும். முக்கிய முடிவுகளில் தீவிரம் காட்டலாம். பண வரவு திருப்திகரமாக இருக்கும். பதவி உயர்வையும் ஊதிய உயர்வையும் எதிர் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை
**www.Kumbam.Com**

வீட்டில் இருந்தபடியே வாழ்க்கைத்துணையை தேடுவதற்கு முதன்முறையாகத் தமிழிலே வெளிவரும் இணையத்தளம் www.kumbam.com ஆகும்.

நீங்களே கும்பம் மூலம் வயதின்படி, நாடு ரீதியாக, தொழில் ரீதியாக, மதம் மற்றும் உயரம் அடிப்படையில் தேடலாம், தெரியலாம். நீங்களும் இன்றே இலவசமாகப் பதிவுசெய்யுங்கள். ஜாதகத்தினையும் கும்பத்திலே பதியலாம். இலவசமாக ஜாதகம் கணித்தும் கொடுக்கப்படும். சகல தரவுகளும் இரகசியமாகப் பேணப்படும். எம்மிடம் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு, உள்நாட்டு பதிவுகள் உள்ளன.

முதன்முறையாகத் தொலைபேசி ஊடாக இலவசப்பதிவு (யாழ்.மக்களுக்காக) உடனே அழையுங்கள் - 0117 200 474

இலங்கை: 011 7200474
கனடா: 001 416 273 7780 *(24 மணிநேர சேவை)*
லண்டன்: 0044 208 123 2093
ஆஸ்திரேலியா: 0061 39 016 0164
மின்னஞ்சல்: admin@kumbam.com
www.kumbam.com ஒரு தமிழ்ப் பாரம்பரிய விவாகத்தளம். இன்றே பார்வையிடுங்கள்.

குறிப்பு: வெளிநாடுகளில் உள்ள உறவினர்களைக் கொண்டும் பதியலாம்.

(சி/551914)


## தவறிவிட்டது

சின்னத்துரை நல்லதம்பி, நயினாதீவு-02 என்னும் விலாசமுடைய தேசிய அடையாள அட்டை (400060177V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 106, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## காணி விற்பனைக்கு

யாழ்.நகர மத்தியில் (Town இல்) கஸ்தூரியார் வீதியை முகப்பாக கொண்ட மிகவும் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் கடைத் தொகுதி/வர்த்தகக் கட்டடம் கட்டக் கூடிய கடையுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு: 077 3686142
*71/1, பாமன்கடை வீதி,*
*கொழும்பு 06.*

(சி/551892)


## மரண அறிவித்தல்



### நல்லார் சின்னத்துரை

உடுவில், மட்டக்காச்சியைப் பிறப்பிடமாகவும் மல்வம், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட நல்லார் சின்னத்துரை 20.03.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2008) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் திருக்குடும்ப மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மல் வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மோகன்** (மருமகன்),
**சத்தியசீலன்** (மருமகன்),
**றமேஸ்குமார்** (பெறாமகன்).

*அம்பாள் வீதி,*
*மல்வம்,*
*உடுவில்.* (72232)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 04 |
| 11 | 04 |
| 1919 | 2007 |

### அமரர் நாகலிங்கம் ஐயாத்துரை

திதி: 23.03.2008

**ஆண்டு ஒன்று சென்றதய்யா**
**எம்மைவிட்டு நீர் பிரிந்து**
**ஆயிரம் உறவுகள் எம்மருகில்**
**இருந்தாலும் அவை அனைத்தும்**
**உங்கள் அன்புக்கு ஈடாகுமா?**

*அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

"திருவேரகம்",
நெடுந்தீவு கிழக்கு. (72238)

**குடும்பத்தினர்.**


## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக்கோழி கல்பேட்ஸ் உயிர் நிறை 390/=, சுத்தம் செய்தது 590/= கால்நடைத் தீவனங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்பு:*
சிவகுமாரன் பாம்,
கல்வியங்காட்டுச்சந்தி.

## தொலைபேசி இணைப்புத் தேவை

சண்டெல் SLT அல்லது CDMA தொலைபேசி இணைப்பு உடன் தேவை.

*தொடர்பு:*
இல.17,
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
தொ.பே.இல.:
077 4210023
(பி.ப. 3 மணிக்குப் பின்னர்).


## உலகம் வியக்கும் உன்னத உயிர்ப்பே...!

உலகம் வியக்கும் உன்னத உயிர்ப்பே!
அவலம் சுமக்கும் அடியோர் அஞ்சலி

சாவினை வென்ற சற்குரு நாயகா!
பாவிகள் எமக்குப் பரிவுகள் வீசும்

உடலும் மனமும் உயிரும் ஒன்றாய்
திடமுடன் இயங்கத் திருவுளம் தருவீர்

கல்லறை உயிர்த்த கருணை வடிவமே!
நல்லறம் புரிந்திட நம்மில் எழுவீர்

புத்தொளி வீசும் பூங்காரத் தாழடி
இத்தரை பணிந்து இரந்தோம் சுவாமி!


அபயம் பொழியும் ஆரு யிர் மன்னா!
இதயத் துடிப்பில் இங்கித வணக்கம்.

**ஞா.அரியமலர்**
*மிருசுவில்.* (72189)



இயேசுவே ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். (உரோமையர் 10:9)

## நெஞ்சம் நிறைந்தவரின் 6ஆம் மாத நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 | 23 |
| 09 | 09 |
| 1980 | 2007 |

### குலேந்திரமோகன் சுதாகர்
### (கண்ணன்)

எங்களின் இனிய உறவே கண்ணா!
எத்தனை மாதங்கள் சென்றாலும் முத்தான
உங்கள் கலையாத நினைவுகள்
கண்ணெதிரே நிற்கின்றன
உங்கள் உறவிலே வேரூன்றி நிற்கும்
இனிய உறவுகளை மறந்து எங்கே
பறந்து சென்றாய் கண்ணா...
எங்களால் உங்கள் பிரிவைத் தாங்க முடியவில்லை.

துன்பத்தின் வழியில் எங்களை
தவிக்கவிட்டு சென்று விட்டாயே கண்ணா
நிஜமாக உம்மோடு வாழ்ந்த காலங்கள்
நிழலாகிப் போனாலும்
ஆறாது எம்மனம்
உங்கள் கனவுகள் நனவாகுமுன்
காலன் உங்களை கவர்ந்து
சென்று விட்டானே கண்ணா.

உங்களைப் பிரிந்து நாங்கள் தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**"மரணங்கள் தவிர்க்கமுடியாதவைதான் ஆனால் சில மரணங்கள் சகிக்கமுடியாதவை"**

உலும் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

காலமுள்ளவரைஎன்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
**மனைவி, பிள்ளைகள்.**

(சி/551894)


# STUDY
LONDON, CANADA, USA
AUSTRALIA, CYPRUS
Through
# MALAYSIA

* மலேசிய அதிகாரிகளை நேரடியாக கொழும்பில் சந்தித்து முழு விபரங்களையும் பெறலாம்.

Mr.Hoh ☎ 0060122086956, 0060379547200



## SAITO COLLEGE
**FREE INTERVIEW & SPOT ADMISSION**

March 26th & 27th

* NO VISA INTERVIEW.
* 100% guaranties for visa.
* Minimum Qualification G.C.E (O/L).
* Course Fee payable in installment
* IELTS, TOEFL Sponsor வங்கிமீதி என்பன அவசியமில்லை.
* உடன் பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

**YOUR CHOICE** அனைத்துப் பாடநெறிகளும்

MULTIMEDIA | GRAPHICS | BIT
INFORMATION TECHNOLOGY | INTERIOR DESIGN

## SAITO TECHNICAL COLLEGE
ELECTRONICS | ELECTRICAL WIRING

Skill Courses (2 years)
1. Low entry requirement: Year.8 (16 years old)
2. 70% practical oriented course
3. Affordable Fees : USD 2000 per year.
4. Malaysian Government Certification
5. Big demand in Electronics industries
6. Low cost of living.

Admissions for the Next intake now on

www.itslk.com

1st Time in Sri Lanka

எவ்வித முற்கட்டணமுமற்ற சேவை

HOTLINE: 0717763564

## IT SOLUTION
527, Galle Road, Colombo-06
www.itslk.com ☎ 2551148, 2361951, 2551548, 4909833


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை

# சிங்கள மக்களின் குடிசனத்தொகை 38.5 % அவர்களின் வாழ்விடம் மொத்தத்தில் 78.5%

### வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடித்தொகையும், நிலக்குடியேற்றங்களும் பாகம் 4



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*முன்னாள் துணைவேந்தர்*

**அம்பாறை மாவட்டம்**

அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் குடிசனக் கணிப்புகள் 1963, 1971, 1981, 2001 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றன. வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் 2001ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பு முழுமையாக அம்பாறை மாவட்டத்திலேயே இடம் பெற்றதெனினும் குடிசனத்தொகை தரவுகளின் நம்பகத்தன்மை குறித்து ஐயப்பாடுகள் எழுகின்றன. யுத்தம், இடப்பெயர்வு, கடின இனச் சார்பு, அரசியல் மயப்படுத்தப்பட்ட நிலை, நிவாரண உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னணியில் குடிசனக் கணிப்பு இடம்பெற்றுள்ளது. இதனால் பெறப்பட்ட குடிசனத் தொகைத் தரவுகள் சரியானவையா என்பது கேள்விக்குரியது. சமூகநலன்நோக்கு, விருப்பு, வெறுப்பு, அலட்சியம் போன்ற காரணிகள் வெவ்வேறு இனக்குழுமங்களின் தரவுகளில் சாதகமாகவோ, பாதகமாகவோ செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. அம்பாறை மாவட்டத் தமிழர்கள் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு பல கிராமங்களிலிருந்து முற்றாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பற்றிய தரவுகள் முழுமையாகச் சேர்க்கப்பட்டனவா என்பது கேள்விக்குரியது. மேலும் அரசியல் கணக்கிற்காகவும் நிவாரண நோக்கிற்காகவும் குடித் தரவுகள் மிகைப்படுத்தப்பட்டனவா எனக் கருதஇடமுண்டு. இப் பின்னணியில் 2001ஆம் ஆண்டுத் தரவுகளை நோக்குமிடத்து முஸ்லிம், சிங்கள மக்களின் தரவுகளிலும் பார்க்கத் தமிழர் பற்றிய தரவுகள் உண்மை நிலையிலும் பார்க்க குறைந்த நிலையைக் காட்டுவதாகக் கருத இடமுண்டு. அட்டவணை: VIII இல் 1921-2001 இற்கு இடைப்பட்ட காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் குடிசன வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தின் குடித் தொகை 1921 இல் 64 ஆயிரமாக இருந்து இன்று 6 இலட்சம் மேல் வளர்ந்துள்ளது. இக்குடித் தொகை வளர்ச்சிக்கு உயர்வான, இயற்கையான அதிகரிப்புடன் கூடிய உள்ளக இடப்பெயர்வும் காரணமாக இருந்தது.

கல்லோயா ஆற்றுப்பள்ளத் தாக்கு அபிவிருத்தி சிறிய, நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் விருத்தி பல்வேறுபட்ட நில அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாகப் பெரும் எண்ணிக்கையான பிற மாவட்ட மக்கள் இங்கு குடிபெயர்ந்தனர். 1980களில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இம் மாவட்டத்திற்குள் அடங்கும் C (Mahaweli C System) ஒழுங்குவிருத்தி செய்யப்பட்டதால் தெஹியத்த கண்டிப்பகுதி பெரும் அபிவிருத்தி கண்டது. ஆகவே நில அபிவிருத்தி மூலம் சிங்கள மக்களே கூடுதலான பயனைப் பெற்றனர். முஸ்லிம் மக்கள் குடிஉள்ளவரவால் பயன்பெறாது விட்டாலும் அவர்களின் இயற்கை அதிகரிப்பு ஒப்பீட்டு ரீதியில் ஏனைய சமூகத்தவர்களை விடக் கூடியதாக இருந்தது. அவர்களது சமயப் பெறுமானங்களும் சமூகப்பொருளாதார விழுமியங்களும் இதற்குக் காரணங்களாக அமைந்தன. ஆனால் தமிழர்களின் இயற் கையான குடித்தொகை வளர்ச்சியும் குடியுள்வரவும் குறைவாகக் காணப்பட்டன. அம்பாறை மாவட்டத்தின் இன விகிதாசாரம் அட்டவணை IX இல் காட்டப்பட்டுள்ளது.

இவ்வட்டவணையை நோக்கின் மூவினங்களின் விகிதாசாரம் தொடர்ச்சியாக மாறிமாறி வருவதைக் காணலாம். தமிழ், முஸ்லிம்களின் இனவிகிதாசாரம் குறைந்தும் சிங்களவர்களின் இன விகிதாசாரங்கள் தொடர்ச்சியாக அதிகரித்தும் செல்லும் போக்கைக் காணலாம். சிங்கள மக்கள் வீதம் 1953 இல் 7.5 வீதமாக இருந்து 2001 இல் 39.3 வீதமாக அதிகரித்துள்ளது. ஆனால் முஸ்லிம்களின் விகிதாசாரம் 1981இற்கும் 2001இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரே அளவாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பிரிவில் முஸ்லிம்களின் வளர்ச்சி 51.7 வீதமாகவும் சிங்களவர்களின் வளர்ச்சி 58.3 வீதமாகவும தமிழர்களின் வளர்ச்சி 38.7 வீதமாகவும் இருந்தன. ஆகவே சிங்களவர்கள், முஸ்லிம்களின் குடித்தொகை வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும்போது தமிழர்களின் குடித் தொகை வளர்ச்சி வீதம் குறைவாக இருந்ததன் காரணங்களை நோக்கின் அவை குறைவான இயற்கை அதிகரிப்பும் அகதி நிலைக்குடியேற்றமும் ஆகும். மேலும் யுத்த உயிரிழப்பு, விதவையாதல், மறுமணமின்மை, யுத்தத்தினால் விவாகம் பிற்போடப்பட்டமை, உயர்வான சிசு மரணம் போன்றனவும் காரணங்களாக அமைகின்றன. தமிழர் பற்றிய உண்மைத்தரவுகள் முழுமையாகச் சேர்க்கப்பட்டனவா என்பதும் கேள்விக்குரியது.

அம்பாறை மாவட்டத்தின் மொழிப் பரம்பலையும், இனப்பரம்பலையும், பிரதேசசெயலக/உதவி அரச அதிபர் பிரிவு அடிப்படையில் இனங்காணக் கூடியதாக இருக்கின்றது. இம் மாவட்டத்தைத் தொடர்ச்சியான பரப்புக் கொண்ட இருமொழி வலயங்களாகப் பிரிக்கலாம். அவை யாவன:

1. தமிழ் பேசும் கரையோர வலயம்
2. சிங்களம் பேசும் உள்வலயம்

இவ்விரு வலயங்களின் நிலப்பரப்புகள் பிரிவுகள் அடிப்படையில் அட்டவணை X இல் காட்டப்பட்டுள்ளன.

குறித்த. இருமொழி வலயங்களும் தொடர்ச்சியானதாகவும் தெளிவாக வரையறுத்துப் பார்க்கக் கூடியதாகவும் உள்ளன. இம் மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் 78.5 வீதம் சிங்களம் பேசும் பகுதியாகவும் 215 வீதம் தமிழ் பேசும் பகுதியாகவும் உள்ளன. சிங்கள வலயத்தில் மொத்த குடித் தொகை 2 லட்சத்து 28 ஆயிரத்தி 758 பேராகும். இது மாவட்டக் குடித் தொகையில் 38.8 வீதமாகும். மேலும் இவ்வலயத்திலுள்ள மக்களில் 98.8 வீதத்தினர் சிங்களவராகவும் மிகுதி 1.2 வீதத்தினர் முஸ்லிம், தமிழர், பறங்கியர், வேடர் ஆகியோராகவும் உள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களில் 97.5 வீதத்தினர் இவ் வலயத்திலும் மிகுதி 2.7 வீதத்தினர் கரையோர வலயத்திலும் வாழ்கின்றனர். 38.8 வீத மக்கள் மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் 78.5 வீதத்தைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழி பேசும் கரையோர வலயம் 927.1 ச.கி.மீற்றர் பரப்பைக் கொண்டது. இது மாவட்ட நிலப் பரப்பில் 21.5 வீதமாகும். இவ் வலயத்தில் 2001இல் 3 லட்சத்து 60 ஆயிரத்து 590 பேர் வாழ்ந்தனர். தமிழ்பேசும் கரையோர வலயத்தின் இன விகிதாசாரம் அட்டவணை XI இல் காட்டப்பட்டுள்ளது.

கரையோர வலயத்தில் முஸ்லிம்கள் மருதமுனை, கல்முனைக்குடி சாய்ந்த மருது, மளிகைக்காடு, நிந்தாவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஒலுவில, பொத்துவில், சம்மாந்துறை, ஈறக்காமம், வரிப்பத்தாஞ்சேனை ஆகிய இடங்களில் செறிந்து வாழ்கின்றனர். தமிழர் பெரிய நிலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, காரைதீவு, ஆலையடி வேம்பு, தம்புலுவில், திருக்கோவில்,சங்கமான் கண்டி, கோமாரி, நற்பிட்டி முனை, சேனைக் குடியிருப்பு, நாவிதன் வெளி, அன்னமலை, சாவளக்கடை, மல் வத்தை ஆகிய இடங்களில் செறிந்து வாழ்கின்றனர். கரையோரப் பகுதி யில் முஸ்லிம், தமிழ் குடியிருப் புக்கள்மாறி மாறி வரும் ஒழுங்கைக் காணமுடிகிறது.

இம் மாவட்டத்தின் குடித்தொகை யும் இன விகிதாசாரமும் பிரதேச பிரிவின் அடிப்படையில் அட்டவணை XII இல் காட்டப்பட்டுள் ளன.

இம் மாவட்டத்தில் 19 பிரதேச / உப அரச அதிபர் பிரிவுகள் உள்ளன. கல் முனைத் தமிழ் பிரிவு தரம் உயர்த் தப்படாததால் தனியான புள்ளி விவரங்களைக் கொண்டிருக்கவில்லை. எனினும் அப்பிரிவில் தமிழ் மக்கள் மிகப் பெரும்பாண்மையாக உள்ளனர். முஸ்லிம் கள் ஏழு பிரிவுகளிலும், சிங்களவர்கள் ஏழு பிரிவுகளிலும் தமிழர் கள் கல்முனைத் தமிழ்ப் பிரிவு உட்பட ஐந்துபிரிவுகளிலும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். காரைதீவு, நாவிதன்வெளிப் பிரிவுகளில் முஸ்லிம்கள் 1/3 பங்கினராகவும் தமிழர்கள் பொத்துவிலில் 20 வீதமாகவும் சம்பாந்துறையில் 13.9 வீதமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

15 பிரிவுகளில் யாராவது ஒரு இனத்தவா[illegible]வீதத்திற்கு மேல் இருப்ப தும், அதில் ஏழு பிரிவுகளில் யாரா வது ஓர் இனத் தவர் 95 வீதத் திற்கு மேல்இருப் பதும் கவனிக்கத்தக்கது.

2001குடிசனக் கணிப்புப்படி ஒரு சதுர கிலோ மீற்ற ருக்கு 137 பேர் அம்பாறை மாவட்டத்தில் இருந்தனர். தமிழ் பேசும் கரையோர வலயத்தில் சராசரிக் குடிய டர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 391 ஆக வும் சிங்களம் பேசும் உள்வலயத்தில் சதுர கிலோ மீற்றருக்கு 68 ஆகவும் இருந்தன. இம் மாவட்டத்தின் குடிசன அடர்த்தி (140) தேசிய குடிசன அடர்த்தியில் (299) அரைவாசியாக வுள்ளது. இம் மாவட் டத்திற்குள் குறிப்பிடத் தக்க குடியடர்த்தி வேறுபாடுகள் காணப்படுகின்றன. கல்முனை மாநகரசபை உள்ளடங்கும் கரவாகுப் பிரதேசம் சதுர கிலோ மீற்றருக்கு சராசரி 4 ஆயி ரத்தி 477 பேரைக் கொண் டிருந்தது. கல்முனை மாநகரப் பிரதேசப் பரப்பும் முன்னைய கல்முனைத் தேர்தல் தொகுதி அல்லது இன்றைய கல்முனை வாக்களிப்புப் பிரிவும் ஒரு பிரதேசமாக உள்ளது. கல்முனையை அண்டிய நிந்தாவூர் காரை தீவுப்பகுதி சதுர கிலோமீற்றருக்கு 909 பேரையும் அட்டாளைச் சேனைப்பகுதி சதுரகிலோ மீற்றருக்கு 620 பேரையும் அக்கரைப்பற்றுப் பகுதி சதுர கிலோ மீற்றருக்கு 404 பேரையும், சம்மாந்துறைப் பகுதி சதுர கிலோ மீற்றருக்கு 331 பேரையும் கொண்டுள்ளன. ஏனைய பகுதிகள் யாவும் சதுர கிலோ மீற்றருக்கு 150 பேருக்குக் குறைவானோரைக் கொண்டுள்ளன. இவற்றில் பாணமைப் பற்று சதுர கிலோ மீற்றருக்கு 8 பேரை மாத்திரம் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(வளரும்...)

அட்டவணை VIII

அம்பாறை மாவட்டத்தின் குடித்தொகை வளர்ச்சி 1921-2001

| குடிசனக்கணிப்பு ஆண்டு | எண்ணிக்கை ஆயிரத்தில் | குடிஅதிகரிப்பு ஆயிரத்தில் | குடிஅதிகரிப்பு வீதத்தில் |
|---|---|---|---|
| 1921 | 64.4 | - | - |
| 1946 | 95.0 | 30.6 | 47.5 |
| 1953 | 135.3 | 40.3 | 42.4 |
| 1963 | 211.7 | 76.4 | 56.5 |
| 1971 | 272.6 | 60.9 | 28.8 |
| 1981 | 388.9 | 116.3 | 42.7 |
| 2001 | 589.3 | 200.4 | 51.5 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள்

அட்டவணை IX அம்பாறை மாவட்டத்தின் இனவீதாசாரம்

| ஆண்டு | குடித்தொகை | முஸ்லிம் | தமிழர் | சிங்களவர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| 1953 | 1,35,300 | 60.0 | 32.2 | 7.5 | 0.3 |
| 1961 | 2,11,820 | 46.6 | 23.8 | 29.3 | 0.3 |
| 1971 | 2,72,780 | 45.9 | 23.4 | 30.4 | 0.3 |
| 1981 | 3,88,786 | 41.6 | 20.4 | 37.8 | 0.3 |
| 2001 | 5,89,344 | 41.6 | 18.8 | 39.3 | 0.3 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள்

அட்டவணை:- X

| தமிழ் பேசும் பிரிவுகள் | ச.கி.மீ | சிங்களம் பேசும் பிரிவுகள் | ச.கி.மீ |
|---|---|---|---|
| பொத்துவில் | 248.0 | பாணமைப்பற்று (லகுகல) | 952.1 |
| அக்கறைப்பற்று ஆலையடிவேம்பு | 147.0 | வெவகம்பற்று வடக்கு (உகணை, அம்பாறை) | 672.1 |
| அட்டாளைச்சேனை | 57.7 | வெவகம்பற்று தெற்கு (தமண) | 384.8 |
| கல்முனை கல்முனைத்தமிழ் சாய்ந்தமருது | 22.1 | விந்தனைப்பற்று வடக்கு (மகாஓயா) | 591.7 |
| நிந்தவூர் காரைதீவு | 45.7 | விந்தனைப்பற்று தெற்கு (பதியத்தலாவ, தெஹியத்திகந்த) | 790.4 |
| சம்மாந்துறை, நாவிதன்வெளி இறக்காமம் | 241.6 | | |
| திருக்கோவில் | 164.8 | | |
| மொத்தம் | 927.1 | மொத்தம் | 3391.1 |

மூலம்: அம்பாறை மாவட்ட புள்ளிவிபரக் கைந்நூல்

அட்டவணை XI

| இனம் | தொகை | வீதம் |
|---|---|---|
| முஸ்லிம் | 2,44,210 | 67.7 |
| தமிழர் | 1,08,168 | 30 |
| சிங்களவர் | 5,744 | 1.6 |
| ஏனையோர் | 2,469 | 0.7 |
| மொத்தம் | 3,60,591 | 100 |

தரவு - இலங்கைக் குடிக்கணிப்புகள் - 2001

அட்டவணை XII

பிரதேச பிரிவு அடிப்படையில் குடித்தொகையும் இனப்பரம்பல் வீதாசாரமும் - 2001

| பிரிவு | குடித்தொகை | முஸ்லிம் | தமிழர் | சிங்களவர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| அட்டாளைச்சேனை | 35,779 | 93.1 | 01.7 | 05.2 | 0.0 |
| அக்கரைப்பற்று | 34,961 | 96.3 | 03.0 | 00.7 | 0.0 |
| ஆலையடிவேம்பு | 22,454 | 00.5 | 97.1 | 01.6 | 0.8 |
| அம்பாறை | 37,992 | 00.8 | 01.0 | 98.0 | 0.2 |
| தமன | 34,754 | 00.5 | 00.1 | 99.7 | |
| தெஹியத்திகண்டிய | 62,612 | 00.2 | 00.1 | 98.8 | 0.9 |
| இறக்காமம் | 11,442 | 89.1 | 03.5 | 07.0 | 0.4 |
| கல்முனை கல்முனைத்தமிழ் | 70,439 | 60.9 | 37.8 | 00.5 | 0.7 |
| காரைதீவு | 16,210 | 36.7 | 61.9 | 01.1 | 0.3 |
| லகுகல | 07,587 | | 08.4 | 91.1 | 0.5 |
| மகாஓயா | 18,023 | 00.4 | 00.1 | 99.5 | - |
| நாவிதன்வெளி | 17,330 | 30.7 | 66.3 | 02.9 | - |
| படியத்தலாவ | 15,648 | 00.6 | 00.1 | 99.3 | - |
| பொத்துவில் | 28,404 | 76.3 | 20.0 | 03.3 | 0.4 |
| சாய்ந்தமருது | 24,018 | 99.9 | 00.0 | 00.1 | 0.0 |
| சம்மாந்துறை | 51,142 | 85.5 | 13.9 | 00.5 | 0.1 |
| திருக்கோவில் | 23,739 | 00.1 | 98.8 | 01.0 | 0.1 |
| உகண | 52,137 | 00.1 | 00.1 | 99.8 | 0.0 |

மூலம் இலங்கை குடிசன கணிப்புக்கள் - 2001

## 2001 ஆம் ஆண்டு குடிசனத்தொகை மதிப்பீட்டில் தமிழர் குறித்த தரவுகள் குறைந்த நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவி மனிதர்

கடுகதிப் புகைவண்டி நீண்டதோர் பெருமூச்சோடு 'அரண்' நிலையத்தில் தன் பிரயாணத்தை முடித்துக்கொண்டது. இடித்து நெருக்கிக் கொண்டு எல்லோரும் இறங்கினார்கள். நாஷனல் ஷேர்ட் ஒன்றைப் போட்டுக் கைகளை மடித்துவிட்டு அதன்மேல் எட்டு முழச்சாய வேட்டியை இரண்டாக மடித்து முழங்கால் மறைந்தும் மறையாததுமாக உடுத்தி, ஒரு பக்கத் தோளில் ஒரு பச்சை நிறக் கம்பளியை மடித்துப் போட்ட வண்ணம் சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவரும் மூடை முடிச்சுக்களுடன் அந்தப் பிரயாணிகளிலொருவராக இறங்கினார்.

இந்த நவநாகரிக யுகத்திலும் 'குறோப்' வெட்டிக் கொள்ளாமல் கொண்டை முடிந்து கட்டி முகத்தை மழுங்கச் சிரைத்துக் கொண்ட அவர் மார்கழி மாசத்துக் குளிரையும் கூதலையும் விரட்டுவதற்காக கறுப்பு சுருட்டையெடுத்து வாயில் வைத்துப் பற்றவைத்து வெண் புகையைத் தள்ளியவாறு ஓர் ஒதுக்குப் புறமாக நின்றார்.

அந்த நாகரிக நகரச் சூழலிலே ஒரு நூதன மனிதனாகக் காட்சியளித்த அவரை சிலர் பரக்கப் பரக்க விழித்துப் பார்த்தனர். அவரும் தன்னைப் பார்ப்பவர்களை மிரள மிரள மான் பார்வையில் பார்த்துக் கொண்டார். சற்று வேளையின் பின் தான் கொண்டு வந்த ஒரு ஓலைக் கட்டுப்பெட்டி, ஒரு சாமான் சாக்கு, கைப்பிடியற்ற ஒரு குடை ஆகியனவற்றை எடுத்துக்கொண்டு அவர் ''வெளி அரண்'' கடை வீதிப் பக்கம் சென்றார்.

''சந்தோஷ பவன்'' உணவுச் சாலைக்குட் புகுந்து மிகவும் பதனமாகவொரு நாற்காலியில் உட்கார்ந்து ஒரு வெண்கலக் குவளை கோப்பி குடித்தார். மீண்டுமொரு சுருட்டைப் பற்ற வைத்தார். தனது பொருள்களைத் தூக்கிக் கொண்டு ஹோட்டல் பில்லுக்கு பணத்தையும் செலுத்திவிட்டு வெளியேறினார். சற்றுநேரம் அவ்விடத்தில் நின்று

## எஸ்.எல்.சவுந்தரநாயகம்

உலாவினார். திரும்ப எங்கேயோ போய் விட்டார்... கொஞ்ச நேரத்தால் மீண்டும் அவ்விடத்துக்கு வந்தார்... திரும்பவும் சிறிதுவேளை உலாவினார்.

சிலர் அவரைக் கூர்ந்து பார்த்தார்கள். தன்னைப் பார்ப்பவர்களை அவரும் ஒரு மாதிரிப் பார்த்தார். தன்னை அப்படிப் பார்த்தவர்களை அநாகரிக மனிதர்களென்று அவரும், அவரை ஒரு பட்டிக் காட்டானென்று அவரைக் கூர்ந்து நோக்கியவர்களும் பரஸ்பரம் எண்ணிக் கொண்டார்களோ என்னவோ யார் கண்டார்கள்? சிலர் அவரை வட்டமிடவும் தலைப்பட்டனர்.

அவர் வாடகைக் கார்கள் நிறுத்தப்படும் இடத்திற்குச் சென்றார். அவரைக் கண்டதும் ஒரு கார்க்காரன் ஓடி வந்து ''ஐயா எவடம் போக வேணும்? நம்ம காரிலே போகலாம்!'' என்று அழைத்தான்.

''நீர்த் தோட்டம்'' என்கிற இடத்துக்குப் போகிற பாதையெது தம்பி என்று அவர் கார்க்காரனிடம் விசாரித்தார். கார்க்காரனுடைய முகத்தில் எள்ளு மட்டுமல்ல கொள்ளும் வெடிக்கக் கூடிய கனல் பறந்தது. அவன் அவருக்குப் புரியாத மொழியில் ஏதோ வெறுப்புடன் பதில் கொடுத்தான். அவனுடைய முகபாவம் காரில் வா! அல்லது என்னுடைய மொழியில் பேசு என்ற அதிகாரம் பண்ணுவதைப் போலிருந்தது.

பிறந்த நாள் தொட்டுப் பேசிப் பழகிய தன்னுடைய மொழியை விட்டு விட்டு அவனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகவோ அல்லது அவனுடைய மிரட்டலுக்கஞ் சியோ அவர் அவனுடைய மொழியிற் பேசுவது நடக்கக் கூடிய காரியமா?

''நீர்த் தோட்டத்திற்குப் போக காருக்கு எவ்வளவு காசு ஆகும் தம்பி யென்று மீண்டும் தன் மொழியிலேயே அவர் அவனிடம் விசாரித்தார். அவர் தன்னுடைய காரில் வருவதற்குச் சம்மதப்பட்டு விட்டாரென்றதும் அவனுடைய மொழிச் சுரவேகம் முற்றாக இறங்கி விட்டது.

இரண்டு ரூபா ஆகும் ஐயா! வென்று அவருடைய மொழியிலேயே கார்க்காரன் பதிலளித்தான்.

உடனே அம்மனிதர் தன்னுடைய மடியை அவிழ்த்து மணிபர்ஸை வெளியிலெடுத்து அதற்குள்ளிருந்த ரூபா நோட்டுக்களையெல்லாம் சாவதானமாக ஒரு முறை எண்ணிப்பார்த்தார்.

இரண்டு ரூபா நோட்டு ஒன்றை வேறாக எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு மற்ற நோட்டுக்கள் எல்லாவற்றையும் பவுத்திரமாகப் பர்சில் வைத்துக்கொண்டு பர்ஸை பழையபடியும் மடியில் கட்டிக்கொண்டார்.

அவருடைய கழுத்தில் கிடந்த கைப்பருமனென்று சாதாரணமாய்ச் சொல்லக்கூடிய அளவு பெரிய தங்கச் சங்கிலி. இரவைப் பகலாக்கும் மின்சார வெளிச்சத்தில் டால் அடித்துக் கொண்டிருந்தது. பாவம்! நகர வாழ்க்கையின் சூதுவாதுகளை அறியாத அப்பாவி மனிதன் என்று அவரின் குறித்த செய்கைகளைப் பார்த்த சிலர் நேத்திர மொழியிற் பேசிக்கொண்டனர்.

ஆனால், கட்டடக் கலைஞனின் தொழிற் கருவிகளுள் ஒன்றான ''நீர்மட்டம்'' என்ற கருவிக்குள்ளிருக்கும் இரசம் சிறிய மேடுபள்ளங்களைச் சமன் செய்யும் பொருட்டுச் சதா குதித்துப் பாய்ந்த வண்ணம் தான் சுழன்றது. நேரமும் நள்ளிரவாகி விட்டதென்பதைக் கடிகாரங்கள் காட்டிக் கொண்டன.

''இனிப் போவோம் தம்பி!'யென்று அவர் கார்க்காரனைக் கூப்பிட்டார்.

சரி போவோமையா! நீங்கள் காரிலே ஏறி உட்காருங்க! ஒரு ஐந்து நிமிஷம்... நான் ஒரு ரீ குடிச்சிட்டு வர்றன் என்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டு கார்க்காரன் எங்கேயோ போய் நான்கு நிமிஷத்திற்குள் திரும்பி விட்டான்.

''நீர்த்தோட்டம்'' ''வசுக் கோப்பு'' மடுவத்தடிக்கு பக்கத்து தோட்டத்திலேயுள்ள வீட்டுக்குத் தான் போக வேண்டும். எனக்கும் இடம் தெரியாது. வசுக்கோப்பு மடுவத்தடியில் விட்டாற் போதும். மோனுக்குக் கடதாசி போட்டனான் தான். அவன் றெயிலடிக்கு வராமல் விட்டிட்டான் தம்பி! என்றார் அம்மனிதர்.

சரி ஐயா அதுக்கென்ன போனாற் போச்சு என்றான் கார்க்காரன். காரும் புறப்பட்டு விட்டது.

பொலிஸ்காரனுங்க யாரும் கேட்டால் நமக்குப் பழக்கமான ஆளுடைய கார். சும்மா போகிறேன். என்று சொல்லுங்கையா! என்றவொரு வாடகைக் கார்ப் பிரயாணச் சூத்திரத்தை கார்க்காரன் அவருக்குச் சொல்லிக் கொடுத்தான்.

அதுக்கென்னடா தம்பி! அதுவும் பஞ்சியோ? என்று அவர் ஆமோதித்துக் கொண்டார்.

ஒரு சந்தியில் கார் திரும்பும் போது சாரதிக்கு சிக்னல் கொடுத்தபடி, சந்தியில் நின்ற பொலிஸ்காரன் ஒருகையை மடக்கியமர்த்தி மறு கையை நீட்டிக் காட்டினான்.

''இது நமக்குப் பழக்கமான ஆளுடைய கார் ஐயா! நான் காசு கீசு கொடுக்கவில்லை. சும்மாய் தான் போகிறேன்,'' என்று உரத்த குரலில் அம் மனிதர் சந்தியில் நின்ற பொலிஸ்காரனுக்குச் சொன்னார். பொலிஸ்காரனுக்கு அவர் சொன்னது கேட்கவில்லை.

''யாரென்றாலும் காரை மறித்துக் கேட்டாற் தான் சொல்ல வேணும். மற்றப்படி சந்தியில் நிற்கும் பொலிஸ்காரரிடம் சொல்லத் தேவையில்லை'' என்று கார்க்காரன் தன் சூத்திரத்தை நன்கு விளக்கி அந்த மனிதரிடஞ் சொன்னான். நன்னூல் சூத்திரத்தை விளங்கப்படுத்தும் தமிழாசிரியரைப் போல.

''நான் என்னத்தைக் கண்டேன். அவன் கையைக் காட்டிக் கேட்டான். பின்னை.... நான் சொன்னேன். இனி இப்படிச் சொல்லமாட்டேன். தம்பி'' என்ற அவர் பிரதிக்கினை செய்து கொண்டார்.

கார் பற்பல தெருக்களைத் தாண்டி சும்மா வீதியென்ற தெருவில் வெறும் வதன ஹோட்டலைத் தாண்டி சுமார் முக்கால் மைல் தூரம் போகும் போது திடீரென மூவர் முன்னே வந்து காரை நிறுத்தினார்கள். உடனே

''சத்தியமாய் ஐயா! இது எனக்கு பழக்கமான ஆளுடைய கார். நான் காசு கொடுக்கவில்லை...'' என்று அந்த மனிதர் கூச்சலிட்டார்.

காரை நிறுத்திய மூவரிலொருவன் சாரதியின் நெஞ்சுக்கு நேராக றிவோல்வரை நீட்டினான். சாரதி சரணா கதியென்பதற்கு அடையாளமாகத் தன் இரண்டு கைகளையும் மேலே உயர்த்திக் கொண்டான். பின் சீட்டிலிருந்த அந்த மனிதர் விஷயம் வித்தியாசமாகி விட்டதையறிந்து 'இதென்னடா தம்பி'யென்று கார்க்காரனை அணைத்துக் கொண்டார்.

காரை மறித்த மூன்று பேர் வழிகளில் இருவர் அந்த மனிதரிடமிருந்த மணிபர்ஸ், சங்கிலி, கார்க்காரனின் கைமணிக்கூடு யாவற்றையும் அபகரித்துக் கொண்டனர். கார் நிறுத்தப்பட்ட ஒரு நிமிஷத்தில் மேற்படி சம்பவங்கள் நடைபெற்று ஆள்களும் ஓடி விட்டனர். சுலபமான உழைப்பு. ஆனால் துணிகரச் செயல்.

கார்க் காரனும் அந்த மனிதரும் இடியோசை கேட்ட நாகமெனச் சற்று வேளை செயலற்று இருந்தனர். பிற்பாடு ஆளையாள் தேற்றிக் கொண்டனர். காரும் நகரத் தொடங்கியது.

''நான் இங்கேயே பிறந்து வளர்ந்து இருக்கின்றேன். நாலு வருஷமாகக் காரும் வைத்து ஒட்டுகின்றேன். இப்பிடி ஒரு நாளும் நடந்தது கிடையாதையா! என் கிட்டையே வாலாட்டியிருக் கிறான்களே காலிப் பயல்கள்! என்று கார்க்காரன் அதிசயப்பட்டான். உலகை வாழ வைத்துக் கொண்டிருக்கும் நம்பிக்கையே சிலவேளைகளில் மனிதனை முட்டாளாக்குவது மட்டுமல்ல. அவனுடைய உயிருக்கே உலை வைத்துவிடவும் கூடுமென்பதை கார்க்காரனின் அன்றைய நம்பிக்கை ஊர்ஜிதப்படுத்தியது. அவனுடைய வழக்கமான நம்பிக்கை அவனுக்கு மட்டுமல்ல அவனை நம்பிய அடுத்த மனிதனுக்கும் அல்லவா ஆபத்தை வருவித்து விட்டது.

'பொலிஸ் டேசனுக்கு போய் முறையிடுவோமா தம்பி 'யென்று அம்மனிதர் விசாரித்தார்.

பொலிஸுக்குப் போய் என்னங்க செய்றது சாட்சியில்லாமல்...... என்ற கார்க்காரன் வழுவழுத்தான்.

'அதுவும் சரிதான்' என்று அப்பாவி மனிதர் தலையசைத்தார்.

காரும் நீர்த் தோட்டமென்ற இடத்தில் அந்த மனிதர் சொன்ன தியேட்டரடியில் போய் நின் றது. அந்த மனிதர் இறங்கினார்.

'நம்முடைய உயிர் தப்பினது போதுந் தம்பி! நான் இங்கின விசாரிச்சுப் போய்ச் சேருகிறேன். நீ பதனமாய்ப் போராசா' என்று கார்க்காரனுக்கு விடை கொடுத்தனுப்பினார்.

கார் போன வழியிலே திரும்பி சும்மா வீதி என்ற தெருவாலேயே வந்தது. எங்கிருந்தோ வேகமாக வந்த ஒரு ஜீப் வண்டியும் அந்தக் காரின் பின்னாலேயே தொடர்ந்து வந்தது.

குறித்த கார் சும்மா வீதியென்ற பிரதான வீதியிலிருந்து வலப்புறமாகவிருந்தவொரு தெருவாற் திரும்பிக் கொஞ்சத்தூரம் போய் வேறொரு முடுக்குத் தெருவால் திரும்பியோடியிருள் நிறைந்த வேறோரிடத்தில் மறைந்தது.

வேட்டை நாயைப் போல் மோப்பம் பிடித்துப் பின்னால் துரத்திவந்த ஜீப் வண்டியும் அந்தக் கார் நிறுத்தப்பட்ட இடத்திற்கு சற்றுத் தூரத்தில் போய் நின்றது.

ஜீப்பிலிருந்து ஆயுத பாணிகளாக இறங்கிப் போன இன்ஸ்பெக்டரும் பொலிஸ்காரரும் அடிமேலடி வைத்துச் சத்தமின்றி சென்று ஒரு சிறு அறையை முற்றுகையீட்டு விட்டனர்.

அந்த அறையில் நீர்த் தோட்டத்துக்குப் போய்த் திரும்பிய அதே கார்க்காரனும் இன்னம் மூவரும் மட்டுமிருந்தனர்.

ஏற்கனவே குடி போதையினால் அறிவிழந்திருந்த அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக பொலிஸ் கோஷ்டியைக் கண்டதும் கதிகலங்கி விட்டனர். சற்று முன்பு பணத்தையும் சங்கிலியையும் பறி கொடுத்த அந்த அப்பாவி மனிதரும் பொலிஸ் கோஷ்டியினருடன் காணப்பட்டார்.

'அதோ இருப்பவருடைய காரில் தான் ஐயா நான் வந்தேன்.' என்று அம்மனிதர் இன்ஸ்பெக்டரிடம் சொன்னார்.

'இவரை எனக்குத் தெரியாதையா. நான் எங்கும் போகவுமில்லை வரவுமில்லை' என்ற பதற்றத்துடன் பதிலளித்தான் கார்க்காரன்.

'நான் வெளி அரணிலிருந்து நீர்த் தோட்டத்திற்கு இவருடைய காரில் வந்ததற்கு இதோ சாட்சியிருக்கிறதையா!' என்று சாட்சியைச் சுட்டிக் காட்டினார் அம்மனிதர். அவர் சுட்டிக் காட்டிய சாட்சி இலங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சாட்சி என்ன தெரியுமா?

சற்று முன்பு அந்த மனிதர் வந்த காரை மறித்துத் திருடர்கள் கொள்ளையடிக்கும் பொழுது அம்மனிதர் பீதியினால் இதென்னடா தம்பியென்று கார்க்காரனைக் கட்டிப் பிடித்தாரல்லவா ? அப்பொழுது மை தோய்த்த தன்னுடைய கைரேகை அடையாளத்தை கார்க்காரனின் உடைகளிற் பலவிடங்களில் பதித்து விட்டிருந்தார் அம்மனிதர். அந்த ரேகை அடையாளம்தான் சாட்சி!

உடனே கார்க்காரனும் மற்றைய மூவரும் சந்தேகத்தின் பெயரில் கைதிகளாக்கப் பட்டனர். அந்த மனிதர் தன்னுடைய தினக்குறிப்புப் புத்தகத்தை விரித்து தன்னிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட ரூபா நோட்டு இலக்கங்களை இன்ஸ்பெக்டரிடம் வாசித்துக் காட்டினார். இரண்டு மூன்றைத் தவிர ஏனைய நோட்டுக்களெல்லாம் குறித்த நாலு பேரிடத்தில் இருந்தன. தங்கச் சங்கிலியும் அகப்பட்டது. இனிமேல் கைப்புண்ணைப் பார்க்கக் கண்ணாடி வேண்டியதில்லைத் தானே.

கள்வர் கோஷ்டியைப் பொலிஸ் கோஷ்டி பொலிஸ் நிலையத்துக்கு இட்டுச்சென்றது. இந்தக்குடும்பிக்கார நாட்டானா இவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் நடந்திருக்கிறான். இதென்ன கனவா நனவா என்று அந்தக் கார்க்காரன் ஆச்சரியத்தினால் அதிர்ச்சியடைந்தான்.

நீதிமன்றத்தில் நல்லவன்போல் நடித்துக் கொண்டு திருட்டுத் தொழில் புரிந்து வந்த அந்தக் கார்க்காரனுக்கும் மறைய மூவருக்கும் தலா ஐந்து வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பணத்தைப் பறி கொடுத்த அந்த அப்பாவி மனிதர் பிரபல துப்பறியும் நிபுணர் ராஜா வென்றும் ஏதோ முக்கியமான வேறொரு அலுவலாக வந்தவிடத்தில் இந்த நவீன பிக்பாக்கெட் திருடர்களைப் பிடிக்கும் வேட்டை தற்செயலாக அவருக்கு வாய்த்ததென்றும் அடுத்த நாள் காலைப் பத்திரிகைகள் கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டன.

-1957

(நன்றி : சுதந்திரன் சிறுகதைகள்) ★

**எஸ்.எல்.சவுந்தரநாயகம் ஈழத்தின் தலைசிறந்த கவிஞர். ''வன்னியூர்க் கவிராயர்'' என்ற புனைபெயரில் வீச்சான, கவிதைகளை எழுதியவர். கவிதைகளோடு நல்ல சிறுகதைகளையும் எழுதியவர். சுதந்திரன் பண்ணையில் வளர்ந்தவர். 'சுதந்திரன்' பத்திரிகையில் மட்டுமன்றி வீரகேசரி சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளிலும் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதியிருந்தவர். வவுனியா இலுப்பைக் குளத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர். ''ஈழத்துக் காவிய தீபகம்'' என்ற சிறுகதைத் தொகுதியும் வெளி வந்தது. இவர் தொழிலால் சுதேச வைத்தியர்.**

# உடலுக்குச் சமச்சீர் உணவு முக்கியம் என்பர் மருத்துவர்

# உயிருக்குச் சமச்சீர் தருவது அன்பு என்கிறார் கவிஞர்

மாளிகை போன்ற பெரிய வீடு இருக்கும். வீட்டில் எல்லா வசதிகளும் இருக்கும். வீட்டு வேலைகளைச் செய்ய பணியாளர் இருப்பர். பணப்பஞ்சம் குடும்பத் தலைவன்,தலைவி அறிந்திருக்கமாட்டார்கள். ஆனால் அன்புப் பஞ்சம் அவர்களிடம் இருக்கும். குடும்பம் என்ற தேரின் அச்சாணியே அன்புதானே. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாதே.



பாரதிதாசனின் படைப்புகளில் குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம் ஆகியன சிறிதும் அரசியற் கலப்பில்லாத இலக்கியங்கள்.

கருத்தொருமித்த தலைவன்-தலைவி எப்படி அன்பு வாழ்வு வாழ்கிறார்கள் என்பதைக் குடும்ப விளக்கில் காட்டுகிறார் அவர்.

தலைவன் தனது பணி முடிந்ததும் வீடு திரும்புகிறான். எப்போது தலைவியைக் காண்பேன் என்ற ஆர்வத்தோடு வீடு திரும்புகின்றான். தலைவி வீட்டுப் பணி முடித்து எப்போது தலைவன் வருவான் என்ற ஆர்வத்தோடு காத்திருக்கின்றாள்.

அவன் வந்ததும் உண்ணுவதற்குப் பழங்களும் பருகுவதற் குப் பாலும் தட்டில் வைத்திருக் கின்றாள்.

வீடுவந்த தலைவனுக்கு இன் சொல்லோடும் இன்முகத்தோடும் பாலும் பழமும் உள்ள தட்டை அவள் நீட்டுகிறாள்.

அன்பு என்கின்ற நதியிலே இதயத்தைத் தோய்த்தெடுத்த தலைவன் தனது தலைவியைப் பார்த்து

''*அன்றிலடி நாமிருவர்*'' என்கின்றான்.

அன்புக்குப் பாரதிதாசன் காட்டும் பறவை அன்றில் ஆகும். அன்றில் ஒன்றில்லாமல் ஒன்று உயிர் வாழாது. ஆண், பெண் இரண்டும் ஒன்றில் ஒன்று உயிரையே வைத்திருக்கும்.

## இலக்கியப் பொழில்

உடலுக்குச் சமச்சீர் உணவு முக்கியம் என்கிறார்கள் மருத்துவர்கள். உயிருக்குச் சமச்சீர் அன்பு என்கிறார் பாரதிதாசன்.

''*அன்றிலடி நாமிருவர்*'' என்று அன்பு கலந்த இன் சொல்லால் உரையாடலைத் தொடங்கிய தலைவன், தட்டில் தலைவி நீட்டிய பால், பழம் இரண்டையும் பார்த்து

''*ஆருக்கு வேண்டுமடி பழமும் பாலும்*'' என்று கேட்கிறான்.

உன்னுடைய இதழ்களைவிட பழங்கள் இனிமை உடையன அல்லவே உன்னுடைய மொழியை விட பால் இனிமையானது அல்லவே! பின்னர் பாலும் பழமும் எதற்கு என்று கேட்கிறான்.

## 'அன்றிலடி நாமிருவர் பழமும் பாலும் ஆருக்கு வேண்டுமடி'

கேட்டதோடு உரையாடலை நிறுத்தவில்லை. மேலும் தொடர்கிறான். ''*என்தன் ஆசைக் குன்றத்தில் மலர்ந்த மலர்க் கொடியே*'' என்கிறான்.

தலைவன் - தலைவி மீது வைத்த ஆசை மலை போன்ற உறுதிவாய்ந்ததாம். எக்காலத்தும் மாறாததாம். அதனால் ஆசையைக் குன்று என்றான்.

அந்தக் குன்றில் ஒரே ஒரு கொடிதான் படர முடியுமாம் அதனால் என்தன் ஆசைக் குன்றத்தில் மலர்ந்த மலர்க் கொடியே என்கிறான்.

தலைவன் பின்னும் உரையாடலைத் தொடர்கின்றான்.

மண்ணிற் குவிந்திருக்கும் சுவையான பொருள்கள் எல்லாம் ஒன்றொன்றும் மறுநாளே பழமை கொள்ளும். ஒன்றொன்றும் மறுநாளே தெவிட்டிப் போகும் என்கிறார்.

இந்த உலகத்தில் இருக்கும் சுவையான பொருள்கள் எல்லாம் சுவைத்த மறுநாளே பழசாகி விடுமாம். அடுத்த நாளே அந்தப் பொருள்களின் சுவை அலுப்புத் தட்டுமாம்.

ஆனால் தலைவி அப்படியில்லையாம். ''***அன்றன்றும் புதுமையடி தெவிட்டலுண்டோ? ஆருயிரே நீ கொடுக்கும் இன்பம்***'' என்றான்.

தலைவி கொடுக்கும் இன்பம் அன்றன்றும் புதுமையானதாம். அது நாள்தோறும் புதுமையானது. ஆதலால் அது என்றும் தெவிட்டுவதில்லையாம். என்றும் சலிப்பதில்லையாம்.

இதோ அந்த முழுப்பாடல்

''*அன்றிலடி நாமிருவர் பழமும் பாலும்*
*ஆருக்கு வேண்டுமடி என்றன் ஆசைக்*
*குன்றத்திற் படர்ந்த மலர்க் கொடியே மண்ணிற்*
*குவிந்திருக்கும் சுவையான பொருள்கள் எல்லாம்*
*ஒன்றொன்றும் மறுநாளே பழமை கொள்ளும்ஒன்றொன்றும்சிலட்டிப் போகும் அன்றன்றும் புதுமையடி தெவிட்டலுண்டோ ஆருயிரே நீ கொடுக்கும் இன்பம்*'' என்றான்.



புலவர் ம.பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோபிக்கத் தவறுகிறார் சனத் ஜெயசூரிய! இலங்கை அணியில் இரண்டு இளம்புயல்கள்!!



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான இலங்கை அணியில் இருந்து ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் சனத் ஜய சூரிய நீக்கப்பட்டுள்ளார். விளையாட்டு அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள இலங்கை அணியின் பெயர்ப்பட்டியலிலேயே அவர் இடம்பிடிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இது தவிர முன்னணி சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு மேற்கிந்திய தீவுகளுடனான ஒரு நாள் தொடரில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க காயம் காரணமாக அணியிலிருந்து நீககப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி முதலில் இரண்டு போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதனைத தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டி வரும் ஏப்ரல் 10ஆம் திகதி குவின்ஸ் பார்க்ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக இலங்கை அணியிலிருந்தே சனத் ஜயசூரிய நீக்கப்பட்டுள்ளார். வாய்ப்பு உள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. டெஸ்ட் போட்டி களில் இருந்து ஓய்வு பெற்றுள்ள 38 வயதான சனத் ஜயசூரிய அண்மைக்காலமாக ஒரு நாள் போட்டிகளிலும் சோபிக்க தவறி வருகிறார். அவர் கடைசியாக விளையாடிய 20 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் ஒரு அரைச்சதத்தைக்கூட அடையவில்லை. இந்த 20 போட்டிகளிலும் ஜயசூரிய மொத்தமாக 305 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளார். இதன் ஓட்ட சராசரி 15.25 ஆகும்.

இதன்படி ஜயசூரியவுக்கு பதிலாக மேற்கிந்திய தீவுகளுடனான ஒருநாள் தொடரில் சிலோ மேரியன்ஸ் கழகத்தின் அதிரடி ஆடடக்காரரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான மஹேல உடவத்த அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதே போன்று முத்தையா முரளிதரனுக்கு பதிலாக இராணுவ கழகத்தின் சுழற்பந்து வீச்சாளர் அஜித் மெண்டிஸுக்கு இலங்கை அணியில் வாய்ப்புக் கிடைக்கிறது.

கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தனது 23 ஆவது பிறந்த தினத்தைக் கொணடாடிய அஜித் மெண்டிஸ் இந்த பருவகாலத்துக்கான பரமியர் லீக் போட்டியில் அதிக விககெட்டுகளை (54) வீழ்த்தியவராகவும் பதிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.இதனிடையே முத்தையா முரளிதரனை எதிர்வரும் காலங்களில் முக்கியமான ஒரு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் மாத்திரம் பயன்படுத்த இலங்கை அணியின் தேர்வுக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### ஆஸ்திரேலிய அணியின் பாக். பயணம் ரத்து

ஆஸ்திரேலிய அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் பாதுகாப்புக் காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டுள்ளது என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது. எனினும் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரகள் உத்தி

## பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்தது ஆஸ்திரேலியா

யோகபூர்வமாக கைவிடப்படவில்லை என குறிப்பிட்ட ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தலைவர் கிரேக் ஓகோனர் அண்மைக் காலத்தில் அதற்கான மாற்று திகதி உறுதி செய்யப்படும் என தெரிவித்தார்.

இதன்போது பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை ரத்துச்செய்தது குறித்து அந்நாட்டு கிரிக்கெட் சபை மற்றும் ரசிகர்களிம் தமது வருத்தத்தை வெளியிட்ட கிரேக் ஓ கோனர், பாகிஸ்தானின் தற் போதைய நெருக்கடியான நிலை இந்த முடிவை எடுப்பதற்கு தூண்டியதாக குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைத் தலைவர் கிரேக ஓகோனரும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் நஸீம் அஸ்ரப்பும் அடுத்த வாரம் டுபாயில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இதன்போது எதிர்காலத்தில் போட்டி நடத்தப்படுவதறகான திகதி குறித்து முடிவு எடுக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

இதனிடையே பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தை ரத்துச்செய்தது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை மீது நஸீம் அஷ்ரப் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார். பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மற்றும் பாகிஸ்தான் கிரிகெட் சபை பாதுகாப்புக்கு உத்தரவாம் அளிக்கப்பட்ட நிலை



யிலேயே ஆஸி. தனது சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்துள்ளது.

இந்நிலையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஆஸ்திரேலிய அணியினால் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியாது என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் சதர்லாண்ட் குறிப்பிட்டார். இதன்படி ஆஸ்திரேலிய அணிக்கு 2010 ஆம ஆண்டிலேயே பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி இரண்டு டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடு வதற்காக இம்மாத இறுதியில் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள விருந்தது. கடைசியாக ஆஸ்திரேலியா அணி பாகிஸ்தான் சுற்றுப பயணம் மேற்கொண்டது இற்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று கடந்த 2002 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற கொள்ளவேண்டியிருந்தது. அதன்போதும் ஆஸி. அணி பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள மறுத்தது. இதனைத் தொடர்ந்து மேற்படி போட்டிகள் இலங்கை, ஐக்கிய அரபு ராஜ்ஜியம் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்டன. இதனிடையே பாகிஸ்தான் சுற்றுப் பயணம் ரத்தாகியுள்ள நிலையில் ஆஸி. அணி வீரர்களுக்கு ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதல் இந்திய பிரிமியர் லீக் இருபது (20) கிரிக்கெட் போட்டியில் பங்குபெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் வரும் மே மாதத்தில் ஆஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் வீரர்களை ஐ.பி.எல். போட்டிகளுக்கு அனுமதிப்பதில் சிக்கல் நிலவுவதாக ஜேம்ஸ் சதர்லான்ட் தெரிவித்தார்.

### தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் தென்னாபிரிக்கா

பங்களாதேஷுடனான மூன்றாவது ஒரு நாள் சர்வதேச போட்டியையும் 7 விக்கெட்டுகளால் இலகுவாக வென்ற தென்னாபிரிக்க அணி ஐ.சி. சி. ஒருநாள் தரவரிசை பட்டியலில் உலக சாம்பியன் ஆஸ்திரேலியாவை பின்தள்ளி முதலிடத்துக்கு முன்னேறியது.

பங்களாதேஷுடனான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் வெள்ளையடிப்புச் செய்ததை அடுத்தே தென்னாபிரிக்க அணி ஒரு நாள் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவை விடவும் 0.191 தரநிலை புள்ளிகளை மேலதிகமாக பெற்றுக் கொண்டது.

**டிலான்**

---

# கால்நடை வளர்த்து வளம் பெருக்கிய மக்கள் இன்று அவைகளாலேயே அவதியுறும் நிலைமை

**தென்மராட்சிப் பிரதேச மக்களின் உணவுத் தேவைக்குரிய அரிசி உற்பத்தியை மேற்கொள்வதில் பெரும்பங்கு வகிக்கும் வளங்களைக் கொண்ட தனங்கிளப்பு, மறவன்புலோ, தச்சன் தோப்பு போன்ற குடியிருப்புப் பகுதிகளை உள்ள டக்கியதாக தென்மராட்சி தெற்குப் பிரதேசம் அமைந்துள்ளது.**

இப் பிரதேசத்தில் நெல்வளம் மட்டுமன்றி



பனைவளம், தென்னைவளம் ஆகியவற்றுடன் கடல் வளமும் கால்நடைவளமும் இணைந்ததால் என்றும் செல்வச் செழிப்புடன் காணப்படும் பிரதேசமாக அது ஜொலித்தது. தச்சன் தோப்பு சந்தியிலிருந்து கேரதீவுப் பாலம் வரை வீதியின் தெற்குப் பகுதியில் மட்டும் குடியிருப்புப் பகுதிகள் காணப்படும். குடியிருப்புக்களின் தெற்குப் பகுதி கடல்வளமும் அதனுடன் இணைந்து பனை, தென்னை வளமும் வடக்குப் பகுதி எங்கு பார்த்தாலும் நெல்வயல்களாக காட்சி தரும் நிலப்பரப்பினைக் கொண்டிருக்கும்.

இந்த வயல்களில் வருடம் முழுவதும் செல்வத்தினைக் கொத்துக் கொத்தாக தரும் பிரதேசம் என்பதால் அந்த ஊருக்கு தனம்+களப்பு எனப் பெயர் பெற்று காலப் போக்கில் தனங்கிளப்பு எனப் பெயர் மருவியிருக்கலாம். வருடம் முழுவ தும் செல்வத்தைக் கிளப்பும் பூமி என்பதாலும் தனங்கிளப்பு என்ற பெயர் வந்திருக்கலாம்.

### கால்நடை வளம்

கால்நடை வளமும் கொண்டதாக இப்பிரதேசம் விளங்கியது. முன்னைய காலத்தில் தென்மராட்சி பிரதேசத்திற்கு மட்டுமல்ல யாழ். மாவட்டத்தில் உள்ள கடைகள், ஆலயங்கள் ஆகியவற்றுக்கு தென்மராட்சி தெற்குப் பிரதேசத்திலிருந்து பசுப்பால், ஆட்டுப்பால் கொண்டு செல்லப்படும் அளவுக்கு இப்பிரதேசத்தில் பெருமளவு கால் நடைகள் வளர்க்கப்பட்டன. சுத்தமான பசு நெய்யும் இப் பிரதே சத்தில் தாராளமாகக் கிடைத்தது.

மருத்துவக் குணம் கொண்ட கறுப்பன் நெல் அதிகமாக இப்பகுதி வயல்களிலேயே விளைவிக்கப்பட்டது. அன்றைய காலம்தொட்டு அப் பகுதி மக்களால் இயற்கை உரமாக மாடுகளின் கழிவுகளையும் குப்பைகளையும் பசளையாகப் பயன்படுத்துவதே கறுப்பன் நெல் உற்பத்தி அதிகரிப்புக் குக் காரணமாகும்.

ஒவ்வொரு வருடமும் நெல் அறுவடை முடிந்த காலம் தொடக்கம் மீண்டும் அடுத்த விதைப்புக் காலம் வரும்வரை மாடுகள், ஆடுகள் வயல்களிலேயே கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வயல்களிலும் பட்டிகள் கட்டப்பட்டு காலத்துக்குக் காலம் பட்டிகளை மாற்றி, மாற்றி கால்நடைகள் கட்டப்பட்டு வந்தன.

மறவன்புலோ பகுதியில் வசித்த 333 குடும்பங்களும் தச்சன்தோப்புப் பகுதியில் வசித்த 280 குடும்பங்களும் தனங்கிளப்புப் பகுதியில் வசித்த 142 குடும்பங்களும் கால் நடை வளர்ப்பினை தமது பிரதான தொழிலாகக் கொண்டனர்.

நெல் உற்பத்திக் காலங்களில் வயல்களிலிருந்து கிடைக்கும் புல்களும் நெல் அறுவடையின் பின்னர் வயல்களிலிருந்து கிடைக்கும் வைக் கோலும் பனை ஓலைகளும் மாடுகளுக்கு உணவாகவும் ஆடுகளுக்குத் தீனியாகப் பயன்படுத்தும் இலை வகைகளும் அப்பகுதியில் தாராளமாகக் கிடைத்தாலும் மாடுகள், ஆடுகளின் குடிதண்ணீர்த் தேவைக்கென அமைக்கப்பட்ட குளங்களும் பிரதேசத்தில் இருந்ததால் கால்நடை வளர்ப்பதில் அப்பிரதேச மக்கள் எந்தவொரு கஷ்டத்தையும் அனுபவிக்கவில்லை.

தென்மராட்சி விவசாய மக்களின் இன்றைய நிலை

அப் பிரதேசத்தில் வசித்த அனைத்துக் குடும்பங்களுக்கும் நெல் வயல்கள் இருந்ததால் ஒவ்வொரு குடும்பமும் கால்நடைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினர். மாடுகள், ஆடுகளை பட்டியில் வளர்ப்பதையே அனைவரும் விரும்பினர். அப்பகுதியில் திருமணமாகும் பெண்ணுக்குச் சீர்வரிசையாக ஒரு பட்டி மாடுகள், ஆடுகள் வழங்கும் முறை இப்பிரதேசத்தில் மட்டும் இருந்துள்ளது.

புகழ்பூத்த பூமிக்கு இடி வீழ்ந்ததைப் போல;

இவ்வாறான புகழ்பூத்த பூமிக்கு இடிவீழ்ந்தது போல கடந்த 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி இரவு அனைத்து மக்களும் வெளியற வேண்டிய நிலை ஏற்பட்டது.

வயல்களில் அறுவடைக்கு தயாரான நிலையில் காணப்பட்ட நெற்பயிர்கள், கடலில் விரிக்கப்பட்ட வலைகள் ஆகியவற்றைக் கைவிட்டு கையில் அகப்பட்ட பொருள்களுடன் பிரதேச

## கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து வழங்கும் திட்டம் பலன் அளிக்கும் அறிகுறி

மக்கள் உயிர் பாதுகாப்புத் தேடி தென்மராட்சி பிரதேசத்திற்கு ஓடினர். வளம்கொழிக்கும் செல்வங்களையும் வீட்டு உடைமைகளையும் கைவிட்டு ஓடியபோதிலும் பட்டிகளில் கட்டப்பட்டிருந்த மாடுகள், ஆடுகளை கட்டவிழ்த்துவிட எவரும் மறக்கவில்லை. கால்நடைகளைக் கட்டவிழ்த்துவிடச் சென்ற சிலர் தமது உயிர்களைக் காவு கொடுத்தும் காயமடைந்தும் உள்ளமை அப்போதைய காலத்து பத்திரிகைகளில் முதன்மைச் செய்திகளாயின. மூன்று வருடங்களாக அப்பிரதேசம் யுத்தப் பிரதேசமாக இருந்ததால் அங்கு கைவிட்டு வந்த தமது கால்நடைகள் அழிந்திருக்குமென்ற கவலையில் ஒரு சிலர் தமது உயிர்களை நீத்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 2003ஆம் ஆண்டு மறவன்புலோ பிரிவு மக்களை மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போது தமது குடியிருப்புக்களை பார்வையிடச் சென்ற மக்கள் அப்பகுதி வயல்களில் பெருமளவு மாடுகள் நடமாடுவதை அவதானித்து பெரு மகிழ்வு கொண்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எமது வரலாறு, பாரம்பரியங்களை அறிவதற்கு இசை, நாடகங்கள் பெரிதும் உதவுகின்றன

ஈழத்தின் இசை, நாடகத் துறையில் தொடர்ச்சியாக மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்தவராக ஈடுபட்டுவருபவர் ஆர்மோனியச் சக்கரவர்த்தி பிலிப் ஜோன் கபாஸ். ஈழத்தின் புகழ்பெற்ற இசை நாடக நடிகர்களாக விளங்கிய நடிகமணி வி.வி வைரமுத்து, வி.என்.செல்வராஜா ஆகியோரது நாடகங்களுக்கும் கலா வினோதன் சின்னமணி, ஸ்ரீதேவி ஐயர் முதலிய வில்லிசைக் கலைஞர்களுக்கும் ஆர்மோனியம் வாசித்த பெருமைக்குரியவர். மெலோடிக்கா, எக்கோடியன், கீபோட் முதலிய மேலைத்தேச இசைக் கருவிகளை வாசிப்பதிலும் கைதேர்ந்தவர். ஆர்மோனியத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர்செய்யும் தொழில் நுட்பவியலாளராகவும் செயற்படுபவர். அவரது உரும்பிராய் இல்லத்தில் சந்தித்தோம்.

*கேள்வி:* உங்களுக்கு ஆர்மோனியம் வாசிப்பதில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

*பதில்:* எனது பேரனார் அந்தோனிப்பிள்ளை நாட்டுக் கூத்துக்கள் பழக்கிய அண்ணாவியார் அத்துடன் சிறந்த நடிகரும் கூட. எனது தந்தையார் பிலிப்பும் அண்ணாவியராக இருந்ததுடன் சிறந்த ஆர்மோனிய வித்துவானாகவும் இருந்தார். இதனால் எனது இசைத்துறை ஆர்வம் எனது குடும்ப வழியாக வந்தது. நான் 16 ஆவது வய திலேயே ஆர்மோனியம்வாசிக்கத்தொடங்கி விட்டேன்.

*கே:* ஆர்மோனியம் யாரிடம் கற்றீர்கள்?

*ப:* எனது தந்தையாரிடமே அதனைக் கற்றுக் கொண்டேன். அவர்இலங்கை வானொலி, ரூபவாஹினி என்பவற்றிலே ஆர்மோனியம் வாசித்து புகழ்பெற்ற ஒருவர். அவரிடம் ஆர்மோனியத்தை மட்டுமல்ல சங்கீதமும் கற்றேன். பின்னர் ஊரிக்காடு நடராசா என்ற சங்கீத வித்துவானிடமும் சங்கீதம் கற்றிருக்கிறேன்.

*கே:* நீங்கள் எந்தெந்த இசை நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசித்திருக்கிறீர்கள்?

*ப:* ஈழத்திலே சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயான காண்டம், பவளக்கொடி, அல்லி அர்ச்சுனா, கோவலன், பூதத்தம்பி முதலிய 12 இசை நாடகங்கள் உள்ளன. நான் பெரும்பாலும் அவை எல்லாவற்றுக்குமே ஆர்மோனியம் வாசித்திருக்கிறேன்.

*கே:* இசை நாடகங்களில் ஆர்மோனியத்தின் முக்கியத்துவம் என்னவென நினைக்கிறீர்கள்?

*ப:* இசை, நாடகத்துக்கு உயிரூட்டுவதே ஆர்மோனியம் தான். அது இல்லை என்றால் இசை, நாடகம் இல்லை. ஆர்மோனியம் மூலம் நடிகர்களைச் சுருதி பிசகாமற் பாடச் செய்ய முடியும். துணை வாத்தியங்களான மிருதங்கம் முதலியவையும் முக்கியமானவையே.

*கே:* நாடகத்திற் பாடுபவர் சுருதி தவறிச் செல்லும் போது எவ்வாறு சீர் செய்வீர்கள்?

ப: ஒரு நடிகர் தனக்குரிய வசனம், நடிப்பு என்பவற்றுடன் பாட்டுக்களையும் பாட வேண்டியுள்ளது. ஒரே நேரத்திற் பல விடயங்களைக் கவனிக்கும் போது சுருதி மாறிப்பாடும் நிலை ஏற்படலாம். சிலர் வசனம் பேசிய பாணியிலேயே தொடர்ந்து பாடவும் முயற்சிப்பர். இத்தகைய நிலையிலே தொடர்ந்து பாட முடியாது ஆர்மோனியக் காரரையே பார்ப்பார்கள். அவ்வேளை சரியான சுருதியை எடுத்துக் கொடுத்து அவர்களைப் பாடச் செய்வோம். இசை நாடகங்களில் உள்ளபெரும்பாலான பாடல்களும், மெட்டுக்களும் எனக்கு மனப்பாடமாக இருப்பதும் அதற்குத் துணையாகின்றது.

*கே:* இன்று ஆர்மோனியக் கலை செல்வாக்கு இழந்து வருவதாகக் கூறப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன?

*ப:* அவ்வாறு கூறப்படுவது தவறானதாகும். 'கீபோட்' முதலிய நவீன இசைக் கருவிகள் வந்து விட்டாலும் இசை, நாடகங்கள், காவடி, கரகாட்டம் முதலிய கிராமியக் கலைகளுக்கு 'கீபோட்' வாசிக்க முடியாது. ஆர்மோனியம், உடுக்கு, மிருதங்கம் போன்ற பாரம்பரிய இசைக்கருவிகள்தான் இங்கு பயன்படும்.

*கே:* ஈழத்திற் புகழ்பெற்ற ஆர்மோனிய வித்துவான்கள் சிலரது பெயரைக் கூறுங்கள்.

*ப:* ஈழத்தில் கேசவராஜா, றொபேட் முதலியவர்கள் முக்கியமானவர்கள். இப்போது என்னிடம் ஆர்மோனியம் கற்று வரும் பரமேஸ்வரன் கோவேஎன் எனது எதிர்கால நம்பிக்கையாகத் திகழ்கிறார்.

கே: இசை நாடகங்களாற் சமூகத்திற்கு என்னென்ன நன்மைகள் கிடைக்குமெனக் கருதுகிறீர்கள்?

*ப:* தொலைக்காட்சி, தனியார் கல்வி நிலையங்கள் போன்றவற்றால் மாணவர்களுக்கு நூல்களை வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. இதனால் இன்றைய சிறுவர்கள் எமது பழைய சரித்திரங்களை அறிய முடியாது.

இந்நிலையில் அவற்றை நாடகங்களாக நடித்தால் அனைவரும் அறிந்து கொள்வார்கள். எமது பாரம்பரியக் கலைகளான இசைக்கலை, ஆடற்கலை என்பவற்றை இளையவர்கள் அறிந்து கொள்ள உதவுவதுடன் எமது சரித்திரத்தைப் பேணிப் பாதுகாத்துத் தருபவையும் இசை நாடகங்களே.

*கே:* இசை, நாடகத்துறையை வளர்க்க நீங்கள் எத்தகைய முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறீர்கள்?

*ப:* நான் இணுவில் இளந்தொண்டர் சபையுடன் இணைந்தேசெயற்படுகிறேன். இச் சபையில் இருவகையான நாடகக் கலைஞர்கள் இருக்கின்றனர். இவர்கள் நாடகத்துறையில் அனுபவம் பெற்ற இளைஞர்கள் ஒரு குழுவாக இயங்குகின்றனர். இவர்கள் சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரன் முதலிய நாடகங்களைப் பழகியிருக்கின்றனர்.

14, 15 வயதுச் சிறுவர்கள் இன்னொரு குழுவாக உள்ளனர். இவர்களுக்கு ந. பரமேஸ்வரன் நாடகங்களைப் பழக்குகிறார். நானும் இணைந்து பணியாற்றுகிறேன். இவர்கள் பக்த நந்தனார், திருஞானசம்பந்தர், குசேலர் ஆகிய நாடகங்களைப் பழகி மேடையேற்றியுள்ளனர். பக்க வாத்தியங்களையும் இவர்களே வாசிப்பது இன்னொருசிறப்பாகும்.

*கே:* தற்போதைய இளைய இசைநாடக நடிகர்களில் உங்களுக்குப் பிடித்தவர் யார்? காரணம் என்ன?

*ப:* எனக்குப் பிடித்த இளைய நடிகர் சி. செந்தில்வேல்தான்.

இவர் சிறந்த நகைச்சுவை நடிகர். அதுமட்டுமன்றி ஆண் பாத்திரம், பெண் பாத்திரம் எதுவானாலும் தயங்காமற் செய்பவர். நாம் கொடுக்கும் வசனங்களைவிடத் தனது கற்பனையுடன் புதிய வசனங்களையும் சேர்த்துச் சபையைக் கலகலப்பாக்குபவர்.

*கே:* நீங்கள் பெற்ற பட்டங்கள் விருதுகள் பற்றிக் கூறுங்கள்?

*ப:* அண்மையிற் கொழும்பு தமிழ்ச் சங்கம் "ஆர்மோனியச் சக்கரவர்த்தி"என்ற பட்டம் தந்து கௌரவித்திருக்கின்றது. பாரம்பரிய கலை மேம்பாட்டுக் கழகம் "மரபுக் கலைச் சுடர்" என்னும் பட்டத்தையும் தந்துள்ளது.



## அவற்றை இளைஞர்களுக்குப் பயிற்றுவிப்பது அவசியம் என்கிறார் இசை, நாடக மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்த ஆர்மோனியச் சக்கரவத்தி ஜோன் கபாஸ்

செவ்வி கண்டவர்:
ம.பா.மகாலிங்கசிவம்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 04




அனுப்புபவர் பெயர்:........................

விலாசம்:........................

........................

கையொப்பம்:........................

**இடமிருந்து வலம்**

1. வன்செயல்களினால் நாட்டில் மலிந்து போனவர்கள்.
5. சபை
7. சுக்கு, திப்பிலி, மிளகு.
8. வயது
9. பருத்தித்துறையில் ஒரு கிராமம்.
11. துப்பாக்கியிலிருந்து பாய்வது.
12. லிபிய நாட்டின் தலைவர்
13. விலை உயர்ந்த உலோகம்.
14. நாட்டில் தமிழ் மக்கள் மீது கேட்பாரின்றி மேற்கொள்ளப்படுவது.
15. வீரம்.
16. பெரியது; காய்க்கும்; பழம் சுவையானது
18. இணைப்பு.
20. ஒரு நாளின் அரைப் பங்கு.
21. இந்திய நாட்டின் தலை நகரம்.

**மேலிருந்து கீழ்**

1. ஜனாதிபதியின் கையில் குவிக்கப்பட்டிருப்பது.
2. யானை.
3. தினமும் மாறுவது.
4. காதணி.
5. கூட்டு.
6. நங்கையர்.
8. பெண் தெய்வம்.
10. ஆண் ஆடு.
13. இந்த உணர்ச்சி இல்லாததால்தான் இலங்கை இப்படி இருக்கிறது.
15. மீட்டப்படுவது.
17. அரையில் அரை.
18. வேறுபடுத்து.
19. நவீன.
20. இது நன்றாக இருந்தால் சிரிப்பு அழகாக இருக்கும்.
21. ஒரு வகை வெண்பா.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 200/=, ரூபா 100/=, ரூபா 75/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்*

சொற்சிலம்பம் போட்டி இல. 04
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (02.04.2008) முன்னர் கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைக்கப் படவேண்டும்.*

*7. வெற்றி பெற்றோர் விவரம் 06.04.2008உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி 01 இற்கான சரியான விடைகளில் மே/கீ (19) 'கனி' எனவும், இ/ வ (17) தங்குதல் எனவும் தவறுதலாக அச்சாகிவிட்டன. முறையே களி, தங்குதன் என்பதே சரியான விடையாகும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 02 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1) இந்திரா. (3) காந்தி. (5) ரிஷி. (6) மரகதம். (8) ரம். (11) இன்பதுன்பம். (14) பாடை. (15) திரு. (16) பரு. (18) வடம். (19) திராவிடம். (20) வளி.

மேலிருந்து கீழ்
(1) இராமன். (2) தினகரன். (3) காமம். (4) திரிபு. (7) தம்பதி. (9) தேன். (10) நம்ப. (11) இடை. (12) துருவம். (13) பருவம். (14) பாரதி. (17) புவி.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 02க்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு
கணபதிப்பிள்ளை சிவநாதன்
வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரம்,
வேலணை.

2 ஆம் பரிசு
கி.வர்ஜனி
தரம் 10-A, வடமராட்சி மத்திய
மகளிர் கல்லூரி, நெல்லியடி.

3 ஆம் பரிசு
திருமதி வி.வசந்தகுமாரி
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களின் முகவரிக்குக் காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நன்றி.

★ தத்தமது பொதுஉளச் சார்பு மற்றும் மொழியறிவை வளர்த்துக்கொள்ள வாசகர்களைத் தூண்டு ... முக்கிய ... கோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீமையால் நன்மையை வெல்ல முடியாது இதுவே ஈஸ்ரர் நமக்களிக்கும் செய்தி



யாழ்.ஆயர் மேதகு தோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகை

இன்று எம்மை சூழப் படுகொலைகளும் அகால மரணங்களும் காணாமல் போதல்களும் உயிர் அச்சுறுத்தல்களும் பாதுகாப்பற்ற, பதற்ற நிலைகளும் பரவிக் கிடக்கின்றன.

மனித வாழ்வு அச்சமும் பயமும் நிறைந்ததாய் பாதுகாப்பின்றி பீதியுடன் வாழப்பட வேண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடியும் வேலையில்லா நிலையும் தொடரும் இராணுவ நடவடிக்கைகளும் எதிர்நோக்கற்ற அரசியல் கள நிலையும் அச்சம் நிறைந்தவையாக்கியுள்ளன.

இச்சூழமைவில் மீண்டுமோர் ஈஸ்ரர் விழாவை எதிர்கொள்ளுகின்றோம். ஆண்டவர் இயேசு தமது பாடுகள் மரணம் வழியாக இறந்து மீண்டும் உயிர் பெற்று நமக்கு ஒரு புதுவாழ்வை அளிக்கின்றார். அவரின் உயிர்ப்பு உலகிற்கு புதிய நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

எத்தகைய தீமைகள் நம்மை சூழ்ந்து கொண்டாலும் அவற்றிற்கு ஓர் முடிவுண்டு. பொய்மையால் உண்மையை வெல்ல முடியாது; இருளினால் ஒளியை ஆட்கொள்ளமுடியாது. தீமையால் நன்மையை வெல்லமுடியாது என்பதே ஈஸ்ரர் நமக்கு அளிக்கும் செய்தியாகும்.

உயிர்த்த இயேசு தன் சீடர்களை நோக்கி 'நீங்கள் என் சாட்சிகள்' என உரைத்து உண்மைக்கு சாட்சியம் பகிர அழைத்து நிற்கின்றார்.

'உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையை சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவி சாய்க்கின்றனர். *(யோவான் 18-37)* என்று பிலாத்துவுக்கு இயேசு கூறிய பதில் இதனையே சாற்றி நிற்கின்றது. உண்மை அலட்சியம் செய்யப்படுமிடத்து எல்லாமே சுக்கு நூறாகும் என்பது இதில் அடங்கியுள்ள தத்துவமாகும்.



ஆயினும் கிறிஸ்துவின் உயிர்ப்பு தருகின்ற நம்பிக்கையில்தான் இன்னும் எம் வாழ்வு கடந்து சென்று கொண்டிருக்கின்றது.

## சாட்சியம் பகர அழைக்கின்றார் உயிர்த்த இயேசுக் கிறிஸ்து

**இன்று உயிர்த்த ஞாயிறு**

இன்று எமது தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும், அரசியல் வாழ்வி லும் பொய்மைகள் உண்மைகளாக கருதப்பட்டு அவ்வாறு உண்மைகளாக்கப்பட்ட பொய்மைகளை அடித்தளமாகக் கொண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் துர்ப்பாக்கிய நிலை காரணமாகத்தான் இறை பிரசன்னத்தை பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றோம். பொய்மைகள் நிறைந்த சூனியமான வாழ்வுக்கு அகப்பட்டு வாழ முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றோம். சமாதானத்துக்கான எமது முயற்சிகளெல்லாம் தோல்வியடைந்து வருகின்றன.

'எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக்கூடாது'' (1 தெச 4:13) என்னும் பவுலின் அறிவுரையை நினைவுபடுத்தி எமது வாழ்வினால் உண்மைக்கு வாழ்வு கொடுக்க நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

துன்பமும் துயரமும் நிறைந்த எம் வாழ்வில் மீண்டும் இயேசுவின் உயிர்ப்பு விழா, எத்தகைய தீமைகள் எம்மை சூழ்ந்து நின்றாலும் இயேசு தரும் புதுவாழ்வினால் நன்மையே வெல்லும், உண்மையே உயர்வு தரும் என்பதை நிஜமாக்குகின்றது.

இப்புதுவாழ்வை நோக்கி உயிர்த்த ஆண்டவர் ஆவியில் தரும் வல்லமையோடு புதுயுகம் அமைக்க முன்னகர்வோம்.

## உயிர்ப்பு; சாவினை வெற்றி கொண்ட நிகழ்வு



எம் பெருமானின் உயிர்ப்பு அன்றிலிருந்து இன்று வரை மானிடத்தே மலரச் செய்கின்ற ஒரு மாண்புமிகு செயல். மனிதன் இறைவனாகப் புரிந்துகொள்ளப் பட்ட ஒரு நிகழ்வாகும். உலக அதிகாரத்தையே இரண்டாக்கிய ஒரு வரலாற்று நிகழ்வு அதுவே இயேசுவின் உயிர்ப்பாகும்.

எம் பெருமானின் உயிர்ப்பானது ஆவிக்குரிய உடல் கொண்ட உயிர்ப்பாகும். இது அவரது உயிர்த்தெழுதல் மூலமாக நடைபெற்றது. இது முற்றுமுழுதாக உடல் சார்ந்த உயிர்த்தெழுதல் என்று கூறமுடியாது. எனவே நாம் இயேசுவின் உயிர்ப்பினை நடுநிலை நின்று நோக்கவேண்டும். அப்போதுதான் அதனை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

பரிசுத்த வேதாகமத்தின் நற்செய்தி நூல்கள், இயேசு உடலோடு உயிர்த்தார் என்றும், இயேசு புத்துயிர் பெற்றவராக உயிர்த்தார் என்றும் சான்று பகிர்கின்றது.

எனவேதான், ஆண்டவரின் சீடர், அவரை இலகுவாக அடையாளம் காணமுடியாதவர்களானார்கள். அவர் பழைய மனித உடலோடு எழுந்தாரேயெனின் சீடர்கள் அவரை இலகுவாக அடையாளம் கண்டிருப்பர். எனவே இயேசுவின் உயிர்ப்பும் முற்றுமுழுதாக உடலோடு சார்ந்த உயிர்ப்பு மட்டுமல்ல அது ஒரு புத்துயிர் கொண்ட உயிர்ப்புமாகும்.

ஆண்டவரின் உயிர்ப்பு, வரலாறு கடந்த ஒரு நிகழ்வாகப் புரிந்துகொள்ள முற்படவேண்டும். ஏனெனில் உயிர்ப்பு என்பது சாவின் வெற்றி கொண்ட ஓர் உன்னதமான நிகழ்வாகும் வரலாற்றிற்கு மேற்பட்ட மேன்மை பொருந்திய நிகழ்ச்சி எனலாம். ஏனெனில், இறைவன் தனக்கும் மனிதனுக்குமிடையில் நடத்திய பெரிய நிகழ்ச்சி இதுவாகும். இயேசுவின் உயிர்ப்பானது காலத்தையும், இடத்தையும் கடந்த ஓர் உன்னத நிகழ்வாகும். இது ஒரு சாதாரண ஒரு வரலாற்று நிகழ்வாகப் புரிந்துகொள்ள முடியாது. அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பை ஒரு வரலாற்று நிகழ்வாகக் காண்பிக்க முனையவில்லை. இதற்கு அடிப்படையான காரணம் என்னவெனில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஆள்த்தன்மை வாய்ந்த உள்ளரங்கமான, உயிரூட்டமுள்ள விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப் படவேண்டிய மறையுண்மையாகும்.

**வண. எஸ்.கே.கதிர்காமர்,**
*குருமுதல்வர், யாழ்.மெதடிஸ்த திருச்சபை.*

இடுக்கமான வழி, துன்பம், தியாகம், நீதித்தன்மை வாய்ந்த செயல், சகிப்புத்தன்மை போன்ற சிலுவையின் வழியே முத்தி நெறிக்குள் எம்மை வழி நடத்தும் என்பதையும் அதுவே ஒவ்வொரு மனிதனின் வெற்றி வாழ்வாகும்.

கிறிஸ்தவ பற்றுதியானது இயேசுவின் வரலாறு கடந்த உயிர்ப்பின் மீதானதே.

மரணத்தின் கூர்ஒடிந்த ஆண்டவரின் சமாதானமும், மகிழ்ச்சியும் அனைவரோடும் இருப்பதாக.

## நியாயாதிபதியாக கிறீஸ்து வருவார்

*'அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார்'(லூக்கா 24:6)*

*சிலுவையில் மரணமடைந்த இயேசு, அவரது மரணம் போர் வீரர்களால் உறுதிப்படுத்தப் பட்டு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட இயேசு, இப்போ எங்கே? புழுக்கள் அவரது உடலை அரித்தனவா? அல்லது தோல் அழுகி மாமிசம் அழுகி மண்ணோடு மண்ணானதா? இல்லை. மண்ணைப் படைத்த தேவனையே அந்த மண்ணால் தனக்குள் உள்வாங்கமுடியுமா? முடியாது. அப்போ இயேசு எங்கே? கல்லறைக்கு ரோமப் போர்வீரர்களும் காவல் இருந்தார்களே. அவர்களையும் மீறி, அவருக்கு என்ன நடந்தது? கல்லறையின் வாசலை மூடி அடைத்திருந்த அந்தப் பாரிய கல்கூட உருண்டுபோய்க் கிடந்ததே, என்னவானது? அந்தக் கல்லைப் புரட்டுவது எப்படி? போர்வீரரை மீறி அவரது உடலை அபகரிப்பது எப்படி? அப்படியானால் இயேசு எங்கே? அவர் எங்கே? அன்று அவருடைய சீடர்கள் உட்படச் சகலரும் திகைத்தனர். இன்றைக்கோ அவர் இருந்தும் கடவுள் எங்கே என்று மானிடன் திகைத்து அலைகிறான். இது வேடிக்கை அல்லவா!*

*ஆம், இயேசு உயிர்த்தெழுந்தார். கர்த்தர் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த ஆண்டவர் தம்மைப் பின்பற்றிய பெண்களுக்கும் சீடர்களுக்கும் பல தடவைகள் காட்சி தந்தார். அவர்களோடு பேசினார். உணவு உண்டார். சந்தேகித்த தோமா என்பவனை அழைத்து தனது விலாவிலே ஈட்டியால் குத்தப்பட்ட துவாரத்திலே கைபோடச் சொன்னார். இது உலக சரித்திரத்தில் முன்னும் பின்னும் இனியும் நடக்காத நடக்கக்கூடாத நிகழ்வு. ஆனால், இவ்வுலகத்தின் முடிவில் நடக்கப்போகும் ஓர் உண்மை நிகழ்வை உறுதிப்படுத்தும் நிகழ்வு இது. சரீர மரணத்தின் பின்னரும் நமது ஆத்மா வாழும் என்ற நிச்சயத்தை நிலைநாட்டிய நிகழ்வு இது. பரலோகம் ஒன்று நமக்காக ஆயத்தமாக இருக்கிறது என்பதையும் நாம் நித்தியமாய் வாழுவோம் என்பதையும் நமக்குத் தெளிவுபடுத்திய நிகழ்வு இது. இது சத்தியம். என்றும் மாறாத உண்மை.*

*இயேசு உயிர்த்தெழுந்தார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது எவ்வளவு நிச்சயமோ, அந்த மரணத்தின் கூரை இயேசு ஒடித்தார் என்பதுவும் அதிக நிச்சயம். பாவத்தில் வாழ்கிறவன் கடவுளை விட்டுப் பிரிக்கப்படுவதால் ஒரு செத்துப்போன வாழ்வு வாழ்வது எவ்வளவு நிச்சயமோ, தன் பாவத்தை இயேசு மன்னித்தார், தனக்காக அவர் மரித்தார் தன் தண்டனைக்குரிய பரிகாரத்தை இயேசு செய்துமுடித்தார் என்பதை எவன் விசுவாசித்து, எவன் கடவுளோடு ஒப்புரவாகிறானோ, அவன்அந்த மரணத்தை ஜெயித்து என்றும் கடவுளோடு வாழுவதும் நிச்சயம். ''நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' என்றார் இயேசு. ஆம், நமக்கு நமது சரீர மரணத்திற்கு அப்பாலும் வாழ்வு உண்டு என்பதை நிச்சயப்படுத்தியவர் இயேசு.*

*உயிர்த்தெழுந்து நாற்பது நாள்கள் பலருக்குத் தரிசனமான ஆண்டவர், பரலோகத்திற்கு ஏறியபோதும், தாம் திரும்பவும் வருவேன் என்றார். ஆம், அவர் இனி ஒரு குழந்தையாக அல்ல; நியாயாதிபதியாக தம்முடையவர்களைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளும் மகாராஜாவாக கிறிஸ்து வருவது நிச்சயம். அன்று அவரைக் குத்தியவர்களும் அவரைக் காண்பார்கள் என்று பரிசுத்த வேதாகமம் சாட்சி பகருகிறது. அன்று நானும் நீங்களும் என்ன செய்வோம்!*

- சாந்தி பொன்னு.

## வரலாற்றுச் சிறப்புடன் இன்றைய உயிர்ப்புப் பெருவிழா

இளவேனிற் பருவகாலத்து பகல் இரவு சமனான பொழுது, ஞாயிறு நில நடுக்கோட்டினைக் கடந்து செல்லும் வேளை உண்டு. (இவ்வாண்டு மார்ச் 20ஆம் திகதி) அதன் பின்வரும் முதலாவது பூரணையைத் தொடர்ந்து வரும் முதல் ஞாயிறு தினத்தில் இயேசுவின் உயிர்ப்பு விழா எப்பொழுதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இது யூத மக்கள் பயன்படுத்திய மாநிலாவட்ட ஆண்டுக் குறிப்பேட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. இக்குறிப்பேட்டிற்கு ஒப்பவே யூதமக்கள் பாஸ்க்கா என்னும் விடுமுறைத் திருவிழாவையும் கொண்டாடி வந்தனர்.

இரண்டு மறையுலா மதிகளுக்கு இடைப்பட்ட காலத்து இருபத்தொன்பதரை நாள்கள் கொண்ட மாத மாநிலாவட்டம் தழுவிய ஆண்டு நாள்குறிப்பேட்டிற்கும், கிறிஸ்துவுக்கு முன் 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் உரோமையர்களால் கடைப்பிடிக்கப்பட்டும், காலா காலத்தில் 16ஆவது நூற்றாண்டுவரை திருத்தந்தை 13ஆம் கிறகோரியாருடைய மாற்றங்களை உள்வாங்கியும் இன்று பொதுவாகப் பின்பற்றப்படும் உரோமை ஆண்டு நாள் குறிப்பேட்டிற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளபடியினால்தான், உயிர்ப்பு விழா கொண்டாடப்படும் நாள் ஆண்டின் முற்பகுதியில் பிந்தியும் முந்தியும் வருகின்றது.

இம்முறை மார்ச் 23இல் இன்று கொண்டாடப்படும் உயிர்ப்பு விழாவே எமது வாழ்நாளில் காணக்கூடிய, ஆண்டின் முற்பகுதியில் அதாவது மார்ச் மாதம் நான்காவது கிழமையில் வரும் ஒருநாளில் கொண்டாடப்படும் ஒரே ஒரு உயிர்ப்புத் திருவிழாவாகும். அடுத்த முறை இதேநாளில், அதாவது மார்ச் 23ஆம் நாள், உயிர்ப்பு விழாக் கொண்டாட்டம் இன்றிலிருந்து 220 ஆண்டுகளுக்கு பிற்பாடுதான், கி.பி 2228ஆம் ஆண்டில் நிகழும். இறுதி முறையாக இதேநாளில் ஆண்டின் முற்பகுதியிலே 1913 இலே தான் உயிர்ப்பு விழா நிகழ்ந்தது.

மார்ச் 22ஆம் திகதி உயிர்ப்பு விழாகொண்டாடப்பட்ட கடைசி ஆண்டு 1818. அதே திகதியில் அடுத்தமுறை கொண்டாடுவது இன்றிலிருந்து 227 ஆண்டுகளுக்கு பின்புதான். அதாவது 2285 இல் நாம் எவரும்இவ்விழாக்களை பார்ப்பதற்கு இருக்கமாட்டோம் என்பது வெளிப்படை.

ஆகவேதான் இவ்வாண்டின் மார்ச் 23ஆம் நாள் வரும் உயிர்ப்பு விழா வரலாற்றுச் சிறப்புமிக்கது.

*யாழ். ஆயரின் செயலர் **வணபிதா எஸ்.ஏ. றொசான் அடிகளார்.***

## யாழ்ப்பாணக் கோட்டை போர்த்துக்கீஸரிடமிருந்து ஒல்லாந்தரிடம் வீழ்ச்சியுற்ற நாள்

**1658 மார்ச்**

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

1658ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணக் கோட்டையைப் போர்த்துக்கீஸரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றினர். போர்த்துக்கீஸரிடமிருந்து கோட்டையைக் கைப்பற்றியதுடன் போர்த்துக்கீஸரின் ஆட்சியின் கீழிருந்த யாழ்ப்பாணப் பட்டணம் (யாழ்ப்பாண இராச்சியத்தை வெளிநாட்டவர்கள் யாழ்ப்பாணப் பட்டணம் என்றே அழைத்துள்ளனர்) ஒல்லாந்தர் வசமானது. போர்த்துக்கீஸர் ஒல்லாந்தருடன் பெரிதாகச் சண்டைபிடித்ததாகத் தெரியவில்லை. சரணடைந்தார்கள் என்றே சொல்லலாம். நான்கு மாதங்களில் டச்சுக்காரர் போர்த்துக்கீஸரிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டனர்.

ஒல்லாந்தர் கோட்டையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து போர்த்துக்கீஸர் யுத்தக் கைதிகயாகப் பிடிக்கப்பட்டார்கள். போர்த்துக்கீஸரின் குடியிருப்புகள் தோட்டங்கள் யாவும் ஒல்லாந்தரால் அழித்தொழிக்கப்பட்டன. போர்த்துக்கீ'ஸரின் மனைவிமார் மானபங்கப்படுத்தப்பட்டனர். போர்த்துக்கீஸ யுவதிகள் (போர்த்துக்கீஸரின் மகள்மார்) டச்சுக்காரரால் நாள் குறிக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர்.

ஒல்லாந்தர் போர்த்துக்கீஸரிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது உள்ளூர்வாசிகளுக்கு இழப்புகள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்த்து வளம்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

**8 ஆயிரம் மாடுகள் கட்டாக்காலியாக அலைகின்றன**

கைவிட்டுச் சென்ற செல்வங்கள் தம்மிடம் மீண்டும் கிடைக்கும் சந்தோஷம் பிரதேச மக்களுக்கு ஏற்பட்டது.

ஆனால் அவர்களின் எண்ணம் கை கூட வில்லை. மீளக் குடியேறிய மக்கள் தமது மாடுகளைத் தம்வசப்படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. நான்கு வருடங்களாகச் சனநடமாட்டமில்லாத பகுதிகளில் கட்டாக்காலியாக அலைந்த திரிந்த மாடுகள் அவற்றின் உரிமையாளர்களைக் கண்டாலும் தலைதெறிக்க ஓடத் தொடங்கின. இந்நிலையில் கட்டாக்காலிகளாகத் திரிந்த மாடுகளை தடம் வைத்துப் பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்வதில் வேறு பிரதேசத்தினர் சிலர் ஈடுபட்டனர். தமது வளர்ப்பு மாடுகளை இறைச்சிக்காக விற்பனை செய்வதில் ஈடுபடுவதை அவதானித்த மீளக் குடியமர முடியாத நிலையில் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் தாம் மீளக்குடியமரும் வரை மாடுகள் பிடிக்கப்படுவதை தடை செய்யுமாறு அரச அதிகாரிகளுக்கும் படை அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தனர். இதனையடுத்து கடந்த இரண்டு வருடங்களாக அப்பகுதியில் மாடுகள் சட்டவிரோதமாக பிடிக்கப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது. இடப்பெயர்வுக்கு முன்னர் ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் குறைந்தது பத்துத் தொடக்கம் நூறு மாடுகள் வரை இருந்துள்ளன. இடப்பெயர்வின் போது சுமார் 4 ஆயிரம் மாடுகள் கைவிட்டு வந்திருக்கலாமெனகணக் கிடப்பட்டுள்ளது.

யுத்த வேளையில் வெடிகளில் சிக்கி பலியானதும் பின்னர் இறைச்சிக்காக பிடிக்கப்பட்டதுமாக சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் போக, தற்போது 7ஆயிரம் தொடக்கம் 8 ஆயிரம் வரையான மாடுகள் அங்கு கட்டாக்காலியாக அலைவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக அலையும் மாடுகளுக்கு போதிய உணவு வசதி கிடைக்காததால் அவை உணவைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டது. இதனால் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வேளையில் பயிர்களை அழித்து வந்தன. அவ்வேளையில் நெற்பயிர்களைப் பாதுகாக்கும் பாரியபணி நெற்செய்கையாளருக்கு ஏற்பட்டது. அப்பகுதியில் இயங்கிய விவசாயிகள், சம்மேளனங்கள் கட்டாக்காலியாக அலையும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச அதிகாரிகளிடமும் படை அதிகாரிகளிடமும் கேட்டுக் கொண்டனர்.

இந்த வேண்டுகோளை ஏற்று விவசாயத் திணைக்களத்தினர் அரசிடமிருந்தும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தம் உதவி கள் பெற்று நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களுக்குள் மாடுகள் வராதபடி முட்கம்பி வேலிகள் அமைத்துப் பயிர்களைப் பாதுகாத்தனர்.

'பசி வந்தால் பத்தும் பறக்கும்' என்பது மனித வாழ்க்கைக்கு மட்டுமல்ல. உயிர் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தும் என்ற வகையில் பசியினால் வாடும் மாடுகள் முட்கம்பிகளை அறுத்து நெற்பயிர்களை அழித்து சேதம் விளைவித்து வந்தன.

பொது மக்களின் பயிர்களை அழித்து வரும் கட்டாக்காலி மாடுகளை வளர்ப்பு மாடுகளாக்கி அதன் மூலம் பொதுமக்களின் பொருளாதார வசதிகளை அதிகரிக்க படைத்தரப்பினரால் பயன்தரு திட்டம் தயாரிக்கப்பட்டது. கட்டாக்காலியாக அமையும் மாடுகளின் எண்ணிக்கையை குறைக்க முதற்கட்டமாக 2 ஆயிரம் மாடுகளை பொது மக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பிரதேசத்தில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு மாடுகளை வழங்கும் திட்டம் கடந்த வாரம் தென்மராட்சி பிரதேச படை அதிகாரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இத்திட்டம் வெற்றியளித்து பிரதேசத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் மாடுகளை வளர்க்கும் பணியில் ஈடுபட ஊக்குவிப்போமாக!


உ

மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

## வட்டுக்கோட்டையில் அழகுக்கலை நிலையம்

அழகுக்கலை, கேக் ஐசிங் புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றது

ஆரம்பம்: நாளை (24.03.2008) திங்கட்கிழமை

நீங்கள் ஓர் அழகுக்கலை நிபுணராக வர விரும்புகிறீர்களா?

உங்கள் உடலை அழகாக வைத்திருக்க விரும்புகிறீர்களா

அவ்வாறாயின் ஸ்கந்தா கல்வி நிலையத்தின் அழகுக்கலைப் பிரிவில் பயிற்சியும், ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப்படுகின்றது.



கற்பிக்கப்படும் பயிற்சிகள்

* Facials * Hairstyle
* Bridal make up (Hindu, Christiant, Sinhalese)
*Hair Treatment *Hair Perming
*Hair Colouring * Waxing
*Threading


Cake Icing வகைகள்

அழகுக்கலை நிபுணர்:
திருமதி பேபிரோசா ஸ்கந்தகுமார்
S.ஸ்கந்தா கல்வி நிலையம்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை
(551934)



உ

## கௌரவிப்புவிழா அழைப்பு



நல்லூர் முருகன் சனசமூக நிலையம்

உயர்திரு.

**கந்தையா குமாரசுவாமி J.P.**

அவர்களின்
50 வருட சமூகப் பணியினை
பாராட்டி அவரின்
'அமுதவிழா' அன்று

"அபயகரம்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் விழா

| | |
|---|---|
| இடம்: | நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் |
| காலம்: | இன்று (23.03.2008) ஞாயிற்றுக்கிழமை 2.30 மணி |
| தலைமை: | நா.சோமசுந்தரம் (பிரபல வர்த்தகப் பிரமுகர் - யாழகம்) |
| வரவேற்புரை: | பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் ஜே.பி. |
| ஆசியுரைகள்: | நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்<br>உயர்திரு. கா.மயில்வாகனம் (கீதா விரிவுரையாளர்) |
| பாராட்டுரைகள்: | 1.திரு.ம.பிரதீபன் (திட்டப்பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலகம்)<br>2.திரு.மு.செ.சரவணபவ (ஆணையாளர், யாழ். மாநகரசபை)<br>3. செல்வி புஷ்பா செல்வநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)<br>4. திருமதி இராகினி இராமலிங்கம் (கிராமசேவையாளர் J/108) |
| வாழ்த்துரை: | செஞ்சொற்செல்வர்" ஆறு.திருமுருகன் (பிரதி அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி) |
| கௌரவிப்பு: | |
| நாட்டிய நிகழ்ச்சி : | நல்லை கலாமந்திர மாணவிகள் வழங்கும் நாட்டிய நிகழ்ச்சி |
| நட்டுவாங்கம் : | திருமதி அனுஷாந்தி சுகிர்தராஜ் |
| பாட்டு: | திருமதி சுகந்தி இரட்ணேஷ்வரன், திரு.பி.என்.சுதர்ஷன் |
| மிருதங்கம்: | திரு.எஸ்.துரைராஜா |
| வயலின்: | திரு.கே.பத்மநாதன் |
| நன்றியுரை: | அ.கோபாலகிருஷ்ணன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

75/2, செட்டித்தெரு,
நல்லூர்.
(72238)
நல்லூர் முருகன் சனசமூக நிலைய சமூகம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



மண்ணில்
20.10.1920
விண்ணில்
23.02.2008

கடந்த 23.02.2008 அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்
**ஆனந்தநடராஜா மகேஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (24.03.2008) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் தும்பளை, முத்துமாரி அம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீலர்வளவு, தும்பளை,
பருத்தித்துறை.
(சி/551930)
குடும்பத்தினர்.


## புலோலி, குடத்தனை நூலகங்களில் புத்தக தினம்

வடமராட்சி, மார்ச் 23

புலோலி, குடத்தனை பிரதேச பொது நூலகங்களில் அடுத்த மாதம்23 ஆம் திகதி புத்தக தினம்அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டிமேற்படி நூலகங்களுக்கு வாசகர்கள், நலன் விரும்பிகள் தம்மிடம் உள்ள நூல்களை அன்பளிப்புச் செய்யலாம் என பருத்தித்துறைப் பிரதேச செயலர் சி. பசுபதி தெரிவித்தார்.(202-236)


## மரண அறிவித்தல்

### பொன்னையா தியாகராஜா
(சாவகச்சேரி -கனடா)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் உஷா நிறுவன முகாமையாளரும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முகவருமான பொன்னையா தியாகராஜா 18.03.2008 செவ்வாய்க் கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா - திருமதி நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான குருசாமி, சிவகுரு ஆகியோரின் சகோதரரும் குணசீலன் (கனடா), ஞானசீலன் (கனடா), சுதா (லண்டன்), லதா (கனடா), கவிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவதாசன் (லண்டன்), ரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் கிஷோன் (கனடா), ஞானவர்மன் (கனடா), அபிநயா (லண்டன்), சாருகா (லண்டன்), நர்த்தகி (லண்டன்), ஜானுஜன் (கனடா), அவினேஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் பூபாலபிள்ளை (கனடா), துரைசிங்கம் (கனடா), மகேஸ்வரி (இலங்கை), சிவநாதன் (இலங்கை), இராசதுரை (இலங்கை), கோபாலகிருஷ்ணன் (ஜேர்மனி), தனபாலகிருஷ்ணன் (தனபால் - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.03.2008) சனிக் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
குணசீலன், ஞானசீலன் 0019059270197
ரவி - கவிதா 001 416 6241284
சிவா - சுதா 0044 208 9525361
துரைசிங்கம் 0019 058146840
தனபால் - 001905 7851754
(சி/551931)



## சேவைநலன் பாராட்டும், வரவேற்பும்

ஓய்வுபெற்ற கல்வயல்
கிராம அலுவலர்
**திரு.வை.இராசரத்தினம்**
அவர்களின் சேவைநலன்
பாராட்டும்,
புதிய கிராம அலுவலர்
**திரு.க.பரமானந்தம்**
அவர்களின் வரவேற்பும்
இன்று (23.03.2008)



ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.


விழாக் குழுவினரும்
கல்வயல் கிராம மக்களும்.
(சி/551932)


**மாயவன்**


## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

### ஆண்டு இரண்டு

தோற்றம்
01.11.1928
மறைவு
24.01.2006



அமரர் கந்தையா கனகரத்தினம்
(கனகசபை)
(யாழ்.குணரத்தினம் ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை ஸ்ரீமுருகன் மில்)
திதி: ஏகாதசி

பத்து மாதம் எமைச் சுமந்து
பத்திரமாய் எமை வளர்த்து
உலகிற்கு எமை தந்த
உயர் தெய்வம் அன்னை தானே?
உதிரத்தை பாலாக்கி
உணவாக எமக்களித்து
கண்முன்னே உலவிவந்த
கடவுள் தானே எம் அன்னை

### ஆண்டு ஒன்று

தோற்றம்
12.05.1942
மறைவு
04.04.2007



திருமதி செல்லம்மா கனகரத்தினம்
(குப்பிளான்)
திதி: துதியை (23.03.2008)

துன்பங்கள் அவளை வந்து
துளைத்தெடுத்த போதெல்லாம்
துவளாமல் எமை வளர்த்த
எம் அன்னை தெய்வம் தானே?
பெண் தெய்வம் அம்மா என்றால்
பெயரிட்டு எமை வளர்த்து
பெருமையோடு காத்து வந்த
ஆண் தெய்வம் அப்பா தானே?

கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
U.K., கனடா, சுவிஸ்.
(சி/551933)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை ஒரு நட்பு சக்தியாகவே புலிகள் இயக்கம் இப்போதும் கருதுகிறது


இந்திரா காந்தி

"அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாகத் தொய்ந்து போயுள்ள சிறிலங்கா அரசிற்கு முண்டுகொடுக்கும் இந்திய அரசின் செயலானது, ஈழத்தமிழ் மக்களைக் கோபத்துக்கு உள்ளாக்கியுள்ளது" - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் 10-02-2008 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களுக்கு எதிராக, சிறிலங்கா அரசுக்குத் துணையாக, இந்தியா மேற்கொள்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கையில் 'இந்திய அரசின் இத்தகைய செயற்பாடுகளால் புத்தூக்கம் பெற்றுள்ள சிங்களப் படைகள் மேற்கொள்ளப் போகும் தமிழின அழிப்பிற்கு, இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்' என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் இத்தகைய செயற்பாடுகளை, 'வரலாற்றுத் தவறு' என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா, தமிழீழம், சிறிலங்கா குறித்த சில வரலாற்றுத் தகவல்களை முன்வைத்துச் சில கருத்துகளைத் தர்க்கிப்பதானது பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவர் திருமதி சோனியா காந்தியின் அன்புக்குரிய மாமியார் திருமதி இந்திரா காந்தி தன்னுடைய ஆட்சிக்காலத்தில், தனது அரசின் ஊடாகத் தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கு ஆதரவையும், இராணுவப் பயிற்சிகளையும், உதவிகளையும் வழங்கி வந்தார் என்பது வெளிப்படையான ஓர் இரகசியமாகும்.


தலைவர் பிரபா

அத்துடன் அன்றைய சிறிலங்கா அரசு தமிழீழ மக்கள் மீது மேற்கொண்ட அரச பயங்கரவாத இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக, இந்திரா காந்தி அறிக்கைகளை வெளியிட்டு வந்ததோடு, சிறிலங்கா அரசு மீது, அரசியல் அழுத் தங்களையும் பிரயோகித்து வந்தார். இந்தியாவின் அன்றைய பிரதமரான இந்திரா காந்தியின் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாகத் தமிழீழ மக்கள் அவர்மீது மிகுந்த நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தார்கள்.

### மாற்றமடையாத இந்திய வெளிவிவகாரக் கொள்கை

அப்படியென்றால், ஈழத் தமிழ் மக்கள் பிரச்சினையில், அன்று இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில், இந்தியா கொண்டிருந்த வெளிவிவகாரக் கொள்கைக்கும், பின்னாளில் இந்தியா கொண்டிருக்கின்ற வெளிவிவகாரக் கொள்கைக்கும் வித்தியாசம் உள்ளதே என்ற கேள்வி எழுவது இயல்பானதாகும். ஆனால், கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால், இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படை நோக்கத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்ற உண்மை புலனாகும்.!

அன்றைய வேளையில், ஜே.ஆர், ஜெயவர்த்தனாவின் சிங்கள அரசு, தனது இந்திய எதிர்ப்புப் போக்கை வெளிப்படையாகக் கொண்டிருந்ததோடு மட்டும் அல்லாது பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற இந்திய நலன்களுக்கு எதிரான நாடுகளுடன் நெருங்கிய நட்புறவையும் கொண்டிருந்தது.

பிராந்திய வல்லரசான இந்திரா காந்தியின் அரசோ, அன்று, ஓர் உலக வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் யூனியனுடன் மிகுந்த நட்புறவைக் கொண்டிருந்தது. தனது நலன்களுக்கு எதிரான நாடுகளுடன் சிறிலங்கா அரசு நட்புறவைக் கொண்டிருந்த காரணத்தால், அந்த நாடுகளின் தலையீடும், செல்வாக்கும் இலங்கைத் தீவில் அதிகரித்து வருவதானது, தன்னுடைய பிராந்திய நலனுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்று அன்றைய இந்திய அரசு கருதியது. அந்தவேளையில் இலங்கை விவகாரத்தில், தன்னுடைய மூக்கை நுழைப்பதற்கு, இந்தியாவிற்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாக, ஈழத்தமிழர் பிரச்சினை விளங்கியது. அதனை முழுமையாகப் பயன்படுத்தும் முயற்சியில் இந்திரா காந்தி இறங்கித் தமது பிராந்திய மேலாண்மையை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

"ஈழத்தமிழர் போராட்டமானது, ஜே.ஆர். ஜெயவர்தனாவின் அரசிற்கு ஒரு தீராத தலையிடியாக உருவாகுவதன் மூலம், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு, இந்தியாவின் உதவியை நாடி வரவேண்டும்" என்றே இந்திரா காந்தி விரும்பினார். அதுவே உண்மையுமாகும். தவிரவும், திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட சில மாதங்களின் பின்பு, அவருடைய அரசியல் வாழ்க்கை குறித்து ஒரு நூல் வெளி வந்தது. அதனை எழுதியவர் இந்திரா காந்தியின் பிரத்தியேகச் செயலாளர் ஆவார். அவர் சிறிலங்கா அரசையும், தமிழர் பிரச்சினைகளையும், தமிழீழப் போராளிகள் இயக்கங்களைப் பற்றியும் இந்திரா காந்தி கொண்டிருந்த சிந்தனைகளை விபரித்து எழுதியிருந்தார். நாம் மேற்கூறியிருந்த விடயங்களை, அவர தனது நூலில் உறுதி செய்து எழுதியுள்ளார்.

### புலிகள் தொடர்பான இந்திராகாந்தியின் கணிப்பு

இங்கே இன்னுமொரு மிக முக்கியமான விடயம் ஒன்றை நாம் சுட்டிக்காட்ட விழைகின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்து, இந்திரா காந்தி கொண்டிருந்த கணிப்பையும் இவரது பிரத்தியேகச் செயலாளர் தன்னுடைய நூலில் அன்றே குறிப்பிட்டுள்ளார். "ஏனைய தமிழ்ப் போராளிக் குழுக்களையும் விட, தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் தனித்துவமாகவும், கொள்கைப் பிடிப்பு உடையவர்களாகவும், கட்டுக்கோப்பாகவும் உள்ளார்கள். எதிர்காலத்தில், இந்தியாவின் அழுத்தத்திற்கு, விடுதலைப் புலிகள் பணியமாட்டார்கள். ஏனென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம், தன்னுடைய இலட்சியத்தில் உறுதி கொண்ட ஓர் இயக்கமாக வளர்ந்து வருகின்றது. அவர்களின் வளர்ச்சியை நாம் தடுக்க வேண்டும். (**We will have to cut them to size**)" - என்று மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களை அவரது பிரத்தியேகச் செயலாளர் தனது நூலில் தெரிவித்துள்ளார்.

இங்கே இன்னுமொரு விடயத்தையும் நாம் சுட்டிக்காட்ட விழைகின்றோம். இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளை - குறிப்பாக இலங்கைத்தீவு சம்பந்தப்பட்ட கொள்கைகளை - ஒரு குறிப்பிட்ட அதிகாரக் குழுவினர்தான் தொடர்ந்தும் நிர்ணயித்து வருகின்றார்கள். இந்திய உளவுப் பிரிவின் 'றோ'வின், 'சவுத் புளொக்' என்று அறியப்படும் பகுதியினர், இலங்கைக்கான வெளிவிவகாரக் கொள்கைகளைத் தீர்மானிப்பவர்களில் தொடர்ந்தும் செல்வாக்காக இயங்கி வருகின்றார்கள். இவர்களுடைய முழுமையான செயற்பாடுகளை விபரிப்பதற்கு இது தளம் இல்லையென்றாலும், தம்முடைய வர்க்க நலன் கருதி, தமிழீழ மக்களின் நலனுக்கு எதிரான செயற்பாடுகளைத்தான் இவர்கள் தொடர்ந்தும் செய்து வருகின்றார்கள் என பதனை இங்கு பதிவு செய்து கொள்கின்றோம்.

### இந்தியாவுடன் நட்புக்கொள்ளவே புலிகள் விரும்புகின்றார்கள்

ஆனால், தமிழீழ மக்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள், இந்தியாவின் நலனுக்கு ஆதரவாகவே இருந்து வந்துள்ளார்கள். இந்தியாவுடனான உளப்பூர்வமான, ஆத்மார்த்தமான நட்புறவை நாடி, தன்னுடைய உள்ளக்கிடக்கையை, விருப்பத்தை, வேண்டுகோளை, விடுதலைப்புலிகளின் தலைமை தொடர்ந்தும் தெரிவித்தே வந்துள்ளது. இயக்கத்தின்மீது இந்தியாவின் அரசியல்- இராணுவ அழுத்தங்கள், செயற்பாடுகள் இருந்தபோதிலும் சரி, இந்த அரசியல் - இராணுவ அழுத்தங்களை எதிர்கொண்டு வெற்றி கொண்ட வேளைகளிலும் சரி, சிங்களப் பேரினவாத அரசுகள் மேற்கொண்ட போர்களில் இயக்கம் வெற்றி கொண்ட வேளைகளிலும் சரி, அரசியல் வெற்றிகளை அடைந்திட்ட வேளைகளிலும் சரி, புலிகளின் தலைமை, தனது உள்ளக் கிடக்கையை, இந்திய தேசத்தின் மீதான தன்னுடைய நட்புணர்வை வெளிப்படையாகவே காட்டி வந்துள்ளது. வரலாற்றிலிருந்து சில சம்பவங்களைச் சுட்டிக் காட்டுவது இவ்வேளையில் பொருத்தமானதாகும்.

தமிழ் மக்களின் ஒப்புதலைப் பெறாது, அவர்கள் மீது இலங்கை- இந்திய ஒப்பந்தம் திணிக்கப்பட்ட காலகட்டத்தில், அதாவது சுமார் 21 ஆண்டுகளுக்கு முன்பு, 1987 ஆம் ஆண்டு, சுதுமலையில் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின்போதும், இந்தியாவுடனான நட்புறவை வலியுறுத்திப் பேசியிருந்தார். 'இந்திய - இலங்கை ஒப்பந்தமானது, தமிழ் மக்களுக்கு உரிமை எதையும் பெற்றுத் தாரது' என்பதையும், 'இந்த ஒப்பந்தத்தைத் தாம் ஏற்கவில்லை' என்பதையும், 'இந்தியாவின் கேந்திரச் செல்வாக்கானது, தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தோடு உரசுகின்றது' என்பதையும் விளக்கிய தலைவர் பிரபா, இன்னுமொரு விடயத்தையும் அன்று வலியுறுத்தியிருந்தார். 'நாம் இந்தியாவை நேசிக்கின்றோம். இந்திய மக்களை நேசிக்கின்றோம். நாம் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர்' என்று தமது நிலைப்பாட்டைத பிரபாகரன் அன்றே தெளிவாகக் கூறியிருந்தார்.

தலைவர் பிரபாவின் அந்தக் கூற்று, நேர்மையானதாகவும், தெளிவாகவும் இருந்தது. அப்போதைய இந்திய அரசின் தெளிவற்ற சிந்தனையில் உருவாக்கப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை விமர்சித்த தலைவர், அதே வேளையில், இந்திய தேசத்தின் மீதான தம்முடைய நட்புறவையும் தெளிவுபடுத்தியிருந்தார். 'இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்திய நாட்டிற்கும், அதன் மக்களுக்கும், விடுதலைப் புலிகள் அடிப்படையில் எதிரானவர்கள் அல்லர்!'- என்ற திடமான, தெளிவான சிந்தனையை அன்றே தலைவர் பிரபா வெளிப்படுத்தியிருந்தார்.

அன்றைய இராஜதந்திரிகளினதும், இந்திய உளவுப் பிரிவினரதும், அன்றைய அரசியல்வாதிகளினதும், தவறான கணிப்புக்களாலும், செயல்களாலும், பின்னாளில் இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையே போர் மூண்டு கசப்புணர்வுகள் தோன்றினாலும், இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்திய நாட்டுக்கும், இந்திய மக்களுக்கும், அடிப்படையில் விடுதலைப் புலிகள் எதிரானவர்கள் அல்லர் என்ற எண்ணத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

## பேச்சுக்களில் அனுசரணையைப் புலிகள் நாடியபோதும் இந்திய அரசு அதனைப் புறந்தள்ளிவிட்டது

பின்னர் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் மகாநாட்டின் போதும், இந்தியவுடனான நட்புறவு குறித்து தலைவர் பிரபா மீண்டும் வலியுறுத்தியிருந்தார். 1987ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளுக்கு இருந்த இராணுவப் பலமும், அரசியல் பலமும் வேறாக இருந்தன. ஆனால் 2002ஆம் ஆண்டு சமாதான சூழ்நிலை ஏற்பட்டவேளையில், புலிகளுக்கு இருந்த இராணுவப் பலமும், அரசியல் பலமும் வேறாக, விஸ்வரூபம் எடுத்து இருந்தன. ஆனால், அந்த இரண்டு வித்தியாசமான காலப் பகுதிகளிலும், தலைவர் பிரபா, இந்தியாவின் நட்புறவு குறித்து ஒரே கருத்தைத்தான் கொண்டிருந்தார்.

### இந்தியாவின் அனுசரணையை நாடிய பாலசிங்கம்

பின்னர் சிறிலங்கா அரசுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிய போதும், இந்தியாவின் அனுசரணையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நாடி நின்றதை நாம் அனைவரும் அறிவோம். சமாதானப் பேச்சுவார்த்தைகளை, விடுதலைப் புலிகளின் சார்பில் முன்னின்று நடத்திய, 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம், அவ்வேளையில் இந்தியாவின் அனுசரணையைப் பல வழிகளில் நாடியது நாடறிந்த செய்தியாகும். துரதிர்ஷ்டவசமாக, இந்திய அரசு அன்றும் விடுதலைப் புலிகளின் நேசக்கரத்தைப் புறம் தள்ளியது.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும், இந்தியா மீதான தமது நட்புறவை வெளிப்படுத்தியே வந்துள்ளார்கள். 2003ஆம் ஆண்டும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான வே.பாலகுமாரன் தலைவர் பிரபாவின் இந்தக் கருத்துக்களை அடிக்கோடிடும் வகையில் உரையாற்றியிருந்தார். 'இந்தியாவின் பிராந்திய அரசியலில், எந்தவிதமான குழப்பத்தையும் கொண்டுவர நாங்கள் தயாராக இல்லை. எனவே இந்தியா, புலிகளை இராஜதந்திர ரீதியாக அணுகவேண்டும். நாங்கள் என்றைக்கும் இந்தியாவின் போக்குக்கு எதிராகச் செயற்பட விரும்பியதில்லை. எம்மோடு இந்தியா நேர்மையாக உறவு வைக்க முன்வந்தால், நாங்களும் இணக்கமாகச் செயற்படத் தயாராக இருக்கின்றோம். அவர்களாகவே உருவாக்கிக் கொண்டால் அன்றி, எம்மோடு மோதுவதற்கு இந்தியாவிற்கு எந்தக் காரணமும் கிடையாது...' என்று வே.பாலகுமாரன் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

அன்ரன் பாலசிங்கம் அவர்களும், மீண்டும் பல தடவைகள் இந்தியாவுடனான நட்புறவை வெளிப்படுத்தியிருந்ததோடு, இந்திய வெளியுறவில் மாற்றம் வரவேண்டும் என்றும் தெரிவித்து வந்திருக்கின்றார். அத்தோடு பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன், சமர் நூலாக்கப் பொறுப்பாளர் யோகி ஆகியோரும் இத்தகைய நட்புக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் தெரிவித்து வந்துள்ளார்கள்.

இந்திய அமைதி காக்கும் படையினருடனான போர் குறித்து, நாம் விருப்பு - வெறுப்பின்றிச் சிந்தித்துப் பார்த்தால், அதில் ஓர் அடிப்படை நியாயம் தமிழர் பக்கம் இருப்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். சுருக்கமாகக் கூறினால், ஈழத்தமிழர்கள் குறித்த ஆனால் ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாத ஒப்பந்தம் ஒன்றை, ஈழத்தமிழர்கள் மீது திணிக்க முயன்றபோது, தனது உரிமையையும் சுதந்திரத்தையும் காப்பாற்ற ஈழத் தமிழினம் போராடியது. இதனையே மறுவளமாகச் சிந்தித்துப் பார்ப்போம். இதேபோல், வேறு ஒரு வல்லரசு, இந்தியா குறித்த ஆனால் இந்திய மக்கள் சம்பந்தப்படாத, இந்தியாவின் பிரச்சனையைத் தீர்க்கமுடியாத ஒப்பந்தம் ஒன்றை இந்தியா மீது திணிக்க முனைந்திருந்தால் இந்தியா என்ன செய்திருக்கும்? இந்தியாவும், ஈழத் தமிழினம் போன்றே தன்னுடைய உரிமையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடியிருக்கும். இதில் இருக்கின்ற அடிப்படை நியாயம் ஒன்றுதான்! இதனைப் புரிந்துகொள்வதும் கடினமான ஒன்று அல்ல!


ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

### இந்தியாவின் கடற்பிராந்திய நலன் புலிகளால் பாதுகாக்கப்படுகிறது

இந்தியாவிற்கும், இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கும் ஆதரவாக இருப்பது ஈழத் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும்தான் என்கின்ற எமது கருத்தை நாம் மீண்டும் வலயுறுத்த விரும்புகின்றோம்.

இன்று தமிழீழத்திற்கு உரித்தான 'கடற்பரப்பின் பல பகுதிகள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதனால்தான், இன்று இந்தியாவின் கடற்பிராந்திய நலன், உண்மையான பாதுகாப்பு நிலையில் உள்ளது. மாறாக, இந்தக் கடற்பிராந்தியப் பகுதிகள், சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்குமேயானால், இந்தப் பகுதிகளுக்குள் இந்திய விரோத சக்திகள் குடிபுகுந்திருக்கும். இந்தப் பகுதிகளையெல்லாம் இந்தியாவிற்கு எதிரான நாடுகளிடம், சிறிலங்கா அரசு குத்தகைக்கும் விட்டிருக்கும்.

இந்தியாவிற்கான சார்பு நிலையில்தான் விடுதலைப் புலிகளும் ஈழ மக்களும் இருக்கக் கூடியவர்கள் என்ற யதார்த்த நிலையை அமெரிக்கா உணர்ந்து வைத்துள்ளது. திருகோணமலை போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி, சிங்களவர்கள் கையில் இருந்தால், அது தனக்குச் சாதகமானது என்றும், தேவைபட்டால், திருகோணமலையை, இந்தியாவிற்கு எதிராகவும் பயன்படுத்தலாம் என்றும், அமெரிக்கா எண்ணிச் செயல்பட்டு வருகின்றது. இதன அடிப்படையில்தான் கிழக்கு மாகாணத்தில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அடித்துத் துரத்தப்படுவதையும், அங்கே சிங்களப் பௌத்தக் கோவில்கள் கட்டப்படுவதையும் அமெரிக்கா வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வளவற்றையும் நன்கு தெரிந்து வைதத்துக் கொண்டிருக்கின்ற இந்தியாவோ, பூனை கண்ணை மூடிக்கொண்டு, உலகம் இருண்டு விட்டது என்பது போல், மௌனமாக இருந்து வருகின்றது.

ஆஸ்திரேலியாவிலிருந்து
சபேசன்

### இந்தியாவின் பூகோள நலன ஈழத் தமிழரோடு இணைந்தது

இந்தியாவின் பூகோள நலன் ஈழத் தமிழர்களோடு இணைந்த ஒன்றாகும். பண்டைக் காலத்திலிருந்தே, வரலாற்று ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, அரசியல் பொருளாதார ரீதியாக, ஈழத் தமிழினத்திற்கும், இந்தியாவிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளதை வரலாறு கூறும். அடிப்படையில் சிங்கள தேச மக்கள் இந்தியாவின் நலனுக்கு எதிரான எண்ணங்களைக் கொண்டிருக்கையில், தமிழ் மக்கள் இந்திய தேசத்தின் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருந்து வந்துள்ளார்கள். தவிரவும், சிறிலங்கா அரசுகளின் இந்திய விரோத மனப்பான்மை என்பதானது, ஒரு வெளிப்படையான விடயமுமாகும். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் பல விடயங்களைச் சுட்டிக்காட்டமுடியும். இந்திய-சீன யுத்தத்தின் போதும், இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தின் போதும், சிறிலங்கா அரசுகள் இந்தியாவின் நலனுக்கு எதிரான கோட்பாட்டையும், செயற்பாடுகளையும் கொண்டிருந்தன.

(15ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதகலில் புராதன கேணி சேதம்

மாதகல் மத்தியிலுள்ள புராதன கேணி பெரும் சேமடைந்துள்ளது. இதன் கட்டுகளில் பாரியவெடிப்புகள் உள்ளதல் அருகிலுள்ள வீதியால் சென்றுவரும் பாடசாலை மாணவர்களான சிறு பிள்ளைகள் மிகுந்த அவதானத்துடன் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த புராதன கேணியை விரைவில் புனரமைப்பு செய்துதருமாறு மாதகல் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கம் வலி.தென்மேற்கு பிரதேச செயலரைக் கடித மூலம் கேட்டுள்ளது. (202-135)




## பெண் நாய்களுக்குக் கருத்தடை நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

குடாநாட்டில் காணப்படும் நாய்களின் தொல்லையை குறைப்பதற்கு முன்னோடியாக கால் நடைத் திணைக்களத்தினால் பெண் நாய்களுக்கான கருத்தடைகளை மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உரிய வாகனம் இன்மை,கடற் கரைகளுக்கு செல்ல முடியாமை போன்ற பல காரணங்களினால் பல வருடங்களாக கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்தன.

தற்போது மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் நாய்களைக் கொல்லாது தடைசெய்துள்ளதுடன் ஆண், பெண் நாய்களுக்கு கருத்தடை மேற் கோள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் கீழ் ஆண், பெண் நாய்களுக்கு சத்திர சிகிச்சை மூலம் கருத்தடை மேற்கொள்ளப்பட்டது.தற்போது நாய்களுக்கான கருத்தடை ஊசிகளும் குடாநாட்டு சுகாதார திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத் துவதன் மூலம் பெண நாய்களுக்கான கருத்தடை ஊசிகளை போட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-68)

### வாடகைக்கு

பிரதான வீதி, பாதுகாவலன் கட்டடத்தில் கடைகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு: முகாமையாளர்

*360,பிரதான வீதி,*

*யாழ்ப்பாணம்.*

*தொ.பே.: 021 222 2378* (72265)

### கன்றுகள் விற்பனைக்கு

தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளைக் கன்றுகள் மற்றும் வான்கோழி விற்பனைக்குண்டு.

சிற்றாடெல், கோப்பாய்.

தொ.பே. 021 222 300 (72248)

### மணமகள் தே

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 27, நடசத்திரம் பூசம், கனடா பிரஜா உரிமையுடைய மணமகனுக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை.

தொடர்பு: 060 221 9004

க.மூர்த்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (72248)

### விற்பனைக்கு

ரெலிபோன் வூத் விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.சிவபாதசுந்தரமூர்த்தி,

55, சீனியர் லேன்,

யாழ்ப்பாணம். (72250)

### தவறிவிட்டது

க.சக்திதாசன் என்னும் பெயருடைய சாரதி அனுமதிப் பத்திரம், யதகுலசிங்கம் என்னும் பெயருடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய பையொன்று திருநெல்வேலிக்கும், மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கயிலாசப்பிள்ளை சக்திதாசன், கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் அல்லது 0775927342 தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (72245)

### விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய கறுப்பு, வெள்ளை பொமேரியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

ச.குலேந்திரன்,

171, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம். (72272)

### திருத்தி வாசிக்குக

நேற்றைய உதயன் பத்திரிகையில் 8ஆம் பக்கத்தில் வெளியான மூன்றாம் ஆண்டு நினைவலைகள் என்னும் விளம்பரத்தில் அமரர் க.சந்திரலிங்கம் என்னும் பெயர் அமரர் க.சுந்தரலிங்கம் எனத் தவறாக அச்சாகி விட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்

திரு. தி.சிவநேசராசா

அவர்களின் அன்புத்தாய்

திருமதி

**அன்னம்மா தியாகராஜா**

அவர்கள் சிவபதமெய்தியதையிட்டு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

யா/ இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமசாமி இராசம்மா



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் சரசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி இராசம்மா 21.03.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளைய தம்பி பரமசாமி (இளைப்பாறிய இ.போ.ச நடத்துனர்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வராசா (இளைப்பாறியபரிசாரகர்யாழ்.போதனா வைத்தியசாலை), யோகராசா (குறிஞ்சி ரேடர்ஸ், யாழ்ப்பாணம்), செல்வராணி ஜெயராசா (சுவிஸ்), இந்திராணி (லண்டன்), காலஞ்சென்ற சிவராணி ஆகியோரின் அன்புத் தாயும் சிவபாக்கியம் (ஆசிரியர், சரஸ்வதி வித்தியாலயம் சரசாலை), மாலினி, சுந்தரலிங்கம், சந்திரகுமாரி (சுவிஸ்), பாக்கியநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாயும் திருமதி சுகர்ணன் - ஜனனி (லண்டன்), ரூபினி (கனடா), மயூரி (லண்டன்), காயத்திரி (கனடா), வினுயா, ரம்மியா, திருமதி சாந்தீபன் - நிலோஜினி (நிமா), கபில்ராஜ் (லண்டன்), சரண்யா (யா/டிறிபேர்க் கல்லூரி மாணவி), ஆர்த்தி (சுவிஸ்), சந்துரு (சுவிஸ்), சரோன்ராஜ் (லண்டன்), சஞ்சய்ராஜ் (லண்டன்), அபிநயா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சியாம் (லண்டன்), ஹரிஸ் (லண்டன்), நிஷானி, கேசினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 21.03.2008 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, கொம்பிகுள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சரசாலை வடக்கு,*


*சாவகச்சேரி.*

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்

தாயின் மடியில் 18 . 01 . 1935

ஆண்டவன் அடியில் 17 . 11 . 2006



அமரர் சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம்

தாயின் மடியில் 25 . 12 . 1940

ஆண்டவன் அடியில் 05 . 04 . 2007



திருமதி ஜெயபூபதி குலசிங்கம்

மண்ணிலே எங்களை மலரவிட்ட தெய்வங்களே!
விண்ணிலே நின்று எமக்கு வழிகாட்டும் தீபங்களே!
எண்ணிலா மனங்களிலே உறைந்துவிட்ட கல்விச் செல்வங்களே!
என்றென்றும் உங்கள் நினைவில் வாழும் நெஞ்சங்கள் நாம்!

*906/23, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

மக்கள், மருமக்கள், பேரன்.

(72261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வடக்கு, கிழக்கிற்கான மருந்தே இப்போது தென்னிலங்கைக்கும்

சிறுபான்மையினரை அடக்கி ஆள்வதற்கு தனது இராணுவ வலிமையை - படைப் பலத்தை - நம்பியிருந்த கொழும்பு அரசுக்கு நாட்டில் தனது முழு அதிகாரத்தையும் நிலைநாட்டுவதற்கும் கூட அதிலேயே தங்கியிருக்கவேண்டிய இக்கட்டு நிலை ஒரேயடியாக வந்துவிட்டது.

ஆட்சியில் இருப்பதற்கான அரசியல் அதிகார வறுமையில் சிக்கி நிற்கும் மஹிந்த அரசு, அரசியல் செல்வாக்கை வரித்துக் கொள்வதிலிருந்து ஊழல் நிறைந்த - சீர்கெட்ட - முறையற்ற தனது ஆட்சியின் சீத்துவத்தைத் தென்னிலங்கைக்கு மூடி மறைப்பது வரை அனைத்துக்குமே படைப்பல அதிகாரத்தில் தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழர் உரிமைக்காகப் போராடும் சக்திகளை இரும்புக்கரம் கொண்டு, அடக்கும் சாதனையைப் புரிவதாகத் தென்னிலங்கை பௌத்த - சிங்கள பேரினவாத சக்திகளுக்குக் காட்டிக் கொண்டு அந்தப் போக்கில் தனது அதிகாரத்தைச் சிக்கலின்றிக் கொண்டு நடத்தலாம் என்று எண்ணிய மஹிந்த அரசு, அதற்காகத் தனது முழுப் படைப் பல வலிமையையும் தமிழர் தாயகத்தின் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. அவசரகாலச் சட்டத்தின் கீழான மோசமான கெடுபிடிகள் உட்பட பல்வேறு அதிகாரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு தமிழர் தாயகத்தின் மீது கொழும்பு அரசு தொடுத்த இந்தக் கொடூரப் போரை தென்னிலங்கை மகிழ்வுடன் வரவேற்று இதுவரை காலமும் பார்த்திருந்தது.

ஆனால் இப்போது தமிழர் தாயகத்துக்கு மட்டுமல்ல தென்னிலங்கையையும் கையாளத் தன்னிடம் உள்ள ஒரே மார்க்கம் அந்தப் படைப் பல வலிமையும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கெடுபிடி அதிகாரங்களும்தான் என்பதை மஹிந்தரின் அரசு வெளிப்படுத்த முனையும்போதுதான் தென்னிலங்கை மெல்ல முழித்துக்கொண்டு முணுமுணுக்கத் தொடங்கியிருக்கின்றது.

'தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படகெனப் புடைக்குமாம்!' - என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு. தமிழர் தாயத்துக்கென்றபோது தள்ளி நின்று கைகொட்டிப் பார்த்துச் சிரித்த தென்னிலங்கை இப்போது தனக்கும் அதே கதி என்றவுடன் சீறுகின்றது.

இலங்கையில் ஒரு மாவட்டத்தின் அரச அதிபர் என்ற பதவி முக்கியமானது, உயர் தரத்தில் உள்ள சிவில் அதிகாரி ஒருவர் அலங்கரிக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் அது.

தமிழர் தாயகமான கிழக்கிலங்கையை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கபளீகரம் செய்வதைத் தனது அரசியல் தந்திரோபாயத் திட்டமாகக் கலங்காலமாக கடைப்பிடித்து வந்த இலங்கையின் அரசுகள், அதிலும் அங்கு மிக முக்கிய பிர தேசமான திருகோணமலையை முழு பௌத்த சிங்கள ஆதிக்க வலுவுள்ள மாவட்டமாக்குவதில் முழு முனைப்பும் தீவிரமும் கொண்டு நின்றன; நிற்கின்றன.

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலையை நிர்வகிக்கும் அரச அதிபர் பதவிக்கு இதற்காக ஒரு சிங்களவரே எப்போதும் நியமிக்கப்பட்டு வந்தார்.

திருகோணமலையிலிருந்து தமிழர்களை விரட்டியடித்து அதை முழு சிங்களப் பிரதேசமாக்கும் தென்னிலங்கைக் கனவை முழு அளவில் செயற்படுத்துவதற்காக அதுவரை சிங்கள சிவில் அதிகாரிகள் நிர்வகித்த திருகோணமலையின் அரச அதிபர் பொறுப்பை, ஓய்வுபெற்ற சிங்கள இராணுவ அதிகாரியிடம் கையளித்து, அங்கு சிவில் நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்தியது கொழும்பு.

தமிழர் தாயகத்தை சிங்கள மயப்படுத்தும் தனது சதித்திட்டத்தை மேலும் முனைப்புப் பெறச் செய்வதற்காக அரச அதிபர் பதவிக்கு மேல், மாகாண ஆளுநர் பதவிக்கும் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை நியமித்து ஏறத்தாழ தமிழர் தாயகத்தின் முழு நிர்வாகக் கட்டமைப்பையும் இராணுவப் பிடிக்குள் கொண்டு வந்தது தென்னிலங்கை ஆட்சி அதிகாரம்.

இவ்வாறு சிவில் நிர்வாகம் அரசின் படைப் பலக் கட்டமைப்புக்குள் சிக்கி இராணுவமயப்படுத்தப்பட்டபோது அதில் அடக்கப்படுபவர்கள் தமிழர்கள்தானே என்ற சிந்தனையில் அதைப் பார்த்து வாளாவிருந்தது தென்னிலங்கை. அல்லது மனதுக்குள் எண்ணிச் சிரித்து மௌனமாக இருந்தது அது.

ஆனால் அப்போது தமிழரைக் கையாண்ட அதே மருந்துதான் இப்போது தென்னிலங்கையையும் கையாள மஹிந்தரின் அரசு பயன்படுத்துகிறது என்று புரியும்போது சீறிச் சினந்து பொறுக்கமுடியாமல் பாய்கிறது தென்னிலங்கை.

இந்த ஆட்சி நிர்வாகம் சீர்கெட்டுப் போனதால் ஊழலும் மோசடியும் வன்முறைகளும் பெருகிவிட்டன. தவறான ஆட்சி முறையாலும் புத்திசாதுரியமேயற்ற பொருளாதாரக் கொள்கைகளாலும் நாட்டின் பொருளாதாரம் படுத்துவிட்டது. விலைவாசி உயர்வும் பணவீக்கமும் வேலைவாய்ப்பின்மையும் வறுமையும் பட்டினியும் நாட்டை ஆட்டிப்படைத்திருக்கின்றன. அடுத்த வேளை வயிற்றுப்பாட்டுக்கு என்ன கதி என்று தெரியாத நிலையில் குடும்பங்கள் நடுவீதிக்கு வந்துவிட்டன.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் அரசுக்கு எதிராகப் பெருகிவிட்ட அதிருப்தியை 'புலிகளை அழிக்கும் போரில் பெருவெற்றி' என்ற ஒரே மாயையை - பூச்சாண்டியை - காட்டிச் சமாளிக்க முற்படுகின்றது கொழும்பு. ஆனாலும் அதையும் மீறி தென்னிலங்கையில் மக்களின் மனவெழுச்சி பொங்கும் ஏதுநிலை தென்படுகின்றது.

இதை முளையிலே கிள்ளுவதற்கு - அல்லது மூடிமறைப்பதற்கு - திட்டமிடும் அரசு அதற்காக மக்களுக்கு உண்மைகளை எடுத்தியம்பக்கூடிய ஊடகங்களின் குரல் வளையை நசித்துக் கட்டுப்படுத்த முழு வீச்சில் முயல்கிறது. அதன் பேறாகக் கட்டவிழும் ஊடக அடக்குமுறையை இன்று தென்னிலங்கையும் காணுகிறது; பார்த்து விக்கித்து நிற்கிறது.

அதன் உச்சக்கட்டமாக அரச தொலைக்காட்சி ஊடகமான ரூபவாஹினியின் வழிநடத்தல் அதிகாரம் ஒரு மேஜர் ஜெனரலிடம் கைமாறியிருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் மாவட்ட அரச அதிபர் போன்ற சிவில் நிர்வாகப் பதவியும் தேர்தெடுக்கப்பட்ட மாகாண சபை இல்லாத இடத்தில் அந்த மகாணத்தையே நிர்வகிக்கும் சிவில் அதிகாரம் கொண்ட ஆளுநர் பதவி போன்றவையும் இராணுவ அதிகாரிகளின் கைகளுக்கு மாறியபோது அதைப் பார்த்து வாளாவிருந்த தென்னிலங்கை, இப்போது அரச ஊடகத்தை வழிநடத்தும் அதிகாரமும் அதே வழியில் இராணுவ மயப்படுத்தப்படும்போது - தானும் இராணுவ அடக்குமுறைக் கெடுபிடிக்குள்தான் இனிமேல் சிக்கவேண்டியிருக்கும் என்ற யதார்த்தம் புரியும்போது - இப்போது சீறிச் சினந்து பாய்கிறது.

தனக்குத் தனக்கென வரும்போதுதான் விவகாரங்கள் விளங்கும் என்று சும்மாவா கூறிவைத்தார்கள்...?

# வன்னிசெல்ல நோர்வேயை அனுமதிக்க முடியாது ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடிதம் மூலம் அறிவிப்பு

## வெளிவிவகார அமைச்சுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்23

சமாதான முயற்சிகளின் அனுசரணையாளரான நோர்வே மற்றும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் வன்னி சென்று விடுதலைப்புலிகளுடன் பேச அனுமதிக்க வேண்டும் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கை இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிகார அமைச்சின் செயலாளர் பாலித ஹொகன்ன தெரிவித்தார்.

கடந்தவாரம் இலங்கை வந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நாடு திரும்ப முன்னர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க வசதியாக அனுசரணையாளரான நோர்வே மற்றும் இணைத் தலைமை நாடுகள் வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஹொகன்ன தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கையை ஏற்கமுடியாது. இது தொடர்பாக அவர்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற காலங்களில் புலிகள் இராணுவ ரீதியில் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர். அத்துடன் இராணுவ ரீதியில் பலமடைந்ததன் பின்னர் சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகி மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளிலேயே ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் போது தீர்வு எட்டப்படாத நிலையில் பேச்சுவார்த்தைகள் முறிவடைவதற்கு புலிகளே காரணமாக இருந்தனர் என்பதை சர்வதேச சமூகத்தினரின் கவனத் திற்கு பல தடவைகள் கொண்டுவந்திருக்கிறோம். இந்நிலையில் புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயார் படுத்துவதற்கான நடவடிக்கை எவ்வளவு தூரம் சாத்தியமானதாக இருக்க முடியும் என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து வெளிவிவகார அமைச்சினூடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஒன்றியத்தின் கோரிக்கை ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்றாக இல்லை என்பதையும் அக்கடிதத்தின் மூலமாகவே சுட்டிக்காட்டியுள்ளோம் - என்றார். (1-202)

# 3,100 கோடி ரூபாவுக்கு இம்முறை உரம் இறக்குமதி

கொழும்பு,மார்ச்23

இந்த வருடத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை இறக்குமதி செய்வதற்கு சுமார் 3,100 கோடி ரூபா செலவிடப்படும் என விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் செயலாளர் ரி.எம்.அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

உரத்தை இறக்குமதி செய்வதற்கு அரசு ஆரம்பத்தில் 1800 கோடி ரூபாவை மாத்திரமே செலவிட உத்தேசித்திருந்தது. ஆனால், உலக சந்தையில் உரத்தின் விலை துரிதமாக அதிகரித்து வருவதால் இதற்கான நிதியை அதிகரிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையைக் கருத்தில்கொண்டு சேதனப் பசளையைப் பிரபல்யப் படுத்தும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 50 கோடி ரூபா வரை ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சி)

# சுழிபுரம் பிரதேசத்தில் நிழல் தரும் மரங்கள்

சுழிபுரம், மார்ச்23

சுழிபுரம் பிரதேசத்தில் சிறுவர் பாடசாலை நடைபெறும் இடங்களில் நிழல் தரும் மரக்கன்றுகளை நடும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர் நடத்தும் பண்ணாகம் கிராம முற்னேற்றச் சங்க வளவில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (202-28)

# ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் தூதரக உயர் அதிகாரியாகிறார்

கொழும்பு,மார்ச்23

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் சந்திரபால லியனகே அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு இத்தாலிக்கான இலங்கைத் தூதுரகத்தில் உயர் பதவி ஒன்றைப் பெறவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தப் புதிய பதவியை வகிப்பார் என்று கூறப்படுகிறது.

சந்திரபால லியனகேயின் வெற்றிடத்திற்கு சான் விஜேசிங்க அல்லது வசந்தப்பிரிய ராமணநாயக்க நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

தற்போது, சந்திரபால லியனகே, மஹிந்த இலப்பெரும, நியூடன் குணரத்ன, சுதத்சில்வா மற்றும் லூசியன் ராஜகருணா ஆகியோர் ஜனாதிபதி ஊடப் பிரிவின் பணிப்பாளர்களாகக் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை ஒரு நட்பு....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய - சீனா யுத்தத்தின் போது, இலங்கைத் தமிழ் மக்கள், இந்திய அரசுக்கு அனுப்புவதற்காக நிதி சேகரிப்பை நடத்தி, அவ்வாறு சேகரித்த நிதியை, இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கையளித்தார்கள். ஆனால் அந்த நிதியை, இந்தியாவிற்கு அனுப்பவிடாமல் சிறிலங்கா அரசு தடைசெய்துவிட்டது. ஒருகால கட்டத்தில் இந்தியத் திரைப்படங்கள், சஞ்சிகைகள், போன்றவற்றின் இறக்குமதியையும் சிறிலங்கா அரசு மட்டுப்படுத்தியிருந்ததையும் நாம் அறிவோம். சிறிலங்காவின் பொருளாதார நலன் குறித்த அக்கறையையும் விட, தமிழ் - இந்திய வெறுப்பு மனப்பான்மைதான் சிங்கள அரசுகளிடம் மேலோங்கி இருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த உடனேயே, இந்திய வம்சா வழித் தமிழர்களை, இந்தியாவிற்கு அனுப்பிவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வரலாற்றின் அவமானகரமான அடையாளங்களாகும்!

"ஜே.ஆர் ஜெயவர்த்தனா வெறுப்பது இந்தியாவை மட்டுமல்ல, இந்திராவையும் கூடத தான்!" - என்று மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி (தனிப்பட்ட உரையாடலின்போது) தெரிவித்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

### ஒன்றுக்கும் உதவாத இலங்கை - இந்திய ஒப்பந்தம்

சிறிலங்கா அரசும், இந்திய அரசும் கைச்சாத்திட்ட அந்த ஒன்றுக்கும் உதவாத ஒப்பந்தத்தையே இன்று சிறிலங்கா அரசு தூக்கி எறிந்துவிட்டது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறைகள் பற்றியும், நிறைவற்ற தன்மை பற்றியும், இவற்றைக் கூட சிறிலங்கா நிறை வேற்ற மாட்டாது என்பதையும், விடுதலைப் புலிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆனால் இந்தியா, சிறிலங்கா அரசை நம்பியது. நம்பிய இந்திய அரசுக்கு நாமம் போட்டுவிட்டது சிறிலங்கா அரசு.

தங்களுடைய கடந்த காலச் செயற்பாடுகள் மூலம் சிறிலங்கா இந்தியாவிற்குச் சில செய்திகளைச் சொல்லியுள்ளது. இந்தியா இவைகுறித்து இனியாவது தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

### இந்தியாவிற்கு, சிறிலங்கா சொல்லும் செய்திகள்

எமது நடவடிக்கைகள், தமிழர்களுக்கு எதிரானது என்பதற்கு அப்பால், இந்தியாவிற்கு எதிரான, இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு எதிரான எமது நிலைப்பாட்டின் நடவடிக்கை களேயாகும்.

நீங்கள் (இந்தியா) நல்ல நோக்கம் என்று நினைத்துக் கொண்டு வருகின்றவற்றை, நாங்கள் ஏதாவது ஒரு வகையில் முறியடித்தே தீருவோம்.

உங்களுடைய பிராந்திய நலனுக்கு எதிராக நாம் செயல்படுவோம்.

இந்தியா ஊடாகத் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றால், இந்தியாவிற்கு எதிராகச் சிறிலங்கா இயல்பாகவே திரும்பும் என்பதுதான் அடிப்படையான விடயமாகும்.

இவ்வாறான செய்திகளை சிறிலங்கா அரசு, இந்தியாவிற்குக் கொடுத்துக் கொண்டிருக்கையில், விடுதலைப் புலிகள், பல்வேறு சமயங்களிலும், தொடர்ந்தும் என்ன விதமான செய்திகளை இந்தியாவிற்குத் தெரிவித்து வருகின்றார்கள் என்பதைப் பார்ப்போம்.

### புலிகள் இந்தியாவுக்குச் சொல்லும் செய்திகள்

விடுதலைப் புலிகள் இந்தியாவிற்குச் சொல்லும் செய்திகளும், நிலைப்பாடுகளும்:-

இந்தியாவின் பிராந்திய மேலாண்மைக்குப் பங்கம் விளைவிக்க, விடுதலைப் புலிகள் விரும்பவில்லை.

இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்திய நாட்டிற்கும், இந்திய மக்களுக்கும் விடுதலைப் புலிகள் எதிரானவர்கள் அல்லர்.

இந்தியாவின் தேசிய நலன்களுக்கு, விடுதலைப் புலிகள் தடையாக இருக்கப்போவதில்லை.

இந்தியாவின் புவியியல், கேந்திர நலன்களுக்கு எதிராக, விடுதலைப் புலிகள் செயற்படுபவர்கள் அல்லர்.

இந்தியாவின் பொருளாதார நலன்களுக்குப் பங்கம் ஏற்படுத்த விடுதலைப் புலிகள் விரும்பவில்லை.

மாறாகத் விடுதலைப் புலிகள் விரும்புவதும், நாடி நிற்பதுவும்தான் என்ன?

விடுதலைப் புலிகள் இந்தியாவை நேசிக்கின்றார்கள். இந்திய மக்களை நேசிக்கின்றார்கள். இந்தியாவுடன் உண்மையான நல்லுறவைப் பேணவே, விடுதலைப் புலிகள் விரும்புகின்றார்கள்.

இந்தியாவை ஒரு நட்புச் சக்தியாகவே, ஒரு நேசசக்தியாகவே விடுதலைப் புலிகள் கருதுகின்றார்கள்.

இந்தியாவுடன் நட்புறவுடன் இணங்கிச் செயற்பட விடுதலைப் புலிகள் மனபூர்வமாக விரும்புகின்றார்கள்.

தமிழ் மக்களின் உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும், வேட்கைகளையும் இந்தியா புரிந்து கொண்டு எமக்கு நீதியான ஆதரவைத் தரவேண்டும்.

இப்போதைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு செய்தியை இந்தியாவிற்கு சொல்லயிருக்கின்றார்கள். 'ஈழத் தமிழர்களுக்கு எதிரான, இந்திய நலன்களுக்கு எதிரான, சிங்களச் சிறிலங்கா அரசின் தமிழின அழிப்புக்குத் துணை போகின்ற வரலாற்றுத் தவறை இந்தியா செய்யக் கூடாது' என்று விடுதலைப் புலிகள் இப்போது தெரிவித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளினதும், மக்களினதும், இந்த நேர்மையான உணர்வுகளை அறிந்து கொண்டு அவர்களது நியாயமான வேண்டு கோள்களை இந்தியா ஏற்கவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. அதற்குரிய செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும். இன்று இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகள் யாவும் (சிறிலங்கா உட்பட) இந்தியாவிற்கு எதிராகவே, இந்தியாவின் நலன்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருவதை இந்தியா அறியும்! எதிர்காலத் தமிழீழத் தனியரசு ஒன்றுதான் இந்தியாவின் மிக நெருங்கிய நேச நாடாக விளங்க முடியும் என்பதுவும் இந்தியா அறியாதது அல்ல!

சிந்திக்க வேண்டும் இந்தியா! நீதியின்பால், நியாயத்தின்பால் செயற்படவும் வேண்டும்!

★

## நாளை

| | |
|---|---|
| பங்குனி - 11 | 24.03.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: திருதியை | பி.இ. 04.20வரை |
| நட்சத்திரம் : | சித்திரை |
| | மு.ப. 8.26வரை |
| சுபநேரம் : | 12.15 - 01.45 |
| ராகுகாலம்: | 07.45-09.15 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் தனித்துப் போட்டியிடுமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு அழுத்தம்

கொழும்பு,மார்ச்23

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேராமல் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தை அதன் அமைப்பாளர்கள் கோரியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைப்பாளர்களில் 90 சதவீதமானோர் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஐ.தே.கட்சியுடனோ, அல்லது அரசாங்கக் கட்சியுடனோ வேறு எந்தகட்சியுடனுனோ கூட்டுச்சேராமல் தனித்துப் போட்டியிடவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தேர்தல் முடிவடைந்தபின்னர் ஆட்சி அமைக்கும் கட்சியுடன் இணைந்து செயற்படலாம் என்றும் அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது அல்லது வேறு கட்சி எதனுடனும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதா என்பது குறித்து எதிர்வரும் 26 ஆம் திகதி இறுதி முடிவு செய்யப்படும் என்று கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (அ-1)

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் விசாரணைகளை நடத்தி பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-1-86)

## இராணுவத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலியில் தளபதியை யாழ்.மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி வரவேற்றார்.

குடநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் படையினரின் சேமநலன்கள் குறித்து அவர் தளபதிக்கு விளக்கமளித்தார்.

படைப்பிரிவுகளின் தளபதிகள், பிரிக்கேட், பிரிவுகளின் தளபதிகள் ஆகியோருடன் இராணுவத் தளபதி கலந்துரையாடி கள நிலைவரங்களை கேட்டறிந்தார்.

அதன் பின்னர் போர்முனைகளில் மேற்கொள்ளவேண்டிய கள நடவடிக்கைகள் குறித்து மேலதிக ஆலோசனைகளை இராணுவத் தளபதி வழங்கினார் - என்றுள்ளது. (அ-1)

## நாயாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் சென்ற கடற்படையினரில் 14 பேர் கொல்லப்பட்டனர். டோறா மூழ்கடிக்கப்பட்ட இத்தாக்குதலில் 3 கரும்புலிகள் வீரச்சாவைத் தழுவினர்.

அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முல்லைத்தீவு நாயாறு கடல் வலயத்தில் இலங்கைக் கடற்படையின் அதிவேக டோறா தாக்குதல் பீரங்கிப் படகொன்று வெடிவிபத்துக்குள்ளாகி உள்ளது. இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.10 மணி அளவில் இடம்பெற்றுள்ளது. உள்ளூர் தயாரிப்பான பி438 எனப் பெயரிடப்பட்ட இந்த அதிவேக தாக்குதல் பீராங்கிப்படகு 16 கடற்படையினருடன் நாயாறு கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் கடல்கண்ணியாலோ அல்லது கடலுக்கு அடியில் பாவிக்கப்படும் வேறு ஆயுதங்களாலோ தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கலாம். டோறாவில் பயணித்தவர்களில் ஓர் அதிகாரி உட்பட அறுவர் மீட்கப்பட்டுள்ளனர். ஏனையோரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிகள் நாயாறு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிதக்கும் கண்ணிவெடியினால் மோதப்பட்டே டோறாப்படகு மூழ்கியதாக படை அதிகாரி ஒருவரை மேற்கொள்காட்டி ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது. (அ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகளின் தளம் மீது நேற்று முற் பகல் 11.15 மணிக்கு ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

மீண்டும் புதுக்குடியிருப்புக்கு வட மேற்கே அமைந்திருந்த கடற்புலிகளின் இணைப்பு நிலையம் மீது பிற்பகல் 2.10 மணியளவில் ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இலக்குகளை இனங்கண்டு அவை அழிக்கப்பட்டன என விமானிகள் உறுதி செய்துள்ளனர்- என்று ஊடகநிலையம் தெரிவித்தது. (1)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு எதிராக விடுதலைப் புலிகள் செறிவான எறிகணைத் தாக்குதலுடன் முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர்.

நேற்று மாலை 5 மணிவரை தொடர்ச்சியாக நடைபெற்ற தாக்குதலில் படையினரின் முன்னகர்வு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதில் 55 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். 120 இற்கும் அதிக படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர், பின்தளங்களில் இருந்து ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.


இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று அதிகாலை 4.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பல முனைத் தாக்குதலில் 22இற்கும் மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டனர். அவர்கள் தரப்பில் ஆகக் குறைந்தது 26 பேர் காயமடைந்தனர்.

நேற்றைய கடும் தாக்குதல்களின் பலனாக விடுதலைப் புலிகளின் எட்டுப் பதுங்கு குழிகள் படையினரிடம் வீழ்ந்தன. அத் தோடு குறிப்பிடத்தக்க பரப்பளவு புலிகளின் பிரதேசமும் கைப்பற்றப்பட்டன.

கடும் சமரைத் தொடர்ந்து பறையகுளத்துக்கும் கறுக்காய்க்குளத்திற்கும் இடையில் ஒரு சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைத் தாம் கைப்பற்றிவிட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கைப்பற்றிய பி[illegible]தசங்களில் படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்கள் மேலும் கண்டு பிடிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது - என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-2)


324, Palaly Road, Jaffna.
MCS
BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான பதிவுகள் ஆரம்பம்
O/L தகைமை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்
2nd, 4th and 6th Semesters Commence on
23rd March at 09.00 a.m.
Supported by UNDP/JRRP

மானிப்பாயில்...........
100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
26/03/2008ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

கணக்காய்வு அத்தியட்சகர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை
விசேட கருத்தரங்கு
★ கணக்கீடு
★ கிரயக் கணக்கீடு
★ வணிகக் கணிதம்
செவ்வாய், புதன், வியாழன்
காலை 11.30 முதல்
மாலை 5 மணி வரை
DMI
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு

அரச, தனியார் ஊழியர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது
1.8GHz Intel Pentium Dual Core (3 Years) AsRock Board (Conroe-1333) (2 Years)
1GB DDR-II Kingston Ram (3 Years) 80GB SATA HDD (Maxtor) (3 Years)
15" View Sonic Monitor (3 Years) ATX Cabinet (MS 06/05) (1 Year)
SONY DVD Writer (1 Year) Optical Mouse
PS/2 Key Board
44,400/=

பாடசாலை மாணவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது
1.6 GHz Intel Celeron Dual core (3 Years) AsRock Board (Conroe-1333) (2 Years)
1GB DDR-II Kingston Ram (3 Years) 80GB SATA HDD (Maxtor) (3 Years)
15" View Sonic Monitor (3 Years) ATX Cabinet (MS 06/05) (1 Year)
PS/2 Key Board Optical Mouse
36,700/=

கணினி விற்பன்னர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது
1.8 GHz Intel Pentium Dual Core (3 Years) ASUS Board (P5GC-MX-1333) (3 Years)
1GB DDR-II Kingston Ram (3 Years) 160GB SATA HDD (Samsung)
15" View Sonic Monitor (3 Years) ATX Cabinet (MS 01/02/03/04) (1 Year)
SONY DVD Writer (1 Year) UPS Power tree (1 Year)
PS/2 Key Board Optical Mouse
53,100/=

How to protect yourself against Fraud?
நீங்கள் புதிதாக கணினியை வாங்கும்போது கவனமாயிருங்கள்!பின்வரும் வழிகளில் ஏதாவது ஒன்றை பின்பற்றி புரோசசர் அளவு Brand மற்றும் RAM இனது அளவுகள் அனைத்தினையும் கண்டறிந்து கொள்ளுங்கள்
1) கணினியின் மைகொம்யூட்டரில் வலது கிளிக் செய்து பெறும் மெனுவில் Properties என்பதை கிளிக்செய்தால் பெறும் விண்டோவில் உங்களின் கணினியின் விபரங்கள் காணப்படும்
2) Start பட்டனை கிளிக்செய்து Run இல் dxdiag என ரைப்செய்து Ok செய்யுங்கள் முழுவிபரங்களும் வரும்
3) Strat-> Run-> cmd சென்று systeminfo என்று தட்டச்சு செய்து "என்டர்" செய்யவும்.
4) Start பட்டனை கிளிக்செய்து Run இல் msinfo32 என ரைப்செய்து Ok செய்யுங்கள் முழுவிபரங்களும் வரும்.
வாங்கும் போது நீங்கள் கேட்டவைகள் பொருந்தப்பட்டிருப்பதை உறுதிசெய்யுங்கள்

JAFFNA — MARSHA SYSTEMS (PVT) LTD, # 74, Kannathiddy Junction, Jaffna. T.P:- 0212229418, 0777667106
NELLIADY — TEKNEL COMPUTERS & TECHNOLOGY, 364/364, Kodikamam Road, Nelliady. T.P:- 0777069934
CHAVAKACHCHERI — SCOT COMPUTER CENTRE, Katkuly 1st Lane, Post Office Road, Chavakachcheri. T.P:- 0776701394

கேபிள் தொலைக்காட்சி இணையாளர்களுக்கு ஓர் அன்பான உரிமையான வேண்டுகோள்

தமிழன் தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஞாயிறு தோறும் இரவு 11.00 மணிக்கு டாக்டர் பஸ்லுர் ரஹ்மான் (M.B.B.S, M.D (ACU)) அவர்களினால் வாரந்தோறும் வழங்கப்படுகின்ற மிகவும் சக்தி வாய்ந்ததும், பாரிய நன்மையை விளைவிக்கப் போகின்றதுமான மருத்துவ நிகழ்ச்சியை உங்கள் இணைப்பினூடாக மக்களிற்கு வழங்கி அதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், சகலதுறை மருத்துவ விரிவுரையாளர்கள், சகலதுறை டாக்டர் ள், அத்துடன் பொதுமக்கள் எல்லோரும் அறியாமையிலிருந்து விடுதலையடைந்து பாரிய விழிப்புணர்வு ஏற்பட வழி வகுத்ததில் பங்காளிகளாகுங்கள். இந்த இணைப்பை நீங்கள் வழங்குவதன் மூலம் சமுதாயத்திற்கு மகத்தான சேவை செய்தவர்களாவீர்கள். நிச்சயம் இறைவன் உங் களை ஆசீர்வதிப்பார். ஒன்று மட்டும் உண்மை இந்த நிகழ்ச்சியைப் பார்க்கத் தீர்மானிப்பவர்களுக்கு மிகப்பெரிய ஆச்சரியம் காத்திருக்கிறது. பொதுமக்களாகிய நீங்கள் உங்கள் இணைப்பாளர்களை அணுகி இணைப்பை வழங்கும்படி வலியுறுத்துங்கள். இன்றைய நிகழ்ச்சியில் (23.03.2008) "நோய் எதிர்ப்பு சக்தி" என்றால் என்ன, நோய் எதிர்ப்பு சக்தி பற்றிய முழுமையான விவரம் இடம்பெறும்.
Dr. K.Raguram
Urumpirai North, Urumpirai
(72268)

தமிழ், ஆங்கில ரைப்பிங், ஆய்வுக் கட்டுரைகள், வர்ண வடிவமைப்பில் பிறந்த நாள் வாழ்த்து மடல்கள், திருமண அழைப்பிதழ்கள், சகல அழைப்பிதழ்கள், வாழ்த்துபாக்கள், விளம்பர பெயர் பலகைகள், ஸ்கானிங் என்பன தரமான முறையில் விரைந்து பெற்றுக்கொள்ளலாம்.
அச்சகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கு விஷேட சலுகைகள் உண்டு.
Sun Printers
66/2, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Internet சேவை
Internet Browsing சேவையைப் பெற்றுக் கொள்ளவும்
முகம் பார்த்துக் கதைப்பதற்கேற்ற வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்புகளைப் பெற்றுக் கொள்ளவும்.
திருமுருகன் கொம்நெற்
259, K.K.S. றோட், யாழ்ப்பாணம்
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.


## மரண அறிவித்தல்



### தர்மராஜா ரகுபதி(பதி)

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராஜா ரகுபதி நேற்று (22.03.2008) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் திரு.திருமதி தர்மராஜா-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும். சாந்தியின் அன்புக்கணவரும் மயூரன், சங்கீதா, மாதுரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று(23.03.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(a)


KOKUVIL HINDU COLLEGE
JHC vs KHC BATTLE OF THE HINDUS
JAFFNA HINDU COLLEGE
OFFICIAL MEDIA SPONSOR: உதயன் @ Kokuvil Hindu College grounds 29th & 30th of March 2008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.